# அவரி

காலாண்டு சஞ்சிகை

3



வெளியீடு

Sri lanka Pen Club




## அவரி சஞ்சிகை குழு

நிர்வாக ஆசிரியர் :

**சம்மாந்துறை மஷூறா**

சஞ்சிகையாசிரியர் :

(3வது இதழ் தொகுப்பு)

**லைலா அக்ஷியா** (மொரட்டுவ)

திருத்தங்கள், கணினி வடிவமைப்பு :

**வஃபீரா வஃபி** (கொழும்பு)

**ஸஹ்லா மில்பர்** (மக்கொன)

**என்.எம். ஆரிபா** (ஏறாவூர்)

செயற்பாட்டாளர்கள் :

**ஷாமென் நிஸாம்டீன்** (கட்டுகஸ்தோட்ட)

**எம்.பி.பர்ஸானா** (நிந்தவூர்)

**றிப்கா அன்சார்** (சாய்ந்தமருது)

**ஜெஸீமா முஜீப்** (மருதமுனை)

## இதழின் உள்ளே


**கட்டுரைகள் / பத்தி :-**

1. சம்மாந்துறை மஷுறா
2. ஹாஜரா கலீலுர் ரஹ்மான்
3. அக்கீலா பானு
4. வஃபிரா வஃபி
5. Dr. ஜலீலா
6. மஹ்மூதா ஏ. ரஹ்மான்
7. லைலா அக்ஷியா
8. எஸ்.யூ கமர்ஜான் பீபி
9. இறக்காமம் பர்ஸானா
10. ஜெஸ்மின் ரமீஸ்
11. றிஃப்கா அன்சார்

**கவிதைகள் :-**

1. மரீனா இல்யாஸ்
2. றொஷானா எம்.ஸியா
3. மக்கொனையூராள்
4. ஏரூர் ஜிப்ரியா
5. ஹுமைரா அல் அமீன்
6. ஷாமென் நிஸாம்டீன்
7. பர்ஸானா எம்.பி
8. றிப்கா நிந்தவூர்
9. றமீனா ஐயூப்
10. ஷர்ஜிலா யாக்கூப்

**சிறுகதைகள் :-**

1. அஜீரா கலீல் தீன்
2. புத்தளம் சதீக்கா
3. எம்.எஸ் றஸ்மியா
4. லரீபா பதுர்தீன்
5. காத்தான்குடி றுஷ்தா

**நேர்காணல் :-**

1. பாத்திமா ரினூஸியா (இல.ஒலி.கூட்)
2. முஹம்மது ரிபாத்.

**சிறுவர் கதைகள் :-**

1. என். எம் ஆரிபா
2. ஜெஸீமா முஜீப்

**சிந்தனை துளிகள் :-**

ரிபாஸ் ரிஸ்லா

**தோழிக்கு ஒரு மடல்:-**

ஹுமதா ஏ கப்பார்

**நகைச்சுவை :-**

ஸஹ்லா மில்பர்

**சமையல் :-**

மர்ளியா சக்காப்

**சித்திரம் :-**

ஹக்கீமா & ஹுமைரா

மற்றும் பல...



# நிர்வாக ஆசிரியர் உரை

எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் புகழ்ந்தவளாய் அவரி மூன்றாவது முகையின் அவிழ்தல்,மனதிற்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகிறது. srilanka pen club இன் வியாபிக்கப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில், "அவரி" சஞ்சிகையும் ஒன்று. எமது அமைப்பின் முஸ்லீம் பெண் எழுத்தாளர்களின் ஆற்றல்களுக்குக் களம் அமைக்கும் ஒரு அங்கமான அவரியின், மூன்றாவது இதழின் ஆசிரியராக, ஊடகவியலாளர் லைலா அக்ஷியா செயற்பட்டிருக்கிறார். அவருக்குக் கொடுக்கப்படுகிற பொறுப்பை, சிரம் சுமந்து, செவ்வனே காத்திரமாக, செய்திருக்கிறார் என்பதில் அகமகிழ்வெய்துகிறேன். தான் பொறுப்பேற்கும் எந்தவொரு பணியையும், கடமையுணர்வோடு நேசித்துச் செய்கிறவர் தான் லைலா அக்ஷியா. லைலா அக்ஷியாவை மனதாரப் பாராட்டுகிறேன்.

பரிச்சயமில்லாத புது முயற்சியாயிருந்தாலும் அவரி குழுவினர் திறம்பட செயலாற்றியுள்ளனர். இனி வருங்காலங்களில் அவரி இன்னுமின்னும் புதுப்பொலிவு பெறும் என்பது திண்ணம். அவரி சஞ்சிகைக் குழுவின் நிர்வாகி தொடக்கம், படைப்பாளிகள் வரை, அனைத்து செயற்பாட்டாளர்களும் Sri Lanka pen club உறுப்பினர்களே.

அவரி சஞ்சிகை, ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. அடுத்த இதழில் இன்னொரு ஆசிரியரோடு சந்திப்போம். அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

சம்மாந்துறை மஷூறா.
நிர்வாக ஆசிரியர்.

# சஞ்சிகை ஆசிரியர் உரை

அன்பிற்கினிய வாசகர்களே,

அவரி மூன்றாம் இதழ் வெளியீடு அங்கைகளில் மட்டுமல்ல உங்கள் அகங்களையும் ஆர்ப்பரிக்கும் பூமஞ்சரி. அனுபவம் என்பது கடினத்தோடான ஒரு அன்புள்ள குரு. முதலாவதாக ஒரு பரீட்சையையும், அடுத்ததாக ஒரு பாடத்தையும் அது கற்றுத் தரும்.

ஒரு நூலுக்காக என்னை தயார் படுத்திக் கொண்டிருந்த சமயம் Srilanka Pen Club அமைப்பினால் வெளிவரக்கூடிய காலாண்டு சஞ்சிகைக்கான பொறுப்பு, அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளராக இருக்கும் எனக்கு ஸ்தாபகத் தலைவி சம்மாந்துறை மஷூறா அவர்களால் இம்முறை வழங்கப்பட்டது.

எதையும் முயற்சித்துப் பார்க்க வேண்டுமென்ற இதயத்தில் இருக்கும் தைரியமும், நம்பிக்கையும் தான் இந்த சஞ்சிகையின் வெளியீட்டுக்கு என்னை தூக்கி விட்ட ஒரேயொரு கை. அடுத்தபடியாக இந்தக் குழுவில் வழங்கிய அனைவரது ஒத்துழைப்பும், எனது இந்த தைரியத்துக்குத் துணையிருந்தது. இறைவனுக்கே நன்றிகள்.

பெற்ற ஆக்கங்களை குறை களைந்து, தரம் பிரித்த போது எழுத்துக்களில் இருந்த ஒவ்வொருவரினது ஆர்வமும் புரிந்தது. உயர் மட்டத்தில் எதையும் ஒப்பிட்டு பார்த்து தரமற்றது என்று தூக்கிப் போடுவதென்பது இந்த இடத்தில் நான் ஒரு முறையாக கையாளவில்லை. அனைவருக்குள்ளிருந்தும் ஒரு 'ஆரம்பம்' முளை விடவும், வளரவும் வாய்ப்பளிக்கும் போது மட்டும்தான் அது விருட்சமாகவும், வியாபித்தும் வளர்வதற்கும் எதிர்காலத்தில் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றதென்பதனை புரிந்து செயல்பட்டேன்.

எமது ஆற்றலுள்ள பெண்களின் ஒவ்வொரு திறமையும் அது வித்தாக, செடியாக, ஆரம்பித்து மரமாக, விருட்சமாக வளர்ந்து சமூகத்திற்கு பயனளிக்க வேண்டும். அதற்காக இந்த சஞ்சிகையை நான் சரியாகவே உபயோகப்படுத்தினேன் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

பெண்களின் திறமைகள் காலத்தின் தேவை என்றுணர்ந்து அவற்றை ஏற்றி வைக்கும் ஏதோ ஒரு ஏணிப்படியாக நானும், நீங்களும் இருப்பதில் நிச்சயமாக ஒரு சமூகமே ஒளிர்கிறது!

அவரி நீளவேண்டும். ஆற்றல்கள் வாழ வேண்டும். குறைவானாலும், நிறைவானாலும் உங்கள் பெறுமதிமிக்க வார்த்தைகளால், ஆலோசனைகளால் எம்மை பட்டை தீட்டுங்கள். தீட்டிக்கொண்டே இருங்கள்.நேசத்தோடு நன்றிகள்.

இதழாசிரியர்
**கலைக்குரல் லைலா அக்ஷியா.**






# வாழ்த்துரை

பெண் ஆளுமைகளை அரவணைத்து அவர்களின் ஆற்றல்களை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தி அழகு பார்க்கும் “pen club” க்கும் அதன் ஸ்தாபகர் **மஷூறா சுஹுர்தீன்** அவர்களுக்கும் முதல் வரியிலேயே வாழ்த்துச் சொல்வதை என் கடமையாகக் கருதுகிறேன்.

பெண் என்ற சொல்லுக்கான பொதுவான வரையறையைத் தகர்த்தெறியும் அற்புதங்கள் இன்று பெண்களால் உலகில் நிகழ்ந்து கொண்டிருக்கிறன. வீட்டுக்குள் பொத்தி வைத்து அழகு பார்த்த பெண்கள் விண்வெளி வரை சென்று சாதனை படைக்கிறார்கள். தாய்மை எனும் புனிதத்தை உள்ளத்தில் சுமந்தவர்களாக தரணியில் தன் ஆற்றல்களைத் தினமும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதையே “பென் கிளப்”பும் அதன் மூலம் வெளிவரும் “அவரி” காலாண்டு சஞ்சிகையும் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. “அவரி”யின் பக்கங்கள் ஒரு சஞ்சிகைக்குத் தேவையான அத்தனை அம்சங்களையும் தெளிவான எழுத்துக்களில் அழகான வடிவமைப்பில் மின்னிதழாக்கி வாசகர்களை வாசிக்கத் தூண்டுகிறது. ஆற்றலுள்ள பெண் ஆளுமைகளின் தரமான ஆக்கங்களைத் தொகுத்து சிறப்பாக இதழாக்கித் தந்த சஞ்சிகை ஆசிரியர் **லைலா அக்ஷியா** மற்றும் ஆசிரியர் குழுவின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் புழக்கத்தில் அதிகம் பேசப்படாத ஒரு சொல்லான “**அவரி**” க்கு உயிர் கொடுத்திருப்பது என்னை மிகவும் கவர்ந்தது. அதைத் தெரிவு செய்த நிர்வாக ஆசிரியர் **மஷூறா சுஹுர்தீனை** தமிழை நேசிப்பவர்களின் சார்பாக வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

“அவரி” சஞ்சிகை தமிழ் பேசும் உலகில் வாசகர்களின் உளம்கவர்ந்த சஞ்சிகையாக வலம் வர எனது பிரார்த்தனைகள்.

**திரு பஹ்மி ஹலீம்தீன்** (JP)

தேசமான்ய,,தேச கீர்த்தி.
கவிஞர், எழுத்தாளர்
தமிழ் மன்ற நிர்வாகி (கல்ஹின்ன)

# 'பத்தி' எழுதுவோம்

## தொகுப்பு 8 அக்ஷியா

**பத்தி என்ற சொல் அண்மைக் காலங்களில் அடிக்கடி உபயோகிக்கப்படுவதாக இருந்தாலும் இதற்கென்று வரலாறு உண்டு. 1920 களிலேயே இதன் வரலாறு தொடங்குகின்றது. பத்தி என்பதன் விளக்கம் என்னவென்று பார்ப்போம்.**


An article on a particular subject or by a particular writer that appears regularly in a newspaper or magazine.

அதாவது ஒரு குறிப்பிட்ட பொருள் சார்ந்து அல்லது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளரால் செய்தித்தாள் அல்லது பத்திரிகையில் தொடர்ந்து எழுதப்படும் எழுத்து. அந்த வகையில் யோசிக்கும்போது பத்தி எழுத்து என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கணத்துக்குள் இல்லாமல் free form போலத் தோன்றினாலும் ஒரு எளிமையான Formula பத்திகளுக்கு உண்டு.

இன்று இணையத்தளத்தில் Blog,Facebook போன்றவற்றில் எழுதப்படுகின்ற எழுத்துக்களை கூட பத்தி எழுத்துக்களாகவே அடையாளம் காட்டுகிறார்கள். பத்தி எழுத்தாக தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் பத்திகள் உண்டு என்ற நிலைக்கு இப்பொழுது முன்னேறி உள்ளது.

- பத்தி எழுதும் போது கவனிக்கப்பட வேண்டியவை:
- 
- தனித்தன்மை. பொருத்தமான சொற்களை பயன்படுத்துவது. தனித்தன்மையான வாக்கிய அமைப்புகளை உருவாக்குவது. உங்கள் எழுத்துக்களை மற்றவர்களிடம் இருந்து தனியாக தெரியும் படி அமைத்துக் கொள்ளுங்கள்.
- பத்திகள் கட்டுரையைப் போலவே ஒரு ஆரம்பம், ஒரு உடல் பகுதி ,மற்றும் ஒரு முடிவுரை என்று மூன்று விதமாக பார்க்கக் கூடியதாக இருக்கும்.
- பத்திகளின் தன்னிலை வாக்கியங்கள் குறைவாக இருக்க வேண்டும். அடிக்கடி எழுதப்படக் கூடாது. அப்படி எழுதினால் அது சுய அனுபவக் கட்டுரைகள் என்ற வகைக்குள் வந்துவிடும்.
- ஒரு நிகழ்வில் ஏதேனும் ஒரு சார்பு நிலையில் இருந்து எழுதப்பட வேண்டும். பத்தி என்பதன் இலக்கணம் இதுதான்.
- ஒரு நிகழ்வின் ஏதேனும் ஒரு தரப்பை தேர்ந்தெடுத்து எழுதுதல் அவசியம் .
- தம்முடைய தரப்பில் கவனம் செலுத்த வேண்டும்.
- அதே சமயம் எதிர் தரப்பினர் வைக்கக் கூடிய வாதங்கள் குறித்தும் யோசிக்க வேண்டும். ஒப்பீடுகளோடு கருத்தை விளக்குவது எளிதில் புரிய வைக்கும் .
- எழுத்தில் எப்போதும் சுய அனுபவம் சேர்வதும் விடயங்களுக்கு உள்ளூர் விடயங்களும் சேர்வதும் பத்திகளை சுவாரசியமாக்கும்.
- உங்கள் கருத்தில் அழுத்தம் திருத்தமாக இருக்க வேண்டும். மேம்போக்கான கருத்துக்களை தவிர்க்க வேண்டும்.

நன்றி : இணையம்



# சிந்தனைத்துளிகள்

ரிபாஸ் ரிஸ்லா

- உனது ஆயுள் ஒரு நாள் தான்.எனவே,உனது வாழ்க்கையை இன்றைய நாளில் அமைத்துக் கொள்.
- தொழுகைக்கு நேரம் ஒதுக்கு, அது உலகிலேயே மிகப் பெரிய சக்தியாகும்.
- இறை நம்பிக்கையும், நற்செயலும் உனது வாழ்வில் உண்மையான, சிறந்த மகிழ்ச்சியை உருவாக்கும்.
- சோதனைகள் உன்னைச் செதுக்கும்.உன் இதயத்தை வலுப்படுத்தும்.
- உயிரோட்டம் ; நன்னடத்தை யின் எரிபொருள்.
- நன்மையின் குளிர்ச்சியால் தீமையின் வெப்பத்தை நீ தணித்துக்கொள்.
- வாழ்க்கையில் மிகவும் இழக்க கூடாத பெரும் பொக்கிஷமே தாய், தந்தை. இவர்களை அரவணைத்து வாழ்ந்து பார் வாழ்க்கை மட்டில்லா பரக்கத் பெறும்.



# அழகு

## அகத்தின் குறியீடு

சம்மாந்துறை மஷூறா

அழகு என்றால் என்ன? இனிமையானதா? கவர்ச்சியானதா? கிளர்ச்சி தருவதா? இல்லை மன அமைதி தருவதா? எது மன அமைதியைத் தருகிறதோ அதுதான் “அழகு”என்பேன் நான்.

சினிமா நாயகிகளை ,கனவுக் கன்னிகளாக ஆள்கிறார்களே நம் அருந்தவப் புதல்வர்கள்!அழகு என்பதாலா? இல்லை. அவர்களது கவர்ச்சி தரும் கிளர்ச்சிக்காகத்தான். அனைத்து பிள்ளைகளுக்கும் அவர்களது தாய் அழகுதானே? மூப்பெய்தி,உடல் தளர்ந்து,கண்கள் ஒளியிழந்தாலும் கூட. அப்படி யானால் அழகென்பது மனச்சாந்தி தருவதொன்றுதானே!

வெண் நுரை பொங்கும் அலைக் கரங்களால், நம்மையழைக்கும் கடல் பெண்கூட அழகல்லவா? அவள் தரும் மன அமைதிக்காக, மகிழ்ச்சிக்காகதானே நேரம் வாய்க்கும் போதெல்லாம் அவள் மடியில் கிடக்கிறோம். ஆக,அழகுணர்ச்சியென்பது, அகத்தை சாந்தப்படுத்தி ஆள்வதே.

“அவள் அப்படியொன்றும் அழகில்லை. ஆனால் அவளுக்கு யாரும் நிகரில்லை.” என்ற சினிமா பாடல் வரிகள் ஞாபகத்தில் வருகிறது. அழ கென்பது நிகரில்லாததுதானே! அழகென்பது அகத்தின் குறியீடுதான். ஒரு பெண்ணிடம் உடல் பலத்தையும், ஆணிடம் நளினத்தையும் ஏற்று ரசிக்க முடியுமா?அதது அந்தந்த இடத்தில் பொருந்த வேண்டுமே? வெள்ளைத் தோலில்தான் அழகிருக்கிறதா? அப்படித்தான் நம் நவீன யுகபுத்திரிகள் கருதுகின்றனர். மாபெரும் வீரத்திருமகன் ஜூலியஸ் ஸீஸர், எகிப்தின் எழிலரசி கிளியோபாட்ராவின் அழகில், அவள் காலடியில் வீழ்ந்து கிடந்தானே!அவளது வெள்ளைத் தோலிலா?அவள் கறுப்பியல்லவா!

லைலா மஜ்னூன் காவியத்தில் இளங்கறுப்பி லைலாவில் காதல் பூண்டு மஜ்னூன் (பைத்தியம்) ஆனானே கயஸ்! அவள் வெள்ளைத் தோலிலா? அழகிற்கு நிறம் பொருட்டில்லை. கண்ட கிரீம்களை வாரியள்ளிப்பூசி, தோலை வெள்ளையாக்கும் போலி யழகிகளுக்கு,“அழகு”என்பது தெரியாது. கிரீம்களால் வரும் தோல்வெண்மை அழகா? உரித்துக் கழுவிய இறால்போல,பொலிவற்றிருக்கும் முகம் காட்டித் தருகிறதே, இது இயற்கையல்லவென்று! இயற்கை யழகின் ஆயுளைத் தீர்த்துக் கட்டும், மாதன முத்தாக்கள் இவர்கள். அழகு என்பது அகத்தின் குறியீடுதான். ஒருமனிதனுக்கு ஆளுமையும் அழகுதான். நல்லொழுக்கமும் அழகுதான். இறுக்கிப் பிதுக்கி உடைகளை அணிவது பெண்களுக்கு அழகா? இல்லவே இல்லை. அது கவர்ச்சி. எதிர்ப்பாலினரின் அகத்தை கிளர்ச்சியடையச் செய்வதெல்லாம், கவர்ச்சியேதான் அழகில்லை. கிளர்ச்சி உள்ளத்தை தீமையின்பால் நகர்த்துகிறது. அழகு மனதை அமைதிப்படுத்துகிறது.

அடர்ந்து வளர்ந்த காட்டில் வெயில் அழகு. வெம்மை தீய்க்கும் நகரில், மழை அழகு. ஆகவே, ஒரே விடயம் இடத்திற்கிடம் அழகாயும் அவலட்சணமாயும் திரிபடைகிறது. எல்லாம் மனத்தின் தேவைதான். மனத்தின் தேவை என்பதென்ன?மகிழ்ச்சியும் அமைதியும்தானே? அழகை ஆராதிப்போம். அக அமைதியை வசமாக்குவோம்.

---

- காற்றாலை மின்சாரப் பூங்கா அண்மையில் திறந்து வைக்கப்பட்ட மாவட்டம் : மன்னார்
- 67 உச்ச மாநாடு இறுதியாக இடம்பெற்ற நாடு : இங்கிலாந்து
- 2021 ஜுன் மாதம் ஒரே சூலில் 10 குழந்தைகளை ஈன்றெடுத்த பெண்மணி எந் நாட்டை சேர்ந்தவர் : தென்னாப்பிரிக்கா
- 2021 ஆம் ஆண்டு இலங்கையில் கொண்டாடப்பட்ட மகளிர் தின கருப்பொருள் : அவள் ஒரு நாடு. அவள் ஒரு தேசம். அவள் ஒரு உலகம்.
- 2021 ல் ஒலிம்பிக் போட்டியிலிருந்து வெளியேறிய நாடு : வடகொரியா
- உலகில் 95 ம் வயதில் பிரதமராக பதவியேற்றவர் : மஹதீர் முகமட் (மலேசியா)
- நாலந்த கெடிகே சிலை மண்டபம் எந்தப் பணிக்காக குறித்த இடத்திலிருந்து அகற்றப்பட்டது : மகாவலி கங்கை பணிக்காக




## Enough for me these

Enough food to keep me alive
Decent wears to keep my pride
A peaceful sleep when I'm drained
A dignified life to walk upright
Is enough to keep me satisfied...!

A millionnair's dream ever
I've  dreamt it never
Except for a goodnight  sleep
My hands are raised for others...!

Allying with Phillantherapists out there
Poor and needy I'd care
Enough alone is the peace of mind
Nothing more  I felt inclined ....!

Beyond this,
A pen to write
Good books to read
Nice memories to cherish
A life partner so precious ...
Enough to complete my life
In the interim world of this kind..!

**Translated by : Mareena Illiyas shafee**
**poem : sammanthurai Mashoora**

## இவை போதுமெனக்கு

பசிக்கு உண்ண போதுமான உணவு.
உடுத்துக் கொள்ள;
அவசியமான ஆடைகள்.
சமூகத்தில்,
தலை நிமிர்ந்து நடமாட,
தேவையான அந்தஸ்து.
படுக்கையில் விழுந்ததும்,
மெய்மறந்து அயரும் தூக்கம்,
அது போதுமெனக்கு.

கோடீஸ்வரியாகும் கனவுகள்,
கொஞ்சமும் இருந்ததில்லை.
சுகமான தூக்கத்தைத் தவிர,
இறைவனிடம் கேட்டதெல்லாம்,
அடுத்தவர்க்கானதுதான்.

வாழ்வாதாரப் பிடிமானமின்றி,
மகிழ்ச்சியிழந்து,
தவிக்கும் ஏதிலிகளை,
வள்ளல்களிடம்கைகாட்டி விட்டு,
உபகாரம் செய்விக்கும்,
உளத்திருப்தியொன்றே போதும்.

அதற்கப்பால் இலக்கியத்துடனான,
இடையறாப் பயணம்,
ஓய்வினைக்கழிக்க ஒரு பேனா,
வாசிக்க நல்ல புத்தகங்கள்,
கொறிக்க,
கடந்தகால ஞாபகங்கள்,
உள்ளவரை கூடவே வரும் துணை,
என் வாழ்வைப் பூரணப்படுத்த,
இவை போதுமெனக்கு,
நிரந்தரமற்ற இவ்வுலகில்.

**சம்மாந்துறை மஷூறா**

- பிரஷர் குக்கரை உபயோகப்படுத்தாத நேரங்களில் மூடி வைக்கக் கூடாது.
- வயிற்றுப் போக்கை உடனடியாக நிறுத்த கொய்யா இலைகளை மென்று தின்றால் போதுமானது.
- வீட்டில் Refrigerator இல்லையா? கவலை வேண்டாம்! காய்கறிகள் மீது ஈரத்துணியை போட்டு மூடி வையுங்கள். வாடாமல்  இருக்கும்




# வீட்டு வன்முறை

அவரிக்காக:
சட்டத்தரணி நூருஸ் ஷப்னா நஜ்முல் ஹுஸைன்.



குடும்பப் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் கேடயமாக விளங்கும் 'குடும்ப வன்முறை செயல் தடுப்புச் சட்டம்'

குடும்ப வன்முறையை பற்றிய ஒரு தெளிவான விழிப்புணர்வு இன்னும் எம் சமுதாயத்தில் இல்லை என்றே சொல்ல வேண்டும். குடும்ப வன்முறை என்பது வெறுமனே கணவன் மனைவியை துன்புறுத்துவது, குடிகாரக் கணவன் மனைவியை அடிப்பது மட்டுமே என்று பல பேர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் குடும்ப வன்முறை என்பது, உடல் ரீதியாக துன்புறுத்துவது மட்டுமின்றி உளரீதியாக துன்புறுத்துவதும் அதில் உள்ளடங்கும். தண்டனை சட்டத்தின் கீழ் மனித உடலுக்கு எதிரான குற்றங்களான அச்சுறுத்தல்,வலுக்கட்டாயமாகஅழைத்துச்செல்லுதல், காயப்படுத்துதல், கடுமையான உடல் ரீதியான காயங்கள் ஏற்படுத்துதல், வீட்டுக்குள் சிறை வைத்தல், பலாத்காரம் செய்தல், பாலியல் வன்கொடுமை, துஷ்பிரயோகம் போன்ற குற்றங்களுடன் இன்னும் பல குற்றங்களும் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் உடல் ரீதியான சித்திரவதைகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் கீழ், உளரீதியான துன்புறுத்தல் என்பது ஆக்ரோஷமான முறையில் வசை பாடுதல், கீழ்த்தரமான முறையில் அவமானப்படுத்துதல் போன்றவை அடங்கும். மற்றும் குடும்ப வன்முறை என்பது கணவன் மனைவிக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டது அல்ல.

மாறாக சிறுவர்களும் இந்த குடும்ப வன்முறை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பினை பெற்றுக்கொள்ள முடியும். இச்சட்டத்தின் கீழ்

- முன்னைய வாழ்க்கைத் துணை
- தந்தை ,தாய் ,பாட்டனார் ,பாட்டி
- மாற்றாந் தந்தை, மாற்றாந்தாய்,
- மகன், மகள், பேரன், பேத்தி
- மாற்றாந்தாயின் மகன், மாற்றாந்தாயின் மகள்
- சகோதரன், சகோதரி, ஒன்றுவிட்ட சகோதரன்
- பெற்றோரின் சகோதரன், சகோதரிகள், மருமகன், மருமகள்
- பெற்றோரின் சகோதர சகோதரிகளின் பிள்ளைகள்

போன்ற குடும்ப உறவுகளினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகளான உடல், உள ரீதியான துன்புறுத்தல் களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றம் (Megistrate Court) மூலம் இடைக்கால தடை உத்தரவை பெற்றுக் கொள்ள முடியும்.

சட்டத்தின் 11 வது பிரிவின் கீழ் இடைக்கால உத்தரவு அல்லது பாதுகாப்பு உத்தரவு பெற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுகளை பின்வருமாறு சுருக்கலாம்:

பாதிக்கப்பட்டவரின் வசிப்பிடத்திற்கு, வேலைத்தளத்திற்கு அல்லது பாடசாலைக்கு துன்புறுத்துபவரை நுழைய விடாமல் இடைக்கால தடை உத்தரவை பெற்றுக் கொடுக்கலாம் .அத்துடன் அவர் பாதிக்கப் பட்டவருடன் எதுவித தொடர்பினை ஏற்படுத்த முடியாதவாறு இந்த பாதுகாப்பு உத்தரவினை பெற்றுக் கொடுக்கலாம்.

மனைவி மற்றும் குழந்தைகளை நிர்க்கதி யாக்கும் வகையில் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டை விற்பதற்கும், கைமாற்றுவதற்கும் அல்லது ஈடு வைப்பதற்கும் எதிராக பாதுகாப்பு உத்தரவை பெற்றுக் கொள்ளலாம். பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நண்பர்கள் அல்லது அவருக்கு உதவும் நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராகவும் பாதுகாப்பு உத்தரவை பெற்றுக் கொள்ளலாம். நடைபெற்றுக் கொண்டிருக்கும் குடும்ப வன்முறைச் சம்பவங் களுக்கு மட்டுமின்றி, எதிர்காலத்தில்


நடை பெறும் என அச்சப்படுகின்ற அதாவது விவாகரத்தான பெண் தனது முன்னாள் வாழ்க்கை துணையினால் தனக்கெதிரான வன்முறைகளுக்கு எதிராகவும், குடும்ப வன்முறை செயல்களை தடுக்க வேண்டிய அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு ,பெண்ணின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மிக விரைவில் நீதவான் நீதிமன்றத்தில் (Megistrate Court )இடைக்கால தடை உத்தரவை பெற முடியும்.

இச்சட்டத்தின் கீழ் குடும்ப வன்முறை தொடர்பான முறைப்பாடு ஒன்றை, நீதவான் நீதிமன்றத்தில் (Megistrate Court) செய்யுமிடத்து, முறையான சாட்சிகளுடன் நிரூபிக்கப்பட்ட பின், பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கும், மேலும் குடும்ப வன்முறையை தடுப்பதற்கும் இடைக்கால தடை உத்தரவொன்றை ஒரு வருட காலத்திற்கு பெற்றுக் கொள்ள முடியும். இந்த இடைக்கால தடை உத்தரவை மீறுபவர்களுக்கு எதிராக நீதவான் நீதிமன்றத்தின் மூலம், தண்டப்பணம் அல்லது ஒரு வருட கால சிறை தண்டனை அல்லது இரண்டும் வழங்கப்படலாம்.

எமது சட்டங்கள் இவ்வாறான பாதுகாப்பினை எங்களுக்கு தருகின்றன என்பதனை நாங்கள் தெரிந்து கொள்வது அவசியமாகும். இதனால் எம்மையும் எம்மை சார்ந்தவர்களையும் பாதுகாக்க முடியும் என்பதோடு, இவ்வாறான சட்டங்களும் தண்டனைகளும் இருக்கின்றன என்பதனை தெரிந்து கொள்ளும் ஒருவர், குடும்ப வன்முறையில் ஈடுபடுவதில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள முயல்வார் என்றும் நம்பலாம்.




ஊடுருவி ரகளைகள் பல செய்திடும்
அமைதிக்கடலாய் அடங்கிக் கிடக்கும்
இருதய அறைக்குள் அடக்கமுடியாத
பேரலைகளாய் பெருக்கெடுக்கும் சுனாமி இது.
உறங்கிக் கிடக்கும் உணர்ச்சிகளை உசுப்பேற்றி,
உள்ளத்துக்கு உருக்கொடுக்கும் உன்னதமான
உணர்வுகளாய் பிரசவிக்கின்றது.
வார்த்தைகளால் வார்த்தெடுக்க முடியாத
சுகங்களும், சுமைகளும் நிறைந்த
சுமைதாங்கியாய் ஆகிறது இருதயம்
காத்திருப்பின் கடினத்தை கனப்பொழுதுகளில்
உணர்த்திக் கொண்டே இருக்கும்.
இனம்புரியாத இன்பத்தினால் இரு இருதயங்கள்
இணைந்து இசைந்து கொண்டே இருக்கின்றன.
இத்தனை மாற்றங்களா இந்த இதயத்தினுள்?
அத்தனையையும் அழகாய் இயக்கி வைப்பது
காதல்தானே!









உன்னை வினவும் நம் குழந்தையிடம்
அவன் செவி வழியாய் உன்னை உன்அன்பை
சொல்லிக் கொண்டேதான் இருக்கின்றேன்.
அவனை முதன் முதல் பற்றிய
விரல்கள் உனதென்றும்
அவன் பூ விரல்களை உன் விரல்களுக்குள்
எப்போதும் பிணைத்துக் கொண்டே நீ
தூங்குவாய் என்றும்,

உப்பிய அவனது கன்னங்களில் உன் உமிழ்நீர்
தோயும் வரை முத்தமிட்டாய் என்றும்
என் மார்பில் பால் குடித்த நாழிகையை விட
உன் உழைத்துக் களைத்து வியர்வை சொட்டும்
மார்பிலேயே துயில் கொள்வான் என்றும்
சொல்லிக் கொண்டு தான் இருக்கின்றேன்

நீ வாயால் மென்று குழைத்த
சாதத்தையே அவனுக்கு ஊட்டி விட்டாய்
என்றும் அவனை நடை பழக்கிய நடை வண்டி
நீயேயெனவும் சொல்லிக்
கொண்டேதானிருக்கிறேன்

பாரிசின் ஈபிள் கோபுரத்திலும்
எவரஸ்ட் சிகரத்திலும்
சுவிஸின் மலைகளின் குளிரிலும்
சஹாராக்களின் மணலிலும்
தந்தையின் கற்பனை முழுக்க
நீயே மகனென இன்னும் சொல்லிக்
கொண்டிருக்கின்றேன்

உன் அதே நீலக்கண்கள்
அவனிடமும் இருக்கிறது
உன் அன்பைச் சொல்லும் போதெல்லாம்
அது ஆச்சர்யத்தில் விரிகிறது.
நாசியில் ஒட்டிக் கொண்டு இனிக்கும்
பிணாட்டின் ருசிபோல
தந்தை பற்றிய அவனது கற்பனை முழுக்க
நீயே தித்திப்பாயிருக்கிறாய்
என்அந்திமமூச்சுக்காற்றை
சுவாசிக்கும் வரை அவனிடம்
சொல்ல விரும்பாத ரகசியமும் உண்டு ..

கருவறை துயின்று அவன்
கண் விழித்தது முதல்
இன்று வரை அவனைக் கண்டிட வராத
ஈவிரக்கமற்ற ஒரு தந்தை நீயென்பதும்

பிரசவ வலியுடன் பிரிவின் வலியையும்
பிணைத்தே அனுபவித்தேன் என்பதையும்.
நகக் காளானின் வாசத்தை இறுக மூடி
தாழம்பூவின் வாசமே உன் தந்தையென
சொல்லிக் கொடுத்திருக்கிறேன்.

ராஜாவாய்க் கண்டிட துடித்தார்
உன் தந்தையெனச் சொல்லி
மகா ராஜாவாக்கிப் பார்க்கிறேன்

இன்னும் என் ஆன்மா துடித்துக் கொண்டு தான்
இருக்கிறது
என்றாவது நீ துவண்டு விழுகையில்
துணைக்கரமாய் அவனை நிறுத்திடுவேன்.
வானம் பார்த்து உமிழ்ந்த அறிவீனத்தை...
அன்றேனும் உணர்ந்திடுவாய்




இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் முதல் பெண் பணிப்பாளரான உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி.

✍ சகோதரி உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் பாத்திமா ரினூஸியா ஜவ்பர். கம்பஹா மாவட்டத்தில் 'திஹாரி' எனது சொந்த ஊர். திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் உயர்தரம் வரை கற்றேன். உயர்தர சித்தியை அடுத்து பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைப்பட்டதாரி ஆனேன்.

✍ சுமார் 16 வருட காலமாக வானொலியோடு இணைந்து வலம் வருகிறீர்கள். உங்கள் கலைத்துறை ஆர்வம் எவ்வாறு ஆரம்பமானது சகோதரி?

சின்ன வயதிலிருந்தே எனக்கு வாசிப்பு பழக்கம் ஆர்வமாக இருந்தது பொதிசுற்றப்படும் தாளில் உள்ளதை கூட வாசிக்காமல் விடுவதில்லை. அந்த காலத்திலேயே எனது தாய், நான் ஒரு துறை சார்ந்த ஒரு பெண்ணாக எதிர்காலத்தில் வருவேன் என்று அடிக்கடி கூறுவார். அன்றைய காலங்களில் தொலைபேசி, கணினி தொழில்நுட்ப பாவனைகள் குறைவு .என்றாலும் டைப்பிங்கில் ஸ்டெனோவாக சிறந்து எனது திறமையை காட்டினேன். இதிலிருந்து ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பயிலுனராக இணைந்து, 1994ல் செய்திப் பிரிவில் செய்தி உதவியாளராக நியமனம் பெற்றேன். 2001 இல் முஸ்லிம் சேவை நிகழ்ச்சி தயாரிப்பாளரானதால், மாதர் மஜ்லிஸ் நிகழ்ச்சி எனது தயாரிப்பிலேயே ஒலிபரப்பாக்கப்பட்டது. 2009 இல் முஸ்லிம் சேவை நிகழ்ச்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டு 2014 சிரேஷ்ட அமைப்பாளராக அமர்த்தப்பட்டேன். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் பணிப்பாளராகவும்,பதில் பொறுப்பதிகாரியாகவும் பதவியேற்ற பின் முஸ்லிம் சேவை வரலாற்றில் முதல் பெண் கட்டுப்பாட்டாளராக என்ற பெயரையும் பெற்றுள்ளேன். இறைவனுக்கே எல்லா புகழும்.

✍ மாஷா அல்லா இந்த அளவு முன்னேறி இருப்பதற்கு உங்கள் குடும்பத்தில் எந்த அளவு உங்களுக்கு ஒத்துழைப்பு கிடைத்தது?

எனது குடும்பத்தில் யாரும் கலைத்துறையில் இருந்தவர்கள் அல்ல. ஆனாலும் அவர்கள் எனது திறமையை, ஆர்வத்தை மதிக்கிறார்கள். எனது பெற்றோர்கள் சாதாரணமானவர்களே. ஆனாலும் அவர்களுடைய உற்சாகமும் தூண்டுதலும் என்னை இந்தளவு உயரத்திற்கு செல்ல வழிகாட்டிக் கொண்டே இருந்தது. நான் சோர்வடைந்து, முடியாது என்று சொல்லும் நேரத்தில் கூட பெற்றோர்கள் எனது முன்னேற்றத்திற்காக கூட இருந்து உற்சாகப்படுத்தினார்கள். இப்பொழுது அவர்கள் இல்லை ஆனால் அன்று அவர்கள் எனக்கு அறிவுறுத்தியது 'இன்றைய வாய்ப்பைத் தவற விட்டால் நாளை கவலை அடைய வரும்' என்பதையே தற்போதும் எனது கணவர், பிள்ளைகள் எனது இந்த பணிக்கு மிகவும் கை கொடுக்கிறார்கள். புரிந்து நடக்கிறார்கள்.

✍ சாதரணமாக வீட்டில் இருக்கும் பெண் என்று இல்லாமல் வெளியில் சென்று தொழில் செய்யும் பெண் என்ற வகையில் உங்களுக்கு ஏற்பட்ட சவால்கள் என்ன?

குடும்பத்தில் எனக்கு குறிப்பிடத்தக்க எந்த ஒரு சவால்களுக்கும் நான் முகம் கொடுக்கவில்லை ஆனால் பொறுப்புகள் தலைமைத்துவம் என்று வரும்போது தொழில் செய்யும் இடங்களில் சாதாரணமாக ஒருவர் முகம் கொடுக்கும் தொழில்சார் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. முக்கியமாக 'பெண் தலைமைத்துவமா?' என்று ஒரு குறிப்போடு நமது சமூகத்தின் ஒரு விதமான பார்வை என்மேல் இருந்தது. ஆண்கள் போல் பெண்களுக்கு எல்லாவற்றையும் முயற்சி செய்ய முடியாது என்று என்னை ஒடுக்க முயன்ற சந்தர்ப்பங்களும் உண்டு. என்னை எந்தெந்த வகையில் தடுக்க முடியுமோ ,அந்த வகையில் எல்லாம் தடுப்பதற்காக உயர்மட்டத்தில் கூட முயற்சி செய்தார்கள். அரசியலைப் பயன்படுத்தி என்னை இயக்கவாதி என்று கூட இனம்காட்ட முயற்சித்தார்கள் ஆனால் இவை எல்லாவற்றையும் நான் எதிர்கொண்டேன். அமைதியாகவே இருந்தேன். இந்தப் பதவி நானாகவே தேடிப் போனதல்ல. இறைவன் எனக்கு வழங்கியது .எனவே இறைவனிடமே பொறுப்பு சாட்டினேன். இன்று அவற்றையெல்லாம் தாண்டி, இனிமேல் எத்தனை சவால்கள் வந்தாலும் அவற்றை முகம் கொடுக்கும் பக்குவம் என்னிடம் இருக்கிறது.

✍ ஒரு தொழில் பார்க்கும் பெண்ணுக்காக இந்த சமூகம் ஒத்துழைப்பு கண்டிப்பாக வழங்கி இருக்கும். அதை பற்றிக் கூறுங்கள்.?

நிச்சயமாக. என்னை ஊக்கப்படுத்தியவர்கள் இந்த சமூகத்தில் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஆணாகட்டும் பெண்ணாகட்டும் அவர்களை நான் நன்றியுடன் நோக்குகின்றேன் என்னை மட்டுமல்ல எந்தப் பெண்ணையும் அவளது திறமையை வளர்த்து அவளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள் சமூகத்தில் இருக்க வேண்டும். எனது பதவி சம்பந்தமான பிரச்சினை வந்தபோது கூட வெளியில் இருந்து நிறைய பேர் எனக்காக முயற்சி செய்தார்கள்.

ஒரு பெண்ணாக, ஒரு முஸ்லிம் பெண்ணாக சேவையாற்றும் போது, நோன்பு போன்ற குறிப்பிட்ட சில காலங்களில் அதிக அளவிலான வேலைப்பளு இருக்கும். இந்த நேரத்தில் கூட இங்குள்ள ஊழியர்களின் உதவி எனக்கு அன்போடு கிடைத்தது.

முக்கியமாக சகோதரி ரீஸா அவர்களுக்கு இங்கு நன்றி சொல்லியாக வேண்டும்.




"அஸ்ஸலாமு அலைக்கும் தாத்தா..."

"வ அலைக்குமுஸ்ஸலாம்.... யாரு... சபீனாவா? உள்ள வாங்க. என்ன விஷயம்... திடீரென்டு இந்தப் பக்கம்?"

"இல்ல தாத்தா, சும்மா இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தன். உங்களப் பாத்தும் மிச்சநாள் இல்லையா? அதுதான் பாத்துட்டுப் போலாம்னு வந்தன். என்ன தாத்தா சரியான யோசனைல இருக்குற மாதிரி தெரியுது!..."

"நான் வேற என்னத்த சபீனா யோசிக்கப் போறன். எல்லாம் இந்த சாகிர்ட கல்யாண விஷயமாத் தான்....ஹ்ம்....."

"ஏன் தாத்தா, கல்யாணத்துல எதுவும் பிரச்சினையா என்ன?"

"அதெல்லாம்ஒன்னுமில்லபுள்ள....அவனுக்கு ஒரு வரனும் சரியா அமைய மாட்டேங்குது... அதுதான் எனக்கு யோசனையா இருக்கு... என்ன வசதி வாய்ப்பிருந்து என்ன பிரயோசனம்?... காலாகாலத்துல புள்ளைக்கு ஒரு கல்யாணம் பண்ணி வைக்க ஏலாத தாயா இருக்கேனே!... இதே அவன் வாப்பா உயிரோட இருந்திருந்தா இப்படி அவன விட்டிருப்பாரா...?"

"என்ன தாத்தா இதுக்கெல்லாம் பொயிட்டு கண்ணக் கசக்கிட்டு இருக்கிங்க? இதெல்லாம் எங்கட கைல இல்ல. அல்லாஹ்ட நாட்டத்துல இருக்கு தாத்தா...அவன் நாடுற நேரம் எல்லாம் சரியா நடக்கும் இன்ஷா அல்லாஹ்.....ஒன்னும் யோசிக்காம இருங்க...." என்ற சபீனாவின் ஆறுதல் வார்த்தைகள் நுஸைராவின் அப்போதைய மனநிலைக்குத் தேவையாகவே இருந்தன.

நுஸைரா கொழும்பு நகரின் தலைசிறந்த பணக்காரக் குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். பரம்பரை பரம்பரையாக பங்களா, நகைக் கடை என வியாபாரங்களிலும் முன்னணியில் திகழ்ந்த இவரது குடும்பத்தில் கணவரது மரணத்தின் பின் அத்தனை பொறுப்புக்களையும் ஏற்று நடத்தும் அவரது ஒரே கவலை தன் மகன் சாகிருக்கு நல்லபடியாகத் திருமணம் செய்ய வேண்டும் என்பதே.

"தாத்தா, நீங்க இவ்வளவு தூரம் கவலப்பட்றதால எனக்கும் ஒரு யோசனை தோணுது. எனக்குத் தெரிஞ்ச ஒரு குடும்பத்துல நல்ல பொண்ணு ஒன்னு இருக்கு...அவங்களும் அவளுக்கு மாப்பிள்ளை தான் தேடிட்டு இருக்காங்க...நம்ம சாகிருக்கு அந்தப் புள்ளையப் பேசிப் பாத்தா என்ன?"

"பொண்ணு இருக்குறது சரி சபீனா....உடனே போய் பேசுறதுன்னா எப்படி? அவங்க யாரு? என்ன? எங்கட அந்தஸ்துக்கு சரியா வருவாங்களா? இதெல்லாம் யோசிக்குற இல்லையா..? பொண் இருக்கன்டு ஒரு சாதாரண குடும்பத்துல என் பிள்ளைக்கு கல்யாணம் பண்ணி வைக்க ஏலாது சபீனா....எங்கட அந்தஸ்துக்கு ஏத்த மாதிரியும் இருக்கனும். அப்படி ஒரு பொண்ணத் தான் நான் தேடிட்டு இருக்கன்"

"அது சரி தாத்தா. அவங்க உங்க அளவுக்கு வசதியா இல்லன்னாலும் நல்லா படிச்சிருக்காங்க. நிறைய மார்க்கப்பற்றுள்ள ஆட்களும் கூட...அந்தப் புள்ள இப்போ டொக்டருக்குப் படிச்சு முடிச்சு கை நிறைய சம்பாதிக்குறா... உங்களுக்கு விருப்பம்னா போய் பாருங்க" என்று அவர்களது முகவரியை நுஸைராவின் கையில் திணித்தவாறு அங்கிருந்து விடைபெற்றார் சபீனா.

"டொக்டர் புள்ள....நல்ல காசு வரும்... ம்... ம்..." என்று பல்வேறு மனக் கோட்டைகளைக் கட்டியவாறு பெண் பார்க்கப் புறப்பட்டார் நுஸைரா.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.
"(ஆதாரமில்லாமல் பிறரை) சந்தேகப்படுவது குறித்து உங்களை எச்சரிக்கிறேன். ஏனெனில், சந்தேகம் கொள்வது மிகப் பெரிய பொய்யாகும்."

(ஆதாரம் புகாரி)

"அஸ்ஸலாமு அலைக்கும் உள்ள வாங்க நுஸைரா தாத்தா...எப்படி இருக்கிங்க? இன்னைக்கு மகளப் பொண் பாக்க வாரன்னு சொன்னாங்க... அது நீங்களா இருக்கும்னு நினைக்கவே இல்ல... உள்ள வாங்க தாத்தா... "என புன்னகை தவழும் முகமாக அவரை வரவேற்றார் ஆயிஷா.

"சீ....நீயா!...உன் வாசல் தேடியா நான் வந்தன்....என் தலையெழுத்து எவ வீட்டுப் படியெல்லாம் மிதிக்க வேண்டியதா இருக்கு....நீ தான்னு தெரிஞ்சிருந்தா இந்த தெருப் பக்கமே எட்டிப் பாத்திருக்க மாட்டன்"

"என்ன தாத்தா, என்ன என்னமோ பேசுறிங்க? நான் உங்களுக்கு என்ன பண்ணன்?"

"என்ன பண்ணியா? ஓஓஓஓ... அந்தக் காலம் மறந்துடுச்சோ....அது சரி இப்போ தான் பணம் வந்துருச்சே... இனி பழைய காலம் எல்லாம் எதுக்கு நினைப்பு இருக்கப் போகுது?"

"எதுவா இருந்தாலும் உள்ள வந்து உக்காந்து பேசலாமே தாத்தா...உள்ள வாங்க..."

"என்னது, நான் உன் வீட்டுப் படி ஏறனுமா? போயும் போயும் ஒரு வேலக்காரியோட நான் சம்மதம் பண்ணி, எனக்கு சரி சமமா உங்கள உக்கார வச்சுப் பேசனுமோ?...ஒரு காலத்துல என் புருசன் மௌத்தாகிட்டாரு. என் பிள்ளைகளுக்கு கஞ்சி ஊத்தக் கூட வழியில்லாம இருக்கன். எதாவது பணம் கொடுத்து உதவி செய்ங்கன்னு என் வாசல்ல வந்து கையேந்தி நின்னது மறந்து போச்சா? இல்ல பாக்க பாவமா இருக்கேன்னு என் வீட்டு வேலைக்கு உதவியா வந்தா பணம் தர்ரேன்னு சொல்ல எதையுமே யோசிக்காம என் வீட்டு வேலை எல்லாம் செஞ்சு மாசா மாசம் எங்கிட்ட கை நீட்டி சம்பளம் வாங்குனது மறந்து போச்சா?

ஆனா... நான் எதையுமே மறக்கலடி.... இப்போ உன் புள்ள எல்லாம் படிச்சுப் பெரிய ஆளா மாறியிருக்குறதும் என் பணத்துல தான்...நீங்க என்ன தான் பணக்காரங்களாவும் படிச்ச ஆளுங்களாவும் மாறுனாலும் என் வீட்டுக் குப்பை அள்ளுனது இல்லைன்னு ஆயிருமா?... அதனால என்னைக்கும் நீ எனக்கு வேலைக்காரி தான்டி" என்று நுஸைரா பொரிந்து தள்ளி விட்டு வந்த வழியே திரும்பிச் செல்ல, எதுவும் பேசாது கண்களில் கண்ணீருடன் அவர் செல்லும் வழியையே பார்த்துக் கொண்டு நின்றார் ஆயிஷா.

"ஒரு வேலக்காரி இந்தக் கோடீஸ்வரி நுஸைராவிற்கு சம்மந்தியா...? நினைக்கவே அருவருப்பா இருக்கு" என்று மனதினுள் கருவிய நுஸைரா அதே இறுமாப்புடன் தனது மகனுக்கு வேறொரு பெண்ணையும் பார்த்து திருமணத்தை முடிவு செய்தார். எங்கெங்கோ தேடி அலைந்து கடைசியாக தன்னை விட வசதி சேவைகள்படைத்த பரம்பரைப் பணக்காரக் குடும்பத்தின் ஒரே வாரிசான சிமாவை, ஊரறியத் தடல்புடலாக விருந்து வைத்துத் திருமணம் செய்து கொடுத்தார்.

வருடங்கள் கழிந்தன.

"என்னம்மா உடம்பு ரொம்ப வீக்கா இருக்கு? நேரத்துக்கு சாப்பிட்றதில்லையா?" என வைத்தியர் கேட்க அழுது கொண்டேயிருந்தார் அந்த நோயாளி. "ஏம்மா அழுறிங்க, உடம்புக்கு முடியலையா? எந்தப் பிரச்சினையா இருந்தாலும் என் கிட்டத் தயங்காம சொல்லுங்க. அப்போ தான் என்னால ஒழுங்கா மருந்து தர ஏலும். என்னைய உங்க மகளா நினைச்சு சொல்லுங்கம்மா" என வாஞ்சையுடன் தலையைத் தடவிய வைத்தியரைப் பார்த்ததும் நுஸைராவிற்கு கண்கள் துளிர்க்க ஆரம்பித்தன. நினைவுகளோ கடந்த காலத்தை நோக்கி சுழன்றது.

"கொஞ்ச காலத்துக்கு முன்னாடி எம் பிள்ளைக்கு ஊரே பொறாமைப்பட்ற அளவுக்கு கல்யாணம் பண்ணி வச்சன். ஆரம்பத்துல ரெண்டு பேரும் நல்லாத் தான் இருந்தாங்க. அப்பறம் தான் என் மருமக அவளோட உண்மையான குணத்த காட்ட ஆரம்பிச்சா. அவ யாரோ ஒரு பையன விரும்பியிருக்கா. அத ஏத்துக்காத அவளோட உம்மா- வாப்பா அந்தப் பையன கல்யாணம் பண்ணா சொத்துல ஒரு பைசா தர மாட்டன்னு மிரட்டி, கட்டாயப்படுத்தி என் மகன கல்யாணம் பண்ணி வச்சிருக்காங்க. அவளும் என் மகனோட சந்தோஷமா இருக்குற மாதிரி நடிச்சு, அவங்க சொத்தோட சேத்து எங்க பேர்ல இருந்த எல்லா சொத்துக்களையும் அவ பேருக்கு எழுதி வாங்கிட்டு யாருக்குமே தெரியாம விரும்பின பையன் கூட ஓடிப் பொயிட்டா.

விஷயம் தெரிஞ்ச என் மகன் வெக்கத்துல எங்க போனான்னே தெரியாது. அதுவரைக்கும் வசதியாவே வாழ்ந்து பழகுன எனக்கு இருக்க ஒரு இடம் கூட இல்லாம பண்ணிட்டாமா அந்தப் பாவி. வேற வழியே இல்லாம அவ உம்மாட்டப் போய் நின்னன். ஆனா என்னால தான் அவங்க பொண்ணு ஓடிப் பொயிட்டதா சொல்லி திட்டி வெளிய அனுப்பிட்டாங்கம்மா...

அதுக்கப்பறம் ஒவ்வொரு வீடாப் பொயிட்டு

காய்கறியை நறுக்கும் கட்டிங் போர்ட்டை சுத்தம் செய்ய எலுமிச்சையில் உப்பைத் தடவி போர்ட்டை நன்றாக தேய்க்கவும். சிறிது நேரத்தில் கறைகள் எல்லாம் அகன்றுவிடும்.

பாத்திரம் தேச்சு, உடுப்புக் கழுவிக் கொடுத்து அவங்க தர்ற பணத்துல தான் சாப்பிட்டுட்டு வாரன். இப்போ ரெண்டு நாளா உடம்புக்கு ரொம்ப முடியாம இருக்கவும் எந்த வேலைக்கும் போகக் கிடைக்கல.... அதனால சாப்பிடவும் எதுவுமில்ல...." என்றவாறே மயங்கி விழுந்தார் நுஸைரா.

கண் விழித்துப் பார்த்ததும் தான் கட்டிலில் படுத்திருப்பது தெரிய வரவே தன் பார்வையை அங்குமிங்கும் அலைய விட்டார் நுஸைரா. அந்த நேரம், "அஸ்ஸலாமு அலைக்கும் ரியா! உள்ள வரலாமா?" எனக் கேட்டவாறே அந்த அறைக்குள் நுழைந்த ரியாஸ், "உம்மா! நீங்க கொழும்பு பெரிய நகக்கட ஓனர் தான, என்னம்மா இப்படி இருக்கிங்க?" என பதற்றத்துடன் வினவினான்.
"யாருப்பா அது? பாழாப்போன கண்ணும் விளங்க மாட்டேங்குது..."

"என்ன தெரியலையாமா? நான் தான் உங்க பிசினஸ் பாட்னர் நஸீர்ட மகன்"


"ஆ....ரியாஸ்....நல்லா இருக்கியாப்பா? அந்தக் காலத்துல உங்க வாப்பா , என் வீட்டுக்காரரோட தொழில் சம்மந்தமா பேச வரும் போதெல்லாம் நீயும் அவரோட ஒட்டிக்கிட்டே வருவ....உன்ன சின்ன வயசுல பாத்தது அதனால தான் நியாபகத்துக்கு வரல"

"நீங்க ஏம்மா இப்படி இருக்கிங்க? உங்க பையன் எங்க?"

"எல்லாம் நான் விதைச்ச வினை தம்பி... அன்னைக்கு விதைச்சத இப்போ அறுவடை செய்றன்...அத விடு தம்பி, நீ எப்படி இங்க? இந்த டொக்டரம்மா யாரு?"

"சரியாப் போச்சு போங்க...காலம் ஒருத்தர எப்படிலாம் மாத்துதுன்னு பாத்திங்களா? அது உங்க ஆயிஷாவோட மகள் ரியா...இவங்களத் தான் நான் கல்யாணம் பண்ணிருக்கன்" எனக் கூற யாரோ தன்னை சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போல உணர்ந்தார் நுஸைரா.

"உம்மா எங்கள மன்னிக்கனும்...என் மனைவி ரியா, அவங்க உம்மா ஆயிஷா பேர்ல பெரிய தையல் கம்பனி ஒன்னு திறந்திருக்காங்க. அதுல வேலை செய்றவங்களுக்கு முதல் மாச சம்பளமும் மாமிட கையாலையே கொடுக்குறதுக்காக இன்னைக்கு ஈவினிங் பங்சன் ஒன்னு ஏற்பாடு செஞ்சிருக்கோம். அதுக்கு அவசரமா போயாகனும்... நாங்க உங்கள அப்பறமா வந்து பாக்குறோம்" என இருவரும் விடை பெற்றுச் சென்றனர். நுஸைராவிற்கோ அன்று ஆயிஷாவிடம் தான் பேசிய வார்த்தைகள் மனக் கண்ணில் தோன்றி மறைய, பட்டினியாலும் குற்ற உணர்வினாலும் மீண்டும் மயங்கிச் சரிந்தார்.



# இமைகள்

**மூதூர் ரொஷானா எம். ஸியா**

கருவாகி உருவாகி
கரங்களில் தவழும்.
மகளான மகவை – கண்.
மணியாகக் காக்கையில்..

சின்னச் சின்னதாய்
சண்டை வந்த போதிலும்,
வாழ்க்கைத் துணையாய் – தன்
வாழ்வோடு வந்தவளை
புதுமைகள் படைத்திட
புருஷனாய் ஊக்குவிக்கையில்..

தள்ளாத வயதிலும்
தாயைப் போற்றி - அவள்
சொல்லெண்ணாத் துன்பத்தில்
சகோதரிக்காய் துணையிருக்கையில்.

பள்ளி முதல்
பட்டப் படிப்பு வரை
துவண்டிடும் பொழுதுகளில்
தோள் தனைக் கொடுக்கையில்..

மகிழ்வில் திளைக்க
மகனாய் பணி செய்கையில்...
என்றும்,
இமையாய் ஆண்மை
காத்திடும் பெண்மையை.

நன்மை செய்வதற்கும், (இறைவனை) அஞ்சுவதற்கும், மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் உங்கள் சத்தியங்கள் மூலம் அல்லாஹ்வை தடையாக ஆக்காதீர்கள்! அல்லாஹ் செவியுறுபவன்; அறிந்தவன்.

முட்டையை வேக வைக்கும் போது அதனுள் இருப்பவை வெளியில் வராமல் இருப்பதற்க வேக வைக்கும் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் வினிகரை விடவும். அவ்வாறு விட்டால் முட்டையின் ஓடு வெடித்தாலும் கூட உள்ளே இருப்பவை வெளியில் வராது.



# சிட்டு

## சிறுவர் ஆக்கம்

**ஏறாவூர் ஆரிபா**

சிட்டு மிகவும் துடிப்பான சிறுமி அவளுக்கு ஆறு வயதிருக்கும். எந்நேரமும் துருதுருவென ஏதாவது செய்து கொண்டே இருப்பாள். சுற்றுச்சூழல் எங்கும் சுற்றிக்கொண்டே இருப்பாள் அவளுக்கு இயற்கை மீதும் அதன் அம்சங்களின் மீதும் அலாதிப் பிரியம். வயல்வெளிகள், பூஞ்சோலைகள், கடற்கரை என்று ஒரு இடம் விடாமல் ஓடிக்கொண்டே இருப்பாள். அவளுக்கு எல்லாமும் பிடித்ததை போல அவளையும் எல்லாவற்றிற்கும் பிடித்தது மலர்கள், செடிகள், கொடிகள், பறவைகள், மிருகங்கள், பூச்சிகள் என்று அனைத்திற்கும் நம்மை பிடிக்கிறதே என்று அவளுக்கு சிறு கர்வமும் உண்டு.

ஒரு நாள் சிட்டு பூஞ்சோலை ஒன்றில் உலாவிக் கொண்டிருந்தாள் அங்கே வீசிய தென்றல் காற்றினை ரசித்தபடி அக்காற்றிற்கு அசைந்தாடிய பூக்களின் அழகை அள்ளிப் பருகியபடி மெல்ல மெல்ல ஒவ்வொரு பூக்களாக சென்று பேசிக்கொண்டு இருந்தாள். அவை கலகலவென நகைத்து சந்தோசமாக ஆடி அசைந்து சிட்டு சிட்டு என்று அழைத்த வண்ணம் இருந்தன இப்படியே செடிகளோடு பேசிக்கொண்டும் வருடிக் கொண்டும் இருந்தவள்.. திடீரென கையை இழுத்துக் கொண்டாள். ஆம் அங்கே ஒரு செடியில் கம்பளி பூச்சி ஒன்று உட்கார்ந்திருந்தது அதைக்கண்டு முகம் சுளித்தாள். ஏதோ அசிங்கத்தை கண்டவள் போல அருவருப்புப்பட்டாள் அதைத் தாண்டி விரைந்து செல்ல முற்படுகையில்

“சிட்டு” என்று மென்மையாக கம்பளி பூச்சி அவளை அழைத்தது

“என்ன” என்று கோபமாக கேட்டாள். “எல்லோருடனும் அன்பாக நட்பாக பேசி பழகும் நீ, ஏன் என்னுடன் மட்டும் பேச மறுக்கிறாய்? நான் அப்படி என்ன தான் செய்தேன்.” என்று மிகுந்த வேதனையுடன் கேட்டது.

“உன்னைப் பார்க்கவே எனக்குப் பிடிக்கவில்லை உன் உடலும் நீயும் பார்க்கவே அசிங்கமாக இருக்கிறாய் உன்னுடன் நான் பேசுவதா” என்று மூச்சு வாங்கக் கத்தினாள்.

“ இதில் என் தப்பு என்ன இருக்கிறது கடவுள் தந்த உருவம் நானும் உன்னைப் போல ஓர் உயிர் தானே இப்படி யாரையும் ஏளனமாகப் பேசாதே” என்று கூறிவிட்டு மிக மெதுவாக கவலையுடன் அங்கிருந்து சென்றது கம்பளிப்பூச்சி.

நாட்கள் நகர்ந்தன சிட்டு தனது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். அன்று சனிக்கிழமை பாடசாலை விடுமுறை நாளாகையால் அருகில் உள்ள ஒரு பூங்காவிற்கு தன் அப்பாவுடன் சென்றாள். அங்கும் பூக்களையும், வண்டினங்களையும் ரசித்துக்கொண்டு நின்ற அவளின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. கண்ணைக் கவரும் வண்ணங்களுடன் அழகிய வண்ணத்துப்பூச்சி ஒன்று ஒரு பூவின் மேலே அமர்ந்திருந்தது. அதனை நோக்கி ஆசையுடன் சென்றாள். அது பறந்து அடுத்த பூவுக்கு சென்றது. மீண்டும் அதன் அருகில் சென்றாள் அது மீண்டும் பறந்து வேறொரு பூவிற்குச் சென்றது.

“ஏய் வண்ணத்துப்பூச்சியே என்ன வேடிக்கை காட்டுகின்றாய் நான் உன்னுடன் பேச வரும்போது போக்குக் காட்டிச் செல்கின்றாயே” என்று கேட்டாள்.

“நான் உன்னுடன் பேச விரும்பவில்லை” என்று வண்ணத்துப்பூச்சி கூறியது.

இதைக்கேட்ட சிட்டுவுக்கு ஆச்சரியமாகியது “என்னது என்னுடன் பேச விரும்பவில்லையா” அது ஏன் எல்லோரும் என்னுடன் பேச நட்பு வைத்துக் கொள்ள ஆசைப்படுவார்கள் ஆனால் நீயோ இப்படி சொல்கிறாயே” என்று கூறினாள்.

"நீ அழகு பார்த்து தகுதி பார்த்து பழகுபவள் அதனால் தான் நான் உன்னுடன் பேச விரும்பவில்லை" என்று வண்ணத்துப்பூச்சி முகத்தில் அடித்தாற் போல் கூறியது.

"என்ன சொல்கிறாய் நான் எப்போது இப்படி செய்தேன்" என்று யோசனையுடன் கேட்டாள்.

" நன்றாக யோசித்துப் பார் இதே போன்றதொரு பூங்காவில் ஒரு கம்பளிப்பூச்சி உன்னுடன் நட்பாக பேச முற்படுகையில் அதனை கேவலமாகப் பேசி அதன் மனதை நோகடிக்கச் செய்தவள் தானே நீ" என்று கேட்டது.

"ஞாபகம் இருக்கிறது அதன் அருவருப்பான தோற்றமும் அசைவும் எனக்கு பிடிக்கவில்லை"

"அது சரி உனக்கு எப்படி தெரியும்?" என்று ஆச்சரியம் மாறாமல் கேட்டாள்.

"அன்று பேச முடியாது என்று முகத்தை திருப்பிக் கொண்டாயே அந்த கம்பளி பூச்சி தான் நான்" என்று வண்ணத்துப்பூச்சி கூறியது.

" என்னது நீயா... எப்படி.. இப்படி??" என்று தடுமாறினாள். "ஆமாம் எங்களது வாழ்க்கை வட்டத்தில் ஒரு பருவம் தான் கம்பளிப்பூச்சி அதன் இறுதிப் பருவமே நிறைவுடலியான வண்ணத்துப்பூச்சிகள்" என்று கூறியது.

இதனை கேட்ட சிட்டு வெட்கித் தலை குனிந்தாள். உடனே வண்ணத்துப்பூச்சியிடம் "என்னை மன்னித்துவிடு தெரியாமல் தப்பு செய்துவிட்டேன் இனி இனிமேல் யாரையும் குறை கூற மாட்டேன்" என்று மன்னிப்பு கேட்டாள் வண்ணத்துப்பூச்சியும் அவளது மன்னிப்பை ஏற்றுக் கொண்டு அவளுடன் நண்பன் ஆகியது.

இவ்வுலகில் யாரையும் ஏளனமாக நோக்கக்கூடாது அனைவரையும் சமமாக நினைத்து மதித்து நடக்க வேண்டும் என்று சிட்டு மட்டும் அல்ல நாமும் புரிந்து கொள்ள வேண்டும்.

---




சேத்து வயலுக்குள்ள
சேல கட்டி போற புள்ள
சோலக்கிளி போல
சோக்காதானே வாரா மெல்ல

சும்மா போங்க மச்சான் - உங்க சீண்டலுக்கு
குறைவுமில்ல - இந்த
நாட்டு நிலம பார்த்தா
பாஸ்போட்டு எடுக்க வேணும் போல
( தான்னானே தன்னானானே)

விசரு கத கதையாதடி - உன்ன
வேலி தாண்ட விடவும் மாட்டேன்
நாலு மையறு பாத்தி போட்டு - உன்ன
நானும் வாழ வைப்பேனடி

விலவாசி ஏறிடுச்சி
நிலவரம் மோசமாச்சி
கலவரம் கூடிப்போச்சி
கையில காசும் இல்ல மச்சான்
(தன்னானே தன்னானானே)

ஆத்தில மீன் இருக்கு
அள்ளிக்குடிக்க தண்ணியிருக்கு
வெள்ளாம நிலமிருக்கு
விதச்சா நெல்லு வீடு வரும்

கண்கெட்ட அரசாங்கமும்
கடன் பட்டு நாசமாச்சி
வீதியெல்லாம் மக்கள் இன்று
போலின் என்று ஆகிப் போச்சி
(தான்னானே தன்னானானே)

கண்ண துடகா மச்சி - நாம
கிழக்கில் இருக்க பயமெதற்கு
கிழங்கு வக நாட்டி சரி - வந்த
கஸ்டம் எல்லாம் போக்கிடலாம்

கொச்சி நல்லா பூத்திருக்கு - வச்ச
கத்தரியும் காச்சிருக்கு
வெள்ளாம விளஞ்சிருக்கு
வாட்டம் வேண்டாம் வாடி புள்ள

கவல இனி இல்ல மச்சான்
சவல கொஞ்சம் எடுத்து வாரேன்
சாணி கூளம் சேர்த்து நாம
பசள கூட்டு செய்திடலாம்
(தன்னானே தன்னானானே)

என்னாச செல்லக்கிளி
நீதான்டி என் பச்சைக்கிளி
வச்ச பாசம் வீணாகுமா
மிச்ச வாழ்வும் உன்னோடுதான்

ஆச வச்சேன் மச்சான் - உன்ன
பாசம் வச்சி பார்ப்பேன் பாரு
நாடு விட்டு போக மாட்டேன்
நானும் நீயும் வாழ்ந்திடலாம்
(தன்னானே தன்னானானே)




அன்று தான் பசீரா ஆனந்தக் கண்ணீர் என்றால் என்னவென்று அறிந்து கொண்டாள். அவளின் கணவனுக்கு உத்தியோகம் கிடைத்து நியமனக் கடிதத்தை அவள் கையில் கொடுத்தான்.

இது கனவா நனவா என சோதித்து அறிவதற்காக அவள் தன் கன்னங்களில் கிள்ளிப் பார்த்தாள். அவளின் மனம் கடந்த காலத்தை நோக்கி விரைவாக நகர்ந்தது.

அவள் ஒரு நடுத்தர குடும்பத்துப் பெண் நகரில் உள்ள பிரபலமான பாடசாலையொன்றில் கல்வி கற்றவள், நாட்டில் இடம் பெற்ற போராட்டக் களங்களில் இவளது கற்றல் நடவடிக்கை இடம் பெற்றது.

புத்தி தெரிந்த காலம் முதல் சீதனம் எடுக்கும் ஆண்களை அறவே பிடிக்காதவளாகவே காணப்பட்டாள்.சீதனம் கொடுத்து வாழ்வதை விட தனியாக வாழ்வதே மேல் என வாதிட்டும் வந்தாள். வீட்டார் பேசி ஒரு வியாபாரம் செய்யும் மணமகனை திருமணம் முடித்து வைத்தார்கள். அதனை சரிகண்டாள்.

இறைவன் அவளை பதப்படுத்த நினைத்தான் போலும். குழந்தை பாக்கியம் சிறிது காலம் அவளுக்கு எட்டாக் கனியானது வைத்தியர்களும் பல பிரயத்தனங்கள் எடுத்தும் அவை கை கூடாமல் போனதால் உமக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் சந்தர்ப்பங்கள் அரிதாகவே உள்ளது. ஏற்கனவே உமக்கு செய்த சத்திரசிகிச்சை காரணமாக கர்ப்பப் பையிலும் குடலிலும் ஒட்டுக்கள் உள்ளது. எனக் கூறி கை விரித்தனர். மீண்டும், அவள் தளராத மனதுடன் இறைவா இவர்களின் வெற்றுக் கண்களுக்குப் புலப்படாமல் போன விடயங்கள் நீ ஆகும் என்றால் ஆகும். அன்னை ஹாஜருக்கு முதுமையின் எல்லையில் வைத்து குழந்தைப் பாக்கியத்தை வழங்கியவன் நீயல்லவா இறைவா! உன்னிலிருந்து எனக்கு நல்ல சந்ததியை தருவாயாக, எங்களை சந்ததி அற்றவர்களாக ஆக்கி விடாதே, என அழுது புலம்பி தினம் மன்றாடினாள். அவளின் உழைப்பு வைத்தியத்திற்கே செலவானது பொறுமையுடன் இறைவ னிடம் மன்றாடி நின்றாள். இதனால் கணவனின் குடும்பத்தில் பலர் பன்முகசிந்தனைஅற்றவர்களாகவே காணப் பட்டனர்.

சமூகத்திலும் பல உளரீதியான சித்திரவதைகளை அனுப வித்த போதிலும் அவள் அதனை கண்டு தளரவில்லை. பட்ட காலிலேயே படும்! கெட்ட குடியே கெடும்!" என்ற பழமொழி போல் அவள் வாழ்க்கையிலும் சோதனைக்கு மேல் சோதனையை சந்தித்தாள். அப்போதுதான் கணவனின் வியாபாரத்திலும் சரிவு ஏற்பட்டு தோல்வியில் முடிந்தது. அதையும் அவள் வெற்றியின் ஒரு படியாகவே நினைத்தாள். கையறு நிலையில் உள்ள கணவனின் உடல் உள ஆரோக்கியத்தில் கண்ணாக இருந்து செயற்பட்டாள்.

அவ் வேளை தானும் முதுமானி படிப்பை மேற்கொண்டு தனது ஊரின் முதல் பெண் முதுமானி என்ற பெருமையை தனதாக்கிக் கொண்டாள். தனது அன்பு கணவனை கா.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்று மாறு கூறி அதற்காக அயராது உழைத்து வெற்றி கண்டாள். அப்போது கணவனின் வயது 32 ஆக இருந்தது. அதன்பின்னர் உயர்தரம் பட்டப்படிப்பென எல்லாமாக எட்டு வருடத்திற்குள் இல்லாளுக்கு இலக்கணமாய் நின்று தனது கணவனையும் ஒரு கலைப் பட்டதாரியாக்கி மகிழ்ந்தாள்.

“பொறுத்தார் பூமியாள்வார்” என்ற வாக்கிற் கிணங்க அவளது பொறுமைக்காக இறைவன் நாற்பது வயதில் அவளுக்கு ஒரு ஆண் குழந்தையைப் பரிசாகக் கொடுத்தான். அதன்பின்னர் பாடசாலைக்கு அதிபர் நியமனத்தை கொடுத்தான். இத்தனையும் தன் பொறுமைக்கும் முயற்சிக்கும் கிடைத்த வெற்றி என இறைவனுக்கு நன்றி கூறிய அவள், தன்னைப் போல் எல்லா பெண்களும் சிறு சிறு பிரச்சினைக்கெல்லாம் விவாகரத்து என்று செல்லாமல் உள்ளதைக் கொண்டு திருப்திப்பட்டு வாழும் பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், என்பதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தாள்.

அன்று அவளது, கணவனுக்கு பட்டதாரி களுக்கான நியமனம் கிடைத்தது கல்விக்கு வறுமையோ வயதோ தடையில்லை என்பதை வரலாற்றுச் சாதனையாக்கிய பூரிப்பில் அவளது கண்களில் ஆனந்தக் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது,

(யாவும் உண்மை)

# இத்தா

இறக்காமம் பர்சானா ரியாஸ்



2014களில்தேசியதொலைக்காட்சியொன்றிற்கு "இத்தா" என்ற நாடகப் பிரதி எழுதிக் கொண்டிருந்தேன். அக்காலப் பகுதியில் பெரும் பான்மை மொழிக் காரியாலயத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். நான் சிங்கள மொழியில் பேசி னாலும்கூட எனக்குத் தமிழில் பதிலளிப்பார். அந்தளவுக்கு தமிழ்மொழிக்குப் பரிச்சயமான ஒரு பெண் உத்தியோகத்தர் எனக்கு பக்கத்தில் இருந்தார்.

எனது எழுத்து ஆர்வம் பற்றி ஏற்கெனவே, அறிந்து வைத்திருந்த அவர், புதிதாக என்ன எழுது கின்றீர்கள்? என வினவினார். "இத்தா" நாடகத்திற்கு கதை வசனம் எழுதுவதாகக் கூறிவிட்டு, அது பற்றி மேலதிக விளக்கம் கோருவார் என எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அவர் விடயத்தைச் சட்டெனப் புரிந்ததோடு, தன் அனுபவம் ஒன்றினை யும் பகிர்ந்தார்.

அவர் பல்கலைக்கழகத்தில் பயின்று கொண்டி ருந்த வேளை, "இத்தா இருத்தல்" முஸ்லிம் பெண் களை எவ்வளவு தூரம் பாதிக்கின்றது? அது பற்றிய அவர்களின் உளவியல் என்ன? என்பன பற்றிய ஆய்வறிக்கை திரட்டுவதற்காக களவிஜயம் ஒன்றினை மேற்கொண்டிருக்கிறார்.

இதற்காக முஸ்லிம் நண்பிகளின் உதவியுடன் "இத்தா" மேற்கொண்டிருந்த பல பெண்களை நேரடி யாகச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இதன் போது, ஒரு தாயாரிடம் சென்றவர், இத்தா இருப்பது பெண்களின் உரிமை மீறல் என்ற வகையில் விவாதித் தும் உள்ளார். ஒரு கட்டத்தில் அந்த தாயார் அவரது பேச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் அமைதியடைந்ததும் உரையாடல் முற்றுப்பெற்று, வீடு வந்ததிலிருந்து இதுவரை அந்த தாயின் மனம் புண்படும்படியாக பேசிவிட்டோமோ? என்ற உறுத்தல் தனக்குள் இருப்ப தாகவும் கூறினார்.

எனவே, இத்தா பற்றி அவர் அறிந்து வைத்திருந்ததால், அது பற்றிய தற்போதைய அவரது எண்ணப்பாடு என்ன? என்பதை ஆவலுடன் கேட்டேன். அவர் மூன்று விடயங்களை முன்வைத்து இத்தா மேற்கொள்வதை மறுத்தார்.

1. பெண் கருவுற்றுள்ளாரா? என்பதனை அறிய வேண்டுமாயின், அதற்கு பல சோதனைகள் தாராளமாக இருக்கின்றன. அதற்கு மூன்று மாதங்கள் தேவையற்றது என்றார்.

2. குழந்தையின் தந்தை பற்றி அறிவதாயின் மரபணுச்சோதனை (டீ.என்.ஏ) முறை இருக்கிறது. உடன் அறிந்துகொள்ள முடியும். இத்தா தேவையற்றதொன்று.

3. இத்தா என்பதே தேவையற்றது எனும்போது, கருவளத்தினை இழந்த வயதான பெண்களும் இத்தாவை எதற்காக மேற்கொள்ள வேண்டும்? போன்ற வினாக்களைத் தொடுத்துவிட்டு, இதற்கெல்லாம் விடையில்லைதானே? என்று கூறி எழுந்து சென்றார்.

காரண காரியங்களை ஆராய்ந்திடவோ, புத்தியிலிட்டுத் தீட்டவோ, விஞ்ஞானத்துக்குள் போட்டு அலசி எடுக்கவோ, அவசியமற்ற இஸ்லாம், மனிதனின் புத்திக்கு எட்டாத பல விடயங்களைத் தன்னகத்தே சுமக்கின்றது. என்பதை வேறோர் தேடல்மூலம் அறிந்தேன்.

இஸ்லாம் மனிதர்களைப் பார்த்து, சிந்திப்பீ ராக! என்ற வாசகத்தை கூறிக்கொண்டே இருக்கிறது. ஆனால், இவ்வாறானதொரு பேசுபொருளை முஸ்லிம் அல்லாத ஒரு விஞ்ஞானியே சிந்தித்துள்ளார்.

ஆம், கருவியல் ஆய்வாளரான றாபர்ட்



# சுடச்சுட சமையல்

தேவையான பொருட்கள் :-

- துப்பரவு செய்த மட்டி - 500g
- சின்ன வெங்காயம் - 100g
- தக்காளி - 100g
- கறிமிளகாய் - 50g
- சீரகம் - 50g
- செத்தல் - 50g
- பூடு - 50g
- தேவையான அளவு உப்பு, கறிவேப்பிலை
- மஞ்சத்தூள், எண்ணெய்

செய்முறை :-

செத்தலையும், சின்ன சீரகத்தையும் சேர்த்து வறுத்து பொடி செய்து கொள்ளவும். பின்னர் மட்டியை பொரித்து எடுத்துக் கொள்ளவும். வெட்டிய வெங்காயம், மிளகாய், பூடு கறிவேப்பிலை ஆகியவற்றை சிறிதளவு எண்ணெயில் வதக்க வேண்டும்.பின் வெட்டிய தக்காளி, பொடி செய்த தூள், உப்பு, மஞ்சள்,பூடு போன்றவற்றோடு பொரித்த மட்டி, சிறிதளவு தண்ணீரையும் சேர்த்து கிளறி சிறிய தணலில் வேக விட வேண்டும். பின்னர் எடுத்து சுவைத்தால் ருசியோ ருசி... ருசி

- திருமலை மர்ளியா

கில்ஹாம் என்பவர், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் என்னும் மருத்துவ ஆய்வு நிறுவனத்தில், ஆண் பெண் உறவில் மரபணுக்கள் எவ்வாறான பங்களிப்பினைச் செய்கின்றது? என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்துள்ளார். ஆய்வின் இறுதியில் ஒரு பெண்ணின் உடம்பில் ஆணின் மரபணுவின் தடயங்கள் உடனே மறைவதில்லை எனவும், அவை முற்றாக அழிவதற்கு எடுத்துக் கொள்ளும் காலம் மூன்று மாதங்கள் எனவும் கண்டுபிடித்துள்ளார்.

இதனை தனது முஸ்லிம் நண்பரும் பேராசிரியருமான ஹாசிம் மசாவியிடம் கூறியுள்ளார்.

மேலும், ஒரு பெண்ணானவள் கணவருடன் உறவு வைத்த நிலையில் அந்தக் கணவரைப் பிரிந்தால் அவள் மூன்று மாதங்கள் கடந்தபின்னர், மறுமணம் செய்து கொள்வதே அவளுக்கு பாது காப்பினைத் தரக்கூடியது என விளக்கியுள்ளார்.

அதனைக் கேட்ட நண்பர் ஹாசிம் மசாவி, கணவரைப் பிரிந்த (Divorced woman) ஒரு பெண் மூன்று மாதங்கள் இத்தா இருக்க வேண்டும். அந்தக் காலப்பகுதியில் அவள் மறுமணம் செய்ய கூடாது. என்ற இஸ்லாமியர்கள் பின்பற்றும் விவாகரத்துச் சட்டத்தினை விளக்கியுள்ளார். அதைக் கேட்ட மருத்துவர் ஆச்சரியத்துடன் சத்தியத்தினை உணர்ந்தார்.

அதாவது, மூன்று மாதங்கள் கடக்காத நிலையில் பெண் மறுமணம் செய்து பெற்றெடுத்த குழந்தையில், முந்தைய கணவரின் மரபணுவின் தடயங்களும் இருக்கும். இதனை வைத்து இரண்டாவது கணவர் குழந்தை தன்னுடையதல்ல எனக் கூறவோ, அதனால், குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப் படவோ வாய்ப்பு இருப்பதை அறியலாம்.

அவரது கண்டுபிடிப்பினை "சூடான் விஷன்" என்ற தினசரிப் பத்திரிகை வெளியிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து பிற மதத்தவர்களால் எதிர்ப்பலைகள் கிளம்பிய வரலாறும் ஒரு புறம் நடந்தேறியுள்ளது.

அல் - குர்ஆனின் அல்-பகறா மற்றும் அத்-தலாக் சூறாக்களில், மாதசுழற்சி நின்றுபோன பெண்களும்கூட கணவனைப் பிரிந்தால் (Divorced woman) மூன்றுமாத காலம் இத்தா இருக்கக் கட்டளையிடுகின்றது. மறைவானவற்றை அறிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கே புகழனைத்தும்.

இஸ்லாத்தையும் பெண் அடிமைத்துவத்தையும் இணைத்து பேசுவோருக்கும் இதில் சிறந்த அத்தாட்சி உள்ளது. அதேவேளை, ஆய்வாளர் றாபர்ட் கில்ஹாம் அவர்களின் கண்டுபிடிப்பில் இத்தா பற்றி விளக்கம் பூரணத்துவம் அடைந்ததாகக் கருத முடியாது. இன்னும் அறிவாளிகளுக்காகவும் ஆய்வுகளுக்காகவும் எதிர்காலங்கள் காத்துக் கிடக்கின்றன.



# முற்காலம் திரும்பிய தற்காலச்சூழல்

ஆக்கம்

**வஃபீரா வஃபி**

இன்று நம்நாட்டு சூழ்நிலையும், பொருளாதார வீழ்ச்சியும், விலைவாசியும் நம்மை பின்னோக்கிப் பயணிக்க வைத்துள்ளன. பொருளாதார நெருக்கடி என்பது வளர்ந்து வரும் பல நாடுகளுக்கும் பெரியதொரு சவாலாகும். இப்பாரிய சிக்கல் மக்களின் இயல்பான வாழ்வைப் பெரிதும் பாதித்து அவர்களை முற்காலத்தை நோக்கிப் பயணிக்க வைத்திருப்பதைக் கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது.

நாளுக்கு நாள் தாறுமாறாக உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமல் திணறும் மக்கள், மாற்றீடாக நன்மை பயக்கக்கூடிய வழிகளைத் தேடிப் பயணிக்கத் தொடங்க, மக்களின் வாழ்வியல் ஒரு அரை வட்டமடித்து கடந்து வந்த பாதைக்கே திசை திரும்பியிருப்பது புலனாகியுள்ளது. உண்மையில் இது வரவேற்கக் கூடியதா என்று சிந்தித்தால், இதில் சில சங்கடங்கள் இருந்தாலும் பல அனுகூலங்களும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

முதலில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுத்திய சிக்கல், போக்குவரத்தை முற்றுமுழுதாக ஸ்தம்பிக்கச் செய்து, அவசரத்திற்கு ஒரு மரணச்சடங்கில் கூட கலந்து கொள்ள முடியாமல், சங்கடத்தைக் கொடுத்திருப்பதை அனுபவபூர்வமாக நம்மில் பலரும் உணர்ந்திருக்கலாம்.

ஆனால் இன்னும் பலர் சோர்ந்து போகாமல், வாழ்ந்தே பார்த்து விடுவோமென உறுதி பூண்டு, வீட்டின் ஒதுக்குப்புறமாய், பலகாலம் கவனிப்பாரற்றுக் கிடந்த சைக்கிளைத் தூசுதட்டி தம் பயணத் தேவைகளுக்காக உபயோகிக்கத் தொடங்க, வேறு சிலரோ குடும்பமாக பயணிக்க மாட்டுவண்டியிடம் தஞ்சமடைந்ததையும், இன்னும் பலர் எத்தனையோ கிலோ மீட்டர் தூரத்தைக் கால்நடையாகவே கடந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. இவையெல்லாம் சூழல் மாசடைவதைப் பாரிய அளவில் குறைத்ததையும் யாரும் மறுக்க முடியாது.

நகர்ப்புற வாழ்க்கையில், இயந்திரப் புகையாலும், நவீன தொழில்நுட்பங்களாலும் புழுதியையும், புகை மண்டலத்தையும் பார்த்துப் பழகியவர்களுக்கு தற்கால பொருளாதாரச்சரிவு, மாசுபடாத வளிமண்டலத்தைசற்றே பரிசளித்து, இயற்கையுடன் இசைவான முற்காலத்துக்கு பயணப்பட வைத்துள்ளதையும் மறுக்கவியலாது.

இதுபோக காய்கறிகளின் விலையும் வறிய, மத்தியதர மக்களுக்கு எட்டாக்கனியாக உயர, நகர்ப்புறங்களில் கூட சிறு அளவிலாவது வீட்டுத் தோட்டமோ மாடித் தோட்டமோ அமைத்து, பயிர்ச் செய்கையை நாடியிருப்பதும் நாம் முற்காலத்தை நோக்கி பயணிப்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மேலும், அக்காலத்தில் நம் விவசாயிகள் ரசாயன

## 4 DIGITS NUMBERS

| | |
|---|---|
| 1900 | Tele Communication |
| 1910 | Lanka Electricity Company |
| 1911 | Department of Examination |
| 1918 | Ministry of Higher Education |
| 1919 | Government Information Centre |
| 1929 | Child Help line |
| 1939 | National Water Supply & Drainage Board |
| 1949 | Lake House |
| 1989 | Sri Lanka Bureau of Foreign Employment |
| 1962 | Department of Immigration & Emigration |
| 1969 | Expressway Emergency |
| 1990 | Emergency Medical Services & Doctor at home |

உரத்தை நம்பாமல் காய்கறி, பழக்கழிவுகள்,மாட்டுச் சாணம்,இயற்கை எரு என உபயோகித்து அமோக விளைச்சலைக் கண்டனர். இப்போது மீண்டும் அதே முறையைக் கையாண்டு, இயற்கைப் பசளையின் மூலம் உடலுக்கு ஊறு விளைவிக்காத காய்கறி,கனிகளைப் பெற்றுக் கொள்ள முனைந்தி ருப்பதும் இதற்கொரு சான்றாகும்.

குறுகிய காலத்தில் பயன்தரக்கூடிய காய்கறி களையும், கீரை வகைகள், கனிவர்க்கங்களையும் விளைவித்து, நம் தேவை போக அயலவர், உறவினர் களுக்கு கொடுத்து அவர்களின் தோட்டத்தில் விளைந்தவற்றை பெற்றுக் கொண்டபோது, முற்கால பண்டமாற்று முறையில் நம்மிடையே ஐக்கியம், மனிதநேயம் என்பன மேலோங்குவதை அனுபவ ரீதியாகக் கண்டு கொண்டோம்.

அதிகூடிய நேரங்கள் மின்வெட்டு அமுலில் இருக்கையில், மின்சாரப் பாவனையின்றி சமாளித்த முற்காலத்துக்குப் பயணித்து அரிக்கேன் விளக்குகள், மின்கலத்தினால் இயங்கும் (torch) விளக்குகளை கையில் எடுத்தோம்.

அடுத்ததாக, எரிவாயு, மின்சார பற்றாக் குறை மற்றும் மின்கட்டண உயர்வு என்பவை பெரும்பாலான மக்களை விறகடுப்பில், மட்பாண் டங்களில் சமைக்க வைத்து மீண்டும் முற்காலத்துக்கு நடைபோட வைத்துள்ளன எனச் சொல்லலாம். இவற்றின் அனுகூலங்களைப் பார்க்கும் போது இப்படி சமைக்கையில் சத்துக்கள் நிறைந்த சுவையான உணவு கிடைப்பதோடு சுகதேகியாகவும் வாழ நமக்கு வரமளித்துள்ளது இந்தப் பொருளாதாரப் பின்னடைவு.

மேலும், மருந்துகளின் பாரிய விலையேற்றம் பெருந்திரளானவர்களை பழங்காலத்துக்கு திரும்பச் செய்து கைவைத்தியம், ஆயுர்வேதம், மூலிகை வைத்தியம், சித்த வைத்தியம் என பல்வேறு பாரம் பரியமிக்க தேசிய வைத்தியமுறைகளை நாடவைத் துள்ளது.

தவிரவும், முற்காலத்தில் நம் முன்னோர்கள் பாதையின் இருமருங்கிலும் வளர்ந்திருந்த பல் வேறு மூலிகைகள், காட்டுக்கனிகளை உண்டு ஆரோக்கியமாக இருந்தார்கள். தற்கால சந்ததிக்கு அவைகளின் சுவையோ மருத்துவக் குணங்களோ தெரியாமல் ஏளனத்துடன் புறக்கணித்து சென்றி ருக்க, சமீபகாலமாகவே இணைய தளங்கள் மற்றும் சமூகவலைத்தளங்கள் மூலமும் இவற்றின் பெறுமதி அறிந்து அவற்றைத் தேடி பயணிப்பதையும் முற் காலத்தை நோக்கிய பயணமாகக் கொள்ளலாம். இதுவும் ஒருவகை சமூக மாற்றத்தைக் கொடுக்கும் அனுகூலமே!

முற்காலத்துக்குத் திரும்பியுள்ள தற்காலம் சில பாதிப்புகளையும் நமக்கு தரத் தவறவில்லை. இத்தகைய பயணங்கள் நேரகாலத்தை விரய மாக்கி, வேலைக்குச் செல்லும் பலரின் திட்ட மிடப்பட்ட வாழ்க்கை முறையையும், நேர முகாமைத்துவத்தையும் சீர்குலைத்து , பலவிதத்தில் மனஉளைச்சல் தருவதாகவும் அமைந்துள்ளது.

விலைவாசி உயர்வில் உடைகளும், தீப்பெட்டி போன்றவையின் விலைகளும் கூட எக்கச்சக்கமாக அதிகரிக்க, முற்காலத்தை நோக்கிய நம் பயணங்கள் கற்காலத்துக்குத் திரும்பி, நம்மை இலை தழைகள் மற்றும் மரவுரி தரிக்கவும், ஆதிமனிதன் போல் கற்களை உரசி நெருப்பை மூட்டவும் வைத்து விடுமோ என்ற கலக்கமும் ஆழ்மனதில் எழாமல் இல்லை.

இப்பொருளாதாரச் சிக்கல் தீர்ந்து நம் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பினாலும், நம் பாரம்பரியத்தைக் காத்து, நம்மை சுகதேகிகளாகவும் சக மனிதர்களையும் நேசிக்கும் மனிதநேயம் உள்ள வர்களாகவும் வாழவைத்து, எதிர்கால சந்ததிக்கும் பழங்கால பயன்பாடுகளைக் கற்றுத் தரும் முற்காலத்தை நோக்கிய சுவாரசியமான பயணங்கள் அவ்வப்போது தேவைதான் என்றே எண்ணத் தோன்றுகிறது




இயற்கையின் எழில் கொஞ்சும் ஓர் அழகிய காடு. அக்காட்டில் மலைகள், நீர் அருவிகள், புற்கள் எனப் பார்க்கவே பரவசம் தந்தது. அனைத்துப் பறவைகளும் கனிகள் உண்டு மகிழும். வண்ணத்துப் பூச்சிகள் பூவில் உறங்கி பறக்கும் அழகு பார்த்தால் அங்கேயே தங்கி விட வேண்டும் என ஆசை வருமாம், அப்படி ஒரு காடு. அந்தக் காட்டில் மலை மீது ஓர் பெரிய மரம் ஒன்று தனது அடர்த்தியான கிளைகளை விரித்துப் பரந்திருந்தது. அந்த அழகான மரத்தில் பல பறவைகள் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தன. மைனா, கிளிகள், குருவிகள் என பல பறவைகள் வாழ்ந்து வந்தன. எமக்கு இது போன்ற இன்பம் வேறு எந்த காட்டிலும் கிடைக்காது என்று அவைகளுக்குள் பெரும் ஆனந்தம்.

ஒரு நாள் திடீரென வானம் இருளால் சூழ காற்றோடு மழையும் பெய்தது. காற்றுக்கு மரக் கிளைகள் முறிந்தன. இதனால் அந்தக் கிளைகளில் இருந்த குருவிக் கூடுகள் கீழே விழுந்ததனால் பல குருவிக் குஞ்சுகள் இறந்து போக ஒரு சில குஞ்சுகள் உயிரோடு இருந்தன. குஞ்சுகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு தாய்ப் பறவைகள் அழுது கொண்டு அங்கும் இங்குமாய் பறந்து திரிந்தன. பறவைகளின் அழுகுரல் கேட்ட அணில் " ஏன் எல்லோரும் துக்கமாக இருக்கின்றீர்கள்" என்று கேட்டது. அதற்கு தாய்ப்பறவை சொன்னது " அணில் பிள்ளையாரே நீங்கள் தான் எங்கள் வீட்டுக்கு அடிக்கடி போகின்றவர், இரவு பெய்த மழையில் எங்கள் கூடுகளுடன் குஞ்சுகளும் நீரில் மிதக்கின்றன. நாங்கள் என்ன செய்வதென்று அறியாது தவிக்கின்றோம். எங்கள் குஞ்சுகள் உயிர் பிழைக்க ஒரு வழி சொல்லுங்கள்" என்று கெஞ்சியது. அவைகளின் பரிதாப நிலையை கண்ட அணில் எப்படியாவது இவர்களுக்கு நாம் உதவ வேண்டும் என்று எண்ணியது. உடனே யாரையாவது அழைத்து வரவேண்டும் என நினைத்து மலைகளில் உள்ள மரங்களில் ஏறி, துள்ளி வேகமாக ஓடியது. அப்போது குரங்கு நண்பன் அந்த வழியால் வந்ததை அணில் கண்டது. அணில் குரங்கிடம் "நண்பரே நண்பரே சற்று நில்லுங்கள் நீங்கள் மிகவும் நல்லவர், உதவிகள் கேட்போருக்கு பல உதவிகளை செய்கின்ற நல்ல குணம் உள்ளவர்" என்று சொல்ல குரங்கு சிரித்தது. "என்ன நண்பரே ஏன் இப்படி சிரிக்கின்றீர்கள்" என்று கேட்டது அணில். அதற்கு குரங்கு அணிலிடம் "என்னிடம் என்னை புகழ்ந்து பேசிய பிறகுதான் உதவி கேட்பீரோ! நான் ஒரு போதும் புகழுக்காய் நல்லது செய்வது இல்லை, நான் புறப்படுகிறேன்" என்றது குரங்கு. அதற்கு அணில் "இல்லை இல்லை நான் பொய் சொல்லி புகழவில்லை, உங்களின் நற்செயல்கள் என் மனதில் பதிந்ததை சொன்னேன், என் மீது கோபம் கொள்ளாதீர்கள், நான் சொல்வதைக் கேளுங்கள்" என்று குரங்கிடம் கெஞ்சியது. சரி சரி முதலில் விடயத்தை கூறும் என்று குரங்கு சொல்ல பறவைகளுக்கு நடந்த துயரத்தை அணில் சொல்ல குரங்கு உடனே அவ்விடத்தை நோக்கி ஓடி வந்து தாய்ப் பறவைகளிடம் சொன்னது "உங்கள் குஞ்சுகளை நான் காப்பாற்றி தருகிறேன் நீங்கள் சென்று வாழும் இடத்தை தயார் செய்யுங்கள்" என்று சொல்ல தங்களது கூடுகளை மீண்டும் மரத்தில் கட்டின.

குரங்கு தன் மற்ற நண்பர்களை அழைத்து "வாருங்கள் நண்பர்களே நாம் உதவி செய்தால் நிச்சயம் ஒரு நாள் நமக்கு கஷ்டம் வரும் போது இறைவன் நல்லதைத் தருவான்" என்று சொல்ல எல்லாக் குரங்குகளும் ஒன்று சேர்ந்து பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றி தாய்ப் பறவைகளிடம் கொடுத்தன. தாய்ப் பறவைகள் சந்தோஷத்தில் மகிழ்ந்து, தங்கள் மகிழ்ச்சிக்கு காரணமான குரங்குகளிடமும் நன்றி கூறி மகிழ்ந்தன.

குரங்குகள் " நம் வாழ்க்கையில் இன்பம் துன்பம் இரண்டும் வந்து போகும். நாம் அதற்கேற்றாற் போல் வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்." என்றன.




ඔබේ හැකියාව ගැන ඔබ දැන සිටියාද?
යම්කිසි අරමුණක් වෙනුවෙන් නේද මා උපන්නේ??
යැයි ඔබෙන් ඔබම අසා සිටින විටදී ඔබතුළ සැඟවුණු "යම් දෙයක්" ඇති බව ඔබට සොයාගැනීමට හැකි වෙයි. ඒ දෙය ඔබටම ආවේණික වූ බව වටහා ගන්නාවිට ඔබේ හැකියාව හා ශක්තිය ඔබටම හඳුනාගැනීමට හැකිවෙයි.

විනාඩි කිහිපයක් වැය ඔබ ගැනම ඔබ සිතා බලන්න. "සාර්ථක වෙන්න ඕනේ... සාර්ථක වුනු කෙනා තමයි දක්ෂයා. තරඟයෙන් දිනපු කෙනා තමයි ජයග්‍රාහකයා... පාලනය කරන කෙනා තමයි බලවතා..." යැයි සිතුවිලි ගොඩනගා ගනිමින්, ඔබ ඔබටම (නූගත්)අදහස් වපුරා ගනියි.

ඔබට ප්‍රිය කරන පුද්ගලයෙකු තවත් පැත්තකින් තව කෙනෙකුට වෛර කළ හැකියි. මමෙගින් ඔබ තව කෙනෙකුගේ ආකර්ශනයට මැදිවී ජීවත් වෙයි. මෙයෙද ඔබ සතු "හැකියාවක්" බව යම් දවසක වටහා ගෙන ධෛර්යමත් වන්න.

කැලඹිල්ලක් අවශ්‍ය නැත. ඔබේ දෑස් වලට සුලබ දසුනක් ලෙස පෙනෙන, ඔබේ ඇතුළාන්තයේ ඇති කලබලයකින් තොර සාමකාමීත්වය, නිශ්ශබ්දතාවය හා ඉවසීම මගින් ඔබේ ජීවිතය බුද්ධිමත්ව ඉදිරියට ගෙන යයි.

මෙහි බොහෝ ශක්තිමත් මිනිසුන්ට පවා එය කළ නොහැකි බව වටහා ගෙන ධෛර්යමත් වන්න. එදිනෙදා ජීවිතයේදී ඔබ වටහා ගන්නා දේවල් තුළින් ඔබ අත්විඳින කුඩා සතුට පවා ජීවිතය සාර්ථක කර ගැනීමේ ඔබේ අරමුණෙහි ඔබ අත්කරගන්නා ජයග්‍රහණයක් බව සිතට ගෙන ධෛර්යමත් වන්න! ඔබ වෙනුවෙන් ඔබ සිත තුළ ගොඩනැගූ එම රාජ්‍යය ඔබේ හැකියාව මගින් නොවේද පාලනය කරන්නේ. එය පාලනය කරන හෘදය සාක්ෂියට පවා ඔබ රජු බව වටහා ගෙන ධෛර්යමත් වන්න.

මෙලෙස සෑම කෙනෙක්ම යම් විදිහකින් එකිනෙකට වෙනස් හැකියාවන් මගින් පාලනය කරගනිමින් සිටින, රජවරු වේ!

තව කෙනෙකුට පවතින දෙය ඔබ සතුව නැහැයි කියා පසුතැවිලි නොවී ඔබ සතුව පවතින දෙයක් වෙන කිසිවෙකුට නැතැයි කියන දෙයින් වෙරයෙන් ශක්තිමත් වන්න!

ඔබට, ඔබ වෙනුවෙන් වූ ශක්තිය! හැකියාව! මෙය වේ.



# குடும்ப வாழ்க்கை இனிக்க

றிப்கா அன்சார்
சாய்ந்தமருது

குடும்ப வாழ்க்கை என்பது ஒரு சிதம்பர இரகசியம் என்பது போலவே பலரும் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவொரு பரகசியம் என்பது பலருக்குத் தெரியவில்லை. வாழ்க்கை ஒரு நாடகம். அதில் நாங்கள் ஒவ்வொருவரும் நடிகர்கள் என்பதை மறந்து நிற்கின்றோம். தங்களின் கதாபாத்திரத்தை திறம்பட நடிக்கின்ற ஒரு சிலர் மாத்திரம் தான் குடும்ப வாழ்க்கை எனும் நாடகத்தில் வெற்றியடைகின்றார்கள். மற்றையவர்களெல்லாம் தோற்றுப் போய் விடுகிறார்கள் அல்லது இடைநடுவில் விட்டு விட்டு ஒதுங்கி விடுகின்றார்கள்.

ஒரு ஆணும் பெண்ணும், அதுவும் முன் பின் தெரியாத, எங்கெங்கேயோ பிறந்து வளர்ந்த இருவர் திருமண பந்தத்தில் இணைவதுடன் குடும்ப வாழ்க்கை எனும் நாடகம் ஆரம்பமாகின்றது. நான் இங்கே தொட்டுச் சொல்வது சட்டப்படியான திருமண பந்தத்தைப் பற்றியதே தவிர, அதற்கு அப்பாற்பட்டதல்ல.

ஓரிருவர் இளம்பராயத்திலிருந்தே காதல் வயப்பட்டு, ஒருவரையொருவர் புரிந்து கொண்டவர்கள் திருமணம் செய்து குடும்ப வாழ்க்கையை தொடங்கியது போக, அநேகமான வர்கள் திருமண பந்தத்தில்இணைந்தபின்னர்தான்ஒருவரையொருவர் புரிந்து கொள்ளத் தொடங்குகிறார்கள். இந்தப் புரிந்துணர்வு குறுகிய நாட்களுக்குள்ளும் முற்றுப் பெறலாம், கடைசிவரையும் முற்றுப் பெறாமலும் போய்விடலாம்.

அடிப்படையில், குடும்ப வாழ்க்கையானது பரஸ்பர புரிந்துணர்வுடனும், நம்பிக்கையுடனும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்து நடக்கின்ற போது தான் அந்தக் குடும்ப வாழ்க்கை இன்பகரமானதாக, மகிழ்ச்சிகரமானதாக எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு அர்த்தமுள்ளதாக இருக்கும். இல்லையென்றால், அது முட்கள் நிறைந்த, கரடு முரடானதாக,அதுவும்நரகத்தை விடவும் மோசமானதாகி விடும். இவ்வாறான குடும்ப வாழ்க்கையில் சிக்குண்டு, சின்னாபின்னமாகிப் போனவர்கள் பலரை நம் வாழ்க்கையில் பார்த்திருப்போம்.

இன்றைய இயந்திரமாகிப் போன மனித வாழ்க்கையிலே, குடும்ப வாழ்க்கை பற்றிய அடிப்படை அறிவுகள் புகட்டப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் மிக மிகக்குறைவு. மாணவர்கள் தமது பள்ளிப்பருவத்திலும் சரி, இரண்டாம், மூன்றாம் கற்கை நெறிகளிலும் சரி, பரீட்சையில் சித்தியடைவதனை நோக்காகக் கொண்டதொரு பொறிமுறைக்குள் தான் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். பெற்றோர்கள் கூட, தமது பிள்ளைகள் சிறந்த பெறுபேறுகள் பெற்றிட வேண்டுமென்பதிலே தான் குறியாய் இருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியிலே தான்,

இவர்கள் குடும்ப வாழ்க்கைக்குள் இணைக்கப் படுகிறார்கள். ஓரிருவர் தவிர்ந்த அநேகமானவர்கள் குடும்ப வாழ்க்கை என்றால் என்ன, அதன் நெறிமுறைகள் என்ன, அதனை வெற்றிகரமாகக் கொண்டு செல்வது எப்படி, பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது அதனை அணுகுவது எப்படி என்பன போன்ற விடயங்களில் போதிய தெளிவில்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். குடும்ப வாழ்க்கை என்றால் வெறுமனே பாலியல் அல்லது உடலுறவு கொள்வது மட்டுமே என்பது பலரது தப்புக்கணக்கு. இதனால் தான் இப்போது அநேகமான குடும்பங்களில் சண்டை, சச்சரவுகளும், பிணக்குகளும் ஏற்பட்டு பிரிந்து விடுகின்ற நிலைக்குக் கூடத் தள்ளப்படுகின்றார்கள்.

இவ்வாறான துர்ப்பாக்கியகரமான நிகழ்வுகள் இடம்பெறுவதை தவிர்ப்பதற்கான வழி முறைகள் என்ன என்பதைப் பற்றி, சமூகத்தின் பொறுப்பாளர்கள், புத்திஜீவிகள் மற்றும் மார்க்க அறிஞர்களும் கவனம் செலுத்தவேண்டியது இன்றியமையாததாகி விட்டது. இது சம்பந்தமான விளக்கங்கள் இளம் சந்ததியினருக்கு விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் மூலமாக தெரியப்படுத்தப்பட வேண்டும்.

கணவனும் மனைவியும் தத்தமது உறவினர்கள் சார்ந்த சுகதுக்கங்களை தமக்கிடையே பரிமாறிக் கொள்கின்ற போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது துணையின் அது கணவனாக இருக்கலாம் அல்லது மனைவியாக இருக்கலாம், உறவினர்களைப் பற்றி தரக்குறைவாகவோ குறைகளை முன்னிலைப் படுத்தியோ கருத்துக்களை தனது துணையிடமோ அல்லது வேறு யாரிடமோ முன்வைக்கக் கூடாது. நிச்சயமாகத் தவறு என்று தெரிந்திருந்தாலும், அதனை மறைக்கக்கூடிய மனப்பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

அவ்வாறே, எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது துணையின் குடும்பத்தைப் பற்றி உயர்வாகவே தனது குடும்பத்தாரிடம் ஒப்புவிக்க வேண்டும். தனது குடும்பத்தைப் பற்றி அவர்கள் நன்றாகவே கருதுகிறார்கள் என்ற கருத்துப்படவே தனது குடும்பத்தாரிடம் கூற வேண்டும். அவ்வாறு தான் தனது துணையின் குடும்பத்தாருடனும் கதைக்க வேண்டும். அதாவது தமது இருபக்க உறவினர்களின் மனங்களில் மற்றவர் பற்றி நல்லபிப்பிராயம் வரக்கூடியவாறு தான் ஒவ்வொருவரும் நடந்து கொள்ள வேண்டும்.

மேலும், கணவன், மனைவி இருவரும் போட்டி போட்டுக் கொண்டு தனது துணையின் உறவினர்களுக்கு நேசக்கரம் நீட்ட வேண்டும். அதாவது கணவன் மனைவியின் உறவினர்களுக்கும், மனைவி கணவனின் உறவினர்களுக்கும் தாமாகவே முன்வந்து உதவிகளைச் செய்திட வேண்டும். அதுபோலவே, தனது உறவினர்களுக்கு உதவிகள் செய்கின்ற போது, இது நானாகச் செய்யவில்லை, தனது கணவன் அல்லது மனைவி தான் செய்யச் சொன்னது என்று கூறுவதற்கு கடுகளவும் கஞ்சத்தனம் பார்க்கக்கூடாது. தனது துணையைப் பற்றி எவ்வளவு தூரம் அவர்கள் மனங்களில் நல்லெண்ணத்தை ஏற்படுத்த முடியுமோ அந்தளவு முயற்சிகள் செய்யவேண்டும்.

நான் சந்தித்த அநேகமான குடும்பப் பிரச்சினைகளில் அடிப்படைக் காரணியாக அமைந்த ஒரு விடயம் தான், தத்தமது உறவினர்கள் மேல் வைத்திருக்கும் அதீதமான அன்பு கலந்த பாசம். திருமணம் முடித்த பின்னரும், இந்த பாசப்பிணைப்பை விட்டு பிள்ளைகளுக்கும் வெளியே வரமுடியவில்லை, பெற்றோர்களுக்கும் அவ்வாறு பிள்ளைகள் செய்வதை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. பெற்றோர்கள் எவ்வாறு திருமணம் செய்து ஒரு குடும்பமானார்களோ அவ்வாறே தமது பிள்ளைகளும் திருமணத்தின் பின் சுதந்திரமான ஒரு குடும்பமாக மிளிர வேண்டும் என்பதை பாசப்பிணைப்பை முன்னிலைப்படுத்தி ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். இவ்வாறான பெற்றோர்கள் தமது பிள்ளைகளை சுதந்திரமாக முடிவெடுக்கக் கூட விடுவதில்லை. இத்தகைய பெற்றோர்கள், தங்களின் பிள்ளைகள் பிரிந்து விட்டாலும் பரவாயில்லை என்று தமது வைராக்கியமான சிந்தனைகளைத் தான் திணிக்க முயற்சிக்கின்றார்களே தவிர, தமது பிள்ளைகளின் மற்றும் பேரப்பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றி கொஞ்சமும் யோசித்துப்பார்ப்பதும் இல்லை, மற்றவர்களின் கருத்துக்களைக் கூட ஏற்றுக் கொள்வதும் இல்லை.

கணவன் – மனைவி இருவரும் தங்களுக் கிடையிலான எந்தவிதமான இரகசியங்களையும் ஊடல் ஏற்பட்ட சந்தர்ப்பத்திலும் கூட, மூன்றாவது நபருக்கு அது உறவினராயினும் சரி, ஆத்ம நண்பன் அல்லது நண்பியாயினும் சரி எக்காரணம் கொண்டும் வெளிப்படுத்தக் கூடாது. ஒருவருக்கு மட்டும் தெரிந்தால் தான் இரகசியம். அது இருவருக்குத் தெரிந்து விட்டால் பரகசியம். இங்கே கணவன் – மனைவி என்ற இருவராயினும், ஈருடலாயினும் ஓருயிர் என்ற கோட்பாட்டில், இவர்களின் இரகசியங்கள் காக்கப்பட வேண்டும். அது அடுத்தவருக்குத் தெரிந்தால் பரகசியமாகி விடும்.

எல்லாவற்றையும் விடவும் முக்கியமானது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து நடக்கின்ற தன்மை. யார் முதலில் விட்டுக்கொடுப்பது என்ற தாழ்வுச்சிக்கலை ஒரு பக்கம் மூட்டை கட்டி வைத்து விட்டு, போட்டி போட்டுக் கொண்டு விட்டுக் கொடுக்க வேண்டும். நீங்கள் யாருக்காக விட்டுக் கொடுக்கப் போகிறீர்கள்? தத்தமது துணைக்காகத் தானே என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஒருவர் ஒன்றை விட்டுக் கொடுத்தால், மற்றவர் இரண்டை விட்டுக் கொடுக்கக் கூடிய மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்தோடு குடும்பச்சுமை என்பது இருவருக்கும் உரித்தானது என்பதை இருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். சுகமோ, துக்கமோ இருவருக்கும் சமபாதி; என்பதில் வேற்றுமைப்படக் கூடாது. எந்த விடயமானாலும் இருவரும் கலந்தாலோசித்து முரண்பாடுகளைக் களைந்து முன்னெடுத்துச் செல்லப் பழக வேண்டும்.

குடும்ப வாழ்க்கை கடினமானதுமல்ல, போராட்டமுமல்ல. அது அவரவர்கள் வாழ்கின்ற விதத்தைப் பொறுத்தது. சிரமங்களைக் கடினமாக்கு வதும், கடினங்களை இலேசாக்குவதும் அவரவ ருடைய புரிந்துணர்வையும், மனப்பக்குவத்தையும் பொறுத்தது. எது எப்படி அமைய வேண்டுமென்பது எம் கைகளிலேயே உள்ளது. மேற்கூறிய விடயங்களை விளங்கிக் கொண்டால், மற்றவர்கள் பொறாமைப்படுமளவுக்கு வாழ்ந்து காட்டலாம்

---




மதியம் சாப்பாட்டில் சாப்பாட்டை விட வெண்டிக்காய் பொரியல் அதிகம் இருந்ததை பார்த்து விட்டு கணவன் கேட்டான்...

"என்னமா இது இவ்வளவு பொரியல் வெச்சிருக்கே"

மனைவி :

வெண்டக்காய் அதிகம் சாப்பிட்டா மூளை வளரும்னு சொல்வாங்க, கேள்விப்பட்டு இருக்கீங்களா?

கனவன் :

ஓ... புரிஞ்சிருச்சு... ஊட்டுகாரனை மிகப் பெரிய ஜீனியஸாக்கி இந்த உலகத்துக்கு காட்ட போற ரைட்....?!

மனைவி :

சே... சே... வெண்டக்காய் அதிகமா சாப்பிட்டா மூளை வளருவது பொய்னு இந்த உலகத்துக்கு நிரூபிக்கப் போறேன்.....!

---

சூதாட்டம் ஆடக்கூடாது ஒருநாள் ஜெயிப்ப அடுத்த நாள் தோற்பாய்...

சரிப்பா... அப்போ ஒருநாள் விட்டு ஒருநாள் ஆடலாமே!

---

அப்பா, Application ல மதர் டங்குனு இருக்கே என்ன எழுதனும்?

ரொம்ப நீளம்னு எழுது

---

"பூக்கடையில் பூவெல்லாம் தீர்ந்திடுச்சி" இதை ஆங்கிலத்தில் சொல்லுடா,

காலி ப்ளவர் சேர்... ஹஹஹஹ

---

நைட்டு தூக்கமே வரமாட்டிங்குது...
ஏன்னு தெரியாம இருந்தது...
அப்புறம் தான் தெரிஞ்சுது...

உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதாம்
இது தெரியாம நான் பயந்து போய்ட்டேன்.

---

ஜோனி ஜோனி எஸ் பாப்பா... பேங்குல பணம் நோ பாப்பா... ATM லயும் நோ பாப்பா... நாளைக்கு சோத்துக்கு

ஹாஹாஹா....

---

எப்பவும் போனும் கையுமாக இருக்கிறதுக்கு மனுஷங்களோட பழகலாம்ல...

நான் சொன்னத கேட்குது, கேட்டத தருது, பிடிச்ச மாதிரி நடந்துக்குது, மனுஷங்க கிட்ட இதெல்லாம் எதிர்பார்க்க முடியுமா...?

---

ஆசை.... பேராசை.... இரண்டுக்கும் வித்தியாசம்....?

நீ கல்யாணம் பண்ணிக்கனும்னு நெனக்கிறது ஆசை ஆனா அதுக்கு அப்புறம் சந்தோசமா இருக்கனும்னு நெனச்சா அது பேராசை!?

---

பாட்டி –

டேய்... உங்க மிஸ் வர்றாங்க ஓடிப்போய் ஒளிஞ்சுக்க

பேரன் -

ஐயோ பாட்டி நீ போய் ஒளிஞ்சுக்க நீ செத்துட்டேனு சொல்லித் தான் ஒரு வாரம் லீவு போட்டு வீட்ல இருக்கேன்...




பெண்கள் என்றாலே நமக்கு ஞாபகத்துக்கு வருவது அவர்களின் அர்ப்பணிப்புகள்தான்.அவ்வாறான பெண்கள் எப்படியான அவஸ்தை களை அனுபவிக்கிறார்கள் என்று பெரும்பாலானவர்களுக்குத் தெரிவதில்லை. அவர்களுக்கு வரும் தொல்லைகளைப் பற்றி யோசிப்பதுமில்லை.

“எனக்கு 28 நாள் இடைவெளியில பீரியட்ஸ் வந்துடுது... இது சரிதானா?’’

“எனக்கு ரெண்டு மாசத்துக்கு ஒருதடவைதான் பீரியட்ஸ் வருது. ஒருவேளை ஏதாவது உடம்புல பிரச்சினை இருக்குமோ?’’

“ஒவ்வொருத்தரோட உடல்நிலையைப் பொறுத்து, நாள் கணக்கு மாறலாம்னு படிச்சிருக்கேன்... எனக்குக் கண்டபடி மாறுதே...’’

•இப்படி ஒழுங்கற்ற மாதவிடாய் குறித்த ஏராளமான சந்தேகங்கள் பலருக்கும் இருக்கின்றன. இன்றைய இளைய தலைமுறையிடம், மாதவிடாய் பற்றிய பெரிய விவாதமே நடந்துவருகிறது. மாத விடாய் என்பது `அசுத்தம்’ என்று கூறப்பட்ட பழைய கருத்துகளை ஒதுக்கி, அது ஓர் உடல்நிலை மாற்றம் என்பதை அனைவரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் பலராலும் கண்டுகொள்ளப்படாத மாதவிடாய்ச் சுழற்சியின் மறுபக்கமே, ஒழுங்கற்ற மாதவிடாய். இது இன்றைக்கு பல பெண்கள் சந்தித்து வரும் முக்கியமான பிரச்சினை.

சாதாரணமாக பெண்களின் மாதவிடாய்ச் சக்கரமானது 4-7 நாள் ஏற்படுகிறது.மேலும் மாதாந்தம் 28 நாட்களுக்கு ஒரு முறை இந்த வட்டம் இடம்பெறும்.சாதாரணமான வேறு பாட்டெல்லை (Range) 28-35 நாட்கள் ஆகும். மாதவிடாய்ச் சிக்கல்களை அறிந்துகொள்ளும் முன்பதாக சாதாரணமான மாதவிடாய் வட்டம் பற்றி அறிந்து கொள்வது நல்லது.


சாதாரணமாக மாதவிடாய் ஏற்படும் முறை (Normal Menstrual Cycle)

மாதவிடாய் (Menstruation/ Period) என்று பொதுவாக அறியப்படுவது அல்லது மாதவிலக்கு என்பது ஒரு பூப்படைந்த பெண்ணின் உடலில், மாதந்தோறும் சுழற்சி முறையில் நிகழும் ஒரு உடலியங்கியல் மாற்றமாகும். இது பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதியிலுள்ள ஒரு உறுப்புக்களில் ஒன்றான கருப்பையிலிருந்து, யோனியினூடாக மாதத்தில் 3-7 நாட்கள் குருதியுடன் சேர்ந்து கருப்பையின் உள் சீதமென்சவ்வும் வெளியேறுவதை குறிக்கும்.


இடக்கரடக்கலாகவீட்டில்இல்லை,வீட்டிற்கு வெளியே, வீட்டுக்குத் தூரம், வீட்டு விலக்கு என்றும் சொல்வழக்கு உண்டு. மருத்துவப்படி, ஒவ்வொரு மாதமும், கருத்தரிப்பிற்கான தயார்ப்படுத்தலுக்காக, கருப்பையின் உள் மடிப்புகளில் (endometrium) போதிய இரத்தம் நிரம்பி இருக்கிறது. ஒரு பெண் கர்ப்பமடைவாரேயானால், கருப்பையில் தங்கும் கருக்கட்டிய முட்டைக்கு போதிய ஊட்டச்சத்தை வழங்குவதற்காகவே, இந்த குருதி நிறைந்த மடிப்புக்கள் உருவாகியிருக்கும். பெண் கருத்தரிக்காத நேரங்களில் இம்மடிப்புகளில் உள்ள தேவையற்ற இழையங்களும், அவற்றுடன் சேர்ந்து மடிப்புக்கள் இருக்கும் நுண்ணிய குருதிக் குழாய்களிலிருந்து வெளிவரும் குருதியும் வெளியே கழிவாக தள்ளப்படுகிறது. இந்நிகழ்வு மாதந்தோறும் சுமார் மூன்று முதல் ஏழு நாட்களுக்கு நடைபெறுகிறது. இதனையே மாதவிடாய் என்கிறோம். இந்த மாதவிடாய் வெளியேற்றம் மாதத்திற்கு ஒருமுறை யோனிமடல் ஊடாக நடைபெறுகிறது. இறுதி நாளோ அல்லது கடைசி இரு நாட்களோ வெளியேற்றம் குறைவாக இருக்கும். சில வேளைகளில் முதல் நாள் குறைவாக இருக்கும்.

கருத்தரித்திருக்கும் காலத்திலும் குழந்தை பிறந்த சில மாதங்களுக்கும் மாதவிடாய் இருப்பதில்லை. அதாவது, குருதிப்போக்கு இருப்பதில்லை. இச்சுழற்சி மீண்டும் துவங்கும்வரை, பாலூட்டும் காலத்தில்

மாதவிடாய் சுழற்சியை விவரிக்கும் படம்




மாதவிலக்குச் சுழற்சியையும், அதில் பங்கெடுக்கும் இயக்குநீர்களையும் காட்டும் வரைபடம்



கருத்தரிப்பு நடக்காது. சில குறிப்பிட்ட பாலூட்டும் பழக்கங்களை பின்பற்றினால் இந்த காலத்தை நீடிக்க முடியும். இதனை குடும்பக் கட்டுப்பாட்டு முறையாகவும் கையாளலாம்.

பெண் பூப்பெய்துவதற்கு ஒரு வருடம் முன்பே அவளது யோனியில் இருந்து கலங்கிய வெள்ளைத் திரவம் வெளியேறத் தொடங்கும். அது மர வண்ணமாக மாறும்போது அடிக்கடி வெளியேறும். அவள் பூப்பெய்தும் நேரம், இந்த நிகழ்வு 3-5 நாட்கள் என வெளியேற்றம் சீராகும். உடல் சமநிலைப்படும்போது 2-7 என இது நிலைப்படும்.

பெரும்பாலான பெண்கள் மாதவிடாயின் போது 50 மி.லி. வரை உதிரம் இழக்கிறார்கள். இந்த நாட்களில் தங்கள் உள்ளாடைகள் கறைபடாதிருக்க அணையாடை அல்லது அடைப்பான் (Napkins) பாவிக்கின்றனர். கர்ப்பம் தரித்திருப்பதற்கான முதல் அடையாளம் மாதவிலக்கு நிற்பது என்றாலும் சில வேளைகளில் கருத்தரிக்காமலேயே மாதவிலக்கு நின்றிருக்கும். மாதவிலக்கு நிற்பது இந்த நிலைக்கு உடல் இயக்கங்களும், நோய்களும் முக்கிய காரணமாக இருக்கும். குறிப்பாக புதிய இடங்களில் குடியேறுதல், புதிய சூழல்களில் பணியாற்றுதல், டீன் ஏஜ் பருவத்தின் கடைசியில் இருத்தல், அதிக கவலை, டென்ஷன், போன்ற மனநிலைகளில் இருத்தல், குறிப்பிட்ட காலத்தில் ஹார்மோன்கள் முட்டைகளை வெளியிடாத நிலை ஆகிய காரணங்களாலும் மாதவிலக்கு நின்றிருக்கும்.

## மாதவிடாய் நிறுத்தம் (Menopause)

மாதவிடாய் நிறுத்தம் என்பது, 45-70 வயது காலகட்டத்தில் ஒரு பெண்ணில் மாதவிடாயினால் ஏற்படும் உதிரப்போக்கு நின்றுவிடுவதைக் குறிக்கிறது. இக்காலத்தில் பெண்ணின் பாலின பண்பிற்கு காரணமான எஸ்ட்ரோஜன் எனும் நொதி சுரப்பது குறைகிறது. காரணமின்றி எரிச்சல்படுவது, உடல் வெப்பமடைதல், யோனி எரிச்சல் மற்றும் உலர்ந்திருத்தல் ஆகியன சில அறிகுறிகளாகும். மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பெண்கள், அதன் பின்னர் இனப்பெருக்கத்தில் பங்கேற்க இயலாது.

( இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் இடம்பெறும் )

நம்பிக்கை கொண்டோரே சகித்துக் கொள்ளுங்கள். சகிப்புத் தன்மையில் மற்றவர்களை மிகைத்து விடுங்கள். உறுதியாக நில்லுங்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள். வெற்றி பெறுவீர்கள்.

நீங்கள் எந்த நன்மையை செய்தாலும் அல்லாஹ் அதை அறிபவனாக இருக்கிறான்




அன்பின் தோழிக்கு,

நலமறிய ஆவல்.. பிரச்சினை ஆயிரம் என்று அடிக்கொரு முறை அலுத்துக் கொண்டாய்.

தோழி, வாழ்க்கை என்ற பயணத்தில் நாம் கற்றுக் கொள்ளும் பாடங்கள் ஏராளம். பிறந்தோம், வளர்ந்தோம், இறந்தோம் என்ற சராசரி வாழ்க்கையில் எவ்விதமான தடைகளோ வேதனைகளோ அவமானங்களோ இல்லை. ஆனால் சாதிக்க நினைக்கும் சரித்திர வாழ்வில் தடைகளும் வலிகளும் அதிகம் தானே. இப்படித் தான் வாழவேண்டுமென்று ஒரு சாராரும் எப்படியாவது வாழலாம் என்று ஒரு சாராரும் வாழ்கின்றனர். இவர்களால் கூட வாழ்ந்து விட இயலும். ஆனால் இப்படியும் அல்லாமல் அப்படியும் அல்லாமல் இருக்கும் இடைப்பட்ட பிரிவினரின் வாழ்க்கையே கடினமானதாக இருக்கிறது. சுயத்தைத் தொலைத்து விட்டு ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு வாழ்பவர்களின் நிலையோ அடிமை முறையாக உள்ளது. இருக்கிற இடம் தெரியாமல் இருந்து விட்டுப் போகலாம் என்ற மன நிலையினரோ உப்பு சப்பில்லாமல் வாழ்ந்து விட்டுப் போகிறார்கள். இவர்கள் இந்த பூமியில் எந்த சுவடையும் விட்டுச் செல்வதில்லை.

அன்பின் உறவே,ஒருவன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதை விட எப்படி வாழ்ந்தான் என்பதே சிறப்பாகும். நமக்கான பாதையில் தடுமாறாமல் தடம் மாறாமல் வாழ்வதே அழகானது. வாழ்க்கை ஒன்று; பார்வைகள் பல விதமாக இருக்கிறது. வாழ்க்கையை அதன் இயல்பிலேயே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அன்பின் புன்னகைகள்,ஆழமான நட்பின் தடயங்கள்,சின்ன சின்ன அன்பளிப்புகள் என்று நீளும் பட்டியலில் எல்லாமே “பொஸிடிவ்” ஆகி விடுவதில்லை.. “நெகடிவ் “ வைப்ஸ் வரும் போது அதனையும் எதிர் கொண்டு வாழ துணிந்து கொள்ள வேண்டும்..

இனிய நட்பே,தளர்ந்து போகா மனதை உன் வசமாக்கி கொள்.. உலகம் இப்படித்தான் என்று பழகிக் கொள் .. இயல்பாய் ஏற்றுக் கொள்..வாழ்க்கை வனப்பாகும்.


நல்லது தோழி.. பதில் கண்டு தொடர்கிறேன்.
நன்றி

இது உன் தேழி

ஹூமதா ஏ கப்பார்



# தற்கால பிரச்சினைகளிலிருந்து மீளுதல்...



கட்டுரை: ஹாஜரா கஸீஹுர் ரஹ்மான்

இந்து சமுத்திரத்தின் நித்திலமென முத்திரை பதித்து, இயற்கை எழில் கொஞ்சும் வளமும் செழிப்பும் வரமாய்ப் பெற்று, சுவர்க்காபுரி எனச் சோபனம் கூறப்பட்ட இலங்கைத் தேசம் இப்பூவுலகில் பேசப்படுகின்ற ஒரு குட்டித் தீவாகத் தடம் பதித்து நிற்கிறது.

அந்நியர் ஆதிக்கத்தின் கீழிருந்து விடுபட்டு சுதந்திரம் பெற்ற சுந்தர தேசத்தில் அன்றாட வாழ்வில் அவலங்களும், பிரச்சினைகளும், தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

அரசியல் கட்சிகள் தத்தம் வாக்கு வங்கிகளை நிரப்ப, இனவாதத்ததின் மூலம் சிறுபான்மையினரை நசுக்கி, அவர்களின் பொருளாதாரத்தைத் திட்டமிட்டு அழிப்பதன்மூலம் பிரதான சமயத்தவரின் பேரா தரவைப் பெற்று, தமது மணிமகுடத்தைச் சூடிக் கொள்கின்றன.

கொரோனாத் தொற்றுநோய்த் தாக்கம், இயற்கை அனர்த்தங்கள் போன்றவற்றினால் இலங்கைப் பொருளாதாரம் பாதிப்புற்றாலும் அனுபவ மற்ற அரசியல் வாதிகளின் தூரநோக்கற்ற செயற்பாடுகள், பிழையான பொருளாதாரத் திட்டங் கள், பொருத்தமற்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவற்றால் மக்களின் அன்றாட வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டிருப்பதுடன் சர்வதேச ரீதியாக நாடும் மக்களும் மீளமுடியாத கடன்சுமையில் மூழ்கித் தவிக்கின்றனர்.

தற்போது நாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாக டொலர்ப் பற்றாக்குறை, நாணயப் பெறுமான வீழ்ச்சி, இறக்குமதிப் பொருட்களுக்கான மட்டுப்படுத்தல்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் பிரதிபலிப்புகளாக எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு, தொடர்ச்சியான மின்துண்டிப்புக்கள், நீர்த் துண்டிப்பு என்பவற்றால் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் இரசாயன உர இறக்குமதித் தடையினால் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பலத்த பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளது. இதனால் நாட்டில் விலைவாசி அதிகரித்து பசி, பட்டினி, பஞ்சம், வறுமை, பொருட்கள் தட்டுப்பாடு, வரிசைகள் என்று பிரச்சினைகளின் பட்டியல்கள் நீண்டுகொண்டே செல்கின்றன. இதனிடையே மக்கள் புதியஆட்சி அமைக்க முயன்ற போதும் அதில் முழுமையான வெற்றி கிடைக்கவில்லை. ஆட்சியாளர்களும் அரசியல் வாதிகளும் நீயா நானாப் போராட்டம் நடத்தி தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதில் அக்கறை கொண்டுள் ளார்களே தவிர மக்கள் நலனில் எவ்வித கவனமும் அவர்களுக்கு இல்லை.

நாம் மீண்டும் பழமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம். அரை நூற்றாண்டு பின்னோக்கிச் சென்றிருக்கின்றோம். மாட்டுவண்டிப் பயணம், கால்நடைப்பயணம். விறகடுப்பு, குப்பிலாம்பு என்று எல்லாவற்றிலும் பழங்காலத்தை நோக்கிப் பயணித்துள்ளோம்.

உலகில் தீர்க்க முடியாத பிரச்சினை என்று எதுவுமே இல்லை. அன்றாடம் ஒரு சராசரி மனிதனின் வயிற்றை நிரப்ப முடிந்தாலே அரைவாசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து விடும். அரசியல் நெருக்கடிகள் தணிந்து நாடு வழமைக்குத் திரும்பினாலே பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு பிரச்சினைகளிலிருந்து மீட்சி பெற வழிகோலும். அத்தியாவசியமான பிரச்சினைகளுக்கு உடனடியாகத்தீர்வு கண்டாலே முறிந்து கிடக்கின்ற எமது நாட்டின் முதுகெலும்பை ஓரளவு நிமிர்த்த முடியும். இனவெறி, சாதி சமய முரண்பாடுகளைக் களைந்து, மறந்து நாட்டைக் கட்டியெழுப்புவதில் அனைவரும் கைகோர்க்க முன்வரவேண்டும்.

மக்களின் கழுத்தை நெரிக்கும் விலை வாசியைக் கட்டுப்படுத்த நாமும் சிலதை செய்ய வேண்டும்.

- அத்தியாவசியத் தேவைகளை முதன்மைப் படுத்தி அவற்றுக்கு முக்கியமளித்தல்
- விலைகூடிய பொருட்களைப் பகிரங்கமாகவே பகிஷ்கரித்தல்
- பொருட்களை வாங்கிப் பதுக்கி வைப்பதைத் தவிர்த்தல்.
- ஆசைகளுக்கு முக்கியத்துவம் அளிக்காது தேவை களுக்கு முக்கியத்துவமளித்தல்.
- அன்றாட உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளல்.
- ஆடம்பர உணவுவகைகளைத் தடை செய்தல்.
- வீண்விரயம் செய்வதைத் தவிர்த்தல்.

என்பவற்றின் மூலம் அன்றாடப் பிரச்சினைகளை ஓரளவு நிமிர்த்த முடியும்.

சிறந்த இராஜதந்திர செயற்பாடுகளையும் பொருத்தமான வெளிநாட்டுக் கொள்கைகளையும் முன்னெடுப்பதன் மூலம் வெளிநாடுளிமிருந்து உதவி கள், நன்கொடைகள், வட்டியில்லாக் கடன் கள், வெளிநாட்டு முதலீடு, சுற்றுலாத் துறை அபிவிருத்தி, அந்நியசெலாவணியைப் பெறும் நடவடிக்கை, வெளிநாட்டில் வாழும் இலங்கையர் மூலம் டொலர்களை வசூலித்து உதவியாகப் பெறல் என்பவற்றின் மூலம் ஓரளவு பொருளாதாரத்தை சீர் செய்ய முடியும்.

உலகில் எதுவுமே நிரந்தரம் இல்லை. பிரச்சினைகளும் நிலைத்திருப்பதில்லை. இறைவன் நாடினால் கண்ணிமைக்கும் பொழுதுக்குள் அனைத்தும் மாற்றம் காணும். நம்பிக்கையே வாழ்க்கை. நெருக்கடிகள் நீங்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

இதுவும் கடந்து போகும்..




தமிழ் சினிமா இற்றைக்கு சுமார் நூறு வருட நீண்ட வரலாற்றைக் கொண்டது. இன்றைய நவீன யுகத்தில் நாளுக்கு நாள் அதன் ஒவ்வொரு துறையும் அபாரமான தொழில்நுட்ப வளர்ச்சி கண்டு வியாபித்துக் கொண்டிருக்க அத்தகைய சினிமாவின் முக்கிய தூண்கள் எனக் கருதப்படும் பெண் கதாநாயகிகளின் நிலையோ கவலைக்கிடமாக அதல பாதாளத்தில் வீழ்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது என்றால் அது மிகையல்ல.

கனவுத் தொழிற்சாலை என பலராலும் வர்ணிக்கப் படும் சினிமாத் துறையில் ஒரு சில சினிமாக்களைத் தவிர பெரும்பாலான சினிமாக்களில் வெறும் வணிக நோக்கத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு பெண்கள் மிகவும் பிற்போக்குத்தனமான முறையில் சித்தரிக்கப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். விதிவிலக்காக பாலச்சந்தர் அவர்களின் 'அவள் ஒரு தொடர்கதை'சுஜாதா, பாலு மகேந்திரா அவர்களின் 'வீடு'அர்ச்சனா, பாரதிராஜாவின் 'புதுமைப்பெண்' ரேவதி என ஒரு சில நாயகிகள் புரட்சிப் பெண்ணாக ஒரு சில சினிமாக்களில் பேசப்பட்டிருந்தாலும் பெரும்பாலான பெண்கள் அரை குறை ஆடைகளுடன் ஆபாசக் காட்சிகளில் தோன்றுவது வேதனைக்குரியதொன்றாகும்.

தற்காலத்தில் பெண்கள் மீதான வன்முறைகள், ஒடுக்கு முறைகள், பாலியல் துஷ்பிரயோகக் காட்சிகள் மலிந்து காணப்படும் சினிமாக்கள் அதிகம் எனலாம். தரமுயர்ந்த நல்ல கதையம்சமுள்ள பெண்களைப் போற்றும் வகையிலான சினிமாக்களைக் காண்பதென்பது மிக அரிது. எக்காலத்திலும் சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் பொழுதைக் கழிக்க விரும்பி நாடும் இடம் வெள்ளித்திரைதான். எனினும் தற்கால சினிமாக்களை வெள்ளித்திரையில் குடும்பத்துடன் சேர்ந்து கண்டு களிப்பது மிகவும் அரிதாகவே இருக்கின்றது.

எந்தத் திரைப்படத்தை நோக்கினாலும் அங்கே முன்னணிக் கதாநாயகர்களுக்கு மாத்திரமே கதையின்

தொண்ணூறு வீதமான காட்சிகளை ஒதுக்கிவிட்டு பத்து வீதமான காட்சிகளில் வெறும் சதைப் பிண்டமாக பெண்கதாநாயகிகள் ஒருபாடலுக்குகவர்ச்சிநடனமாடி விட்டுச் செல்லும் நிலைதான் காணப்படுகின்றது. இத்தகைய காட்சிகளைக் கண்டு களித்து விட்டு அதனைப் பின் தொடர்ந்து பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் பால் இளைஞர்கள் ஈர்த்துச் செல்லப்படும் நிலை ஏற்படுகின்றது. பெண்களை சடப்பொருளாகக் கற்பித்து நல்லொழுக் கத்தை விடுத்து தீயொழுக்கத்தைப் போதிக்கும் சினிமாக்களின் பிற்போக்குத்தனமான செயற்பாடானது மிகவும் வேதனைக்குரியதும் கண்டிக்கத்தக்கதுமானதொன்றாகும்.

இரட்டை அர்த்த வசனங்களில் பெண்களை விளிப்பதும் அவர்களைக் கொச்சைப்படுத்திப் பேசுவதும் தற்கால திரைப்படங்களின் மெத்தனப் போக்காக இருக்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பெண் சுதந்திரம், பெண் சமத்துவம், பெண்ணுரிமை என பெண்களுக்காய் குரல் கொடுக்கும் சமூகமானதுதற்காலசினிமாவில்பெண்களின்இத்தகைய நிலைப்பாட்டைக் கண்டும் காணாமலிருப்பதும் தணிக்கைக் குழுக்கள் இத்தகைய சினிமாக்களுக்கு கண்மூடித்தனமாக யூ / ஏ சான்றிதழ் வழங்கி விட்டு வாளாவிருப்பதும் வேடிக்கைக்குரியதொன்றாகும்.

தமிழ் சினிமாவில் பெண் இயக்குனர்கள், பெண் கவிஞர்கள், பெண் நடன இயக்குனர்கள் என மிகச் சொற்ப அளவிலான பெண் ஆளுமைகளே காணப்படுகின்றனர். பொதுவாக திறமையுள்ள பெண்களை விடுத்து ஆண்களை முன்னிலைப் படுத்தும் நிலைப்பாடு திரைப்படத் துறையிலும் இருக்கத்தான் செய்கிறது. திரைப்படமொன்று காட்சி இடத் தொடங்கும் முன் திரையில் தோன்றும் வாசகங்களில் ஒன்றாக மட்டுமே 'பெண்களுக்கெதிரான வன்முறையை ஒழிப்போம்' என்று இருக்கிறதேயொழிய நடைமுறையில் எந்த மாற்றமுமில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

பெண் விடுதலை பற்றியும் பெண் சுதந்திரம் பற்றியும் முதலில் பேசியது ஆண்கள் தான். வணிக நோக்கத்திற்காகவும் விளம்பரத் தேவைக்காகவும் பெண்களை காட்சிப் பொருளாக மாற்றுவதும் ஆண்கள் தான். இதை உணர்ந்து சம்பந்தப்பட்ட பெண்கள் தங்களைத் தாங்களே மாற்றிக் கொண்டு சமுதாயத்தை சீர் செய்யும் உயரிய பணியை செவ்வனே செய்ய வேண்டும்.

அமிழ்ந்து பேரிருளா மறியாமையில்
அவல மெய்திக் கலையின்றி வாழ்வதை
தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டீரோ!

என்று பாரதி பாடி வைத்த புதுமைப் பெண்ணாக நாம் என்று மலர்வோம்?

# ஹைக்கூ

■
பனித்துளிகளை
கோர்த்து விளையாடும்
அருகம்புற்கள்

■
நீரருந்தும் குருவி
உற்றுப் பார்க்கிறது
குளத்தில் நிலா

■
உடைந்த சாளரக் கண்ணாடி
முழுதாகத் தெரியும்
பௌர்ணமி நிலவு

■
மரண வீட்டில் முணுமுணுப்பு
சந்தேகப்பட வைக்கும்
காயங்கள்

■
கிழக்கில் உதிக்கும் நிலவு
தன் சுயத்தை இழக்கும்
தோட்டத்து மலர்கள்

■
குறுக்கே சென்றேன்
என்னை கடந்ததும் விபத்துக்குள்ளானது
பூனை

■
குளத்தில் கூடும்
மேகத்தை பிரிக்கிறது
நீர் மேல் நடக்கும் வாத்து

■
இரவுச் சாலை
நிழலை விழுங்கியபடி
ஒற்றைத் தெருவிளக்கு

**ஷர்ஜிலா பர்வீன் யாகூப்**
கம்பம்




உலக வாழ்க்கையை சுவாரஸ்யமாக வாழ்வதற்கு எமக்கு உறவுகள் இன்றியமையாததாக உள்ளது. வெறுமனே மனிதன் உயிர்வாழ அத்தியாவசியமானது உணவு, உடை, உறையுள் என்று விஞ்ஞான ரீதியாக சொல்வார்கள். ஆனால் மனிதன் உணர்வுகளைத் தாங்கிய ஒரு உயிர்க்கூடு என்பதை மறந்துவிட்டார்கள் போலும். அவன் ஒன்றும் வெறும் ஜடமல்ல. தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள உறவுகள் அத்தியாவசியமாகின்றது.

உறவுகள் பலவிதமாகின்றது. இரத்த உறவு, அயலாரின் உறவு, தூரத்து உறவுகள், நட்புகள். இவற்றில் அல்லாஹ்வின் அருளிலிருந்தும் படைக்கப்பட்டதுதான் இந்த இரத்த உறவுகள். இப்போதெல்லாம் தூரத்து உறவுகள் காட்டக்கூடிய பாசத்தைக் கூட இவர்களிடம் எதிர்பார்க்க முடியாதுள்ளது. (எல்லோருமல்ல) இது ஏன்? அப்படியானால் ஜாஹிலிய்யாக் காலத்து மக்களைப் பற்றிநாம்ஆச்சரியப்படத்தேவையில்லைபோலுள்ளது. நபி (ஸல்) அவர்களைக் கொச்சைப்படுத்தியவர்கள், தூற்றியவர்கள், வசைபாடியவர்கள் எல்லோருமே அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தான். றஸூல் அவர்கள் மீது மண்ணை வாரி " நாசமாகுக!" என்று வீசியவரும் அவர்களின் சிறிய தந்தையான அபூலஹப் என்றால் ஆச்சரியமாகவில்லையா?

ஏன்? யூஸுப் நபியின் சரித்திரம் கூட நாம் அறிந்தது தானே. உடன்பிறப்புகளுக்கே பொறாமை ஏற்பட்டு அவர்களை பாழ் கிணற்றினுள் போட்டு விடுகிறார்கள். வழிப்போக்கர்களினால் அவர் உயிர் காப்பாற்றப்பட்டு ஏலத்திலிடப்பட்டு, பின்னர் எகிப்து நாட்டையே ஆளும் அரசனாக உயர்ந்த போது தான் உறவுகள் சரணடைகிறார்கள்.மொத்தத்தில் சொல்லப் போனால் பொறாமை எனும் தீ யாரையும் விட்டு வைப்பதில்லை. மனிதன் தோன்றும் போதே பொறாமையும் தோன்றிவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். ஹாபிழினதும் காபிழினதும் கதை கூட எமக்குத் தெரியும். இவற்றையெல்லாம் வென்று சவால்கள் பலதையும் முறியடித்து வாழ்வதுதான் வாழ்க்கை. ஒரு முஃமினின் வாழ்க்கையானது இன்பத்திற்கும் துன்பத்திற்கும் மத்தியிலும் சோதனைகளுக்கும் வேதனைகளுமிடையிலும் படைக்கப்பட்டுள்ளது, என்பதும் மனிதன் நடுநிலையான சமூகமாக படைக்கப்பட்டுள்ளான். என்பதும் நாம் அறிந்ததே. ஆனால் ஒன்று மட்டும் உண்மை. பொறாமைப்படுபவர்கள் பொறாமையினால் அழிந்தே போவார்கள். பொறாமை கொள்ளப்படுபவன் உயர்ந்து செல்வான். இது இறைநியதி. மற்ற உறவுகளை எடுத்தாலும் அநேகமானவை அப்படித்தான் தற்போது இருக்கிறது. ஒரு சிலரைத் தவிர. இவர்களைப் போல் நல்லவர்கள் இல்லை. இவர்கள் எமக்கு எப்பவும் ஆறுதலாக இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டிருப்போம். மனதில் உள்ளவற்றையெல்லாம் கொட்டித் தீர்த்திருப்போம். ஆனால் எதிர்பார்க்காத நேரம் எதிர்பார்க்காத விதத்தில் அவர்கள் மாறிவிடுவார்கள். அப்போது எமது உள்ளம் சுக்கு நூறாகிவிடும். ஏன்? பல வருடமான சில நட்புகள் கூட இவ்வாறு நடந்து கொள்வதை நினைத்தால் இதயம் கனக்கிறது. உலகம் போலியானது என்று இறைவன் எப்பவோ சொல்லிவிட்டானே. இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது? இவ்வாறான நடவடிக்கைகளால் நொந்துபோன உள்ளங்களுக்கு ஆறுதல் கொடுக்க எமக்கு இறைவன் தந்த வரம் தான் இந்த எழுத்தாற்றல். இதையும் நாம் வரையறை தாண்டி உள்ளங்களைப் புண்படுத்தாது எழுத வேண்டும். எழுத்துச் சுதந்திரம் என்பதற்காக பேனாவின் பின்னால் நாம் போகாமல் எமது பிடியுள் பேனா இருக்க வேண்டும். அவ்வாறு எழுதும் போதுதான் நொந்த உள்ளங்களுக்கு ஒற்றடம் கொடுப்பது போல் எமது ஆக்கங்கள் அமையும். அதாவது சமூகத்தின் வளைவு நெளிவுகளை கருத்திற் கொண்டு

எழுதுவது கடமையாகும். ஒருசிலர் எழுதுவது போல் நிஜ வாழ்க்கையில் நடப்பதில்லை. இது மற்றவர்களின் விமர்சனத்துக்கு ஆளாவது மட்டுமல்லாது அல்லாஹ்வின் சாபத்தையும் பெற நேரிடும். எழுதுபவர்கள் உலகையே வலம் வரலாம். உலகை தன் கைக்குள் கொண்டு வரலாம் என்றெல்லாம் சொல்வது ஒருபுறமிருக்க அவர்களில் ஒரு சிலருக்குள்ளும் இந்தப் பொறாமைத் தீ துளிர் விடாமலில்லை. மற்றவர்களின் உயர்ச்சியைத் தாங்கிக் கொள்ளாதவர்களும் சிலர் உள்ளனர். இவ்வாறான உளநோய்களைக் தகர்த்தெறிவதாக எமது ஆக்கங்கள் இருக்க வேண்டும். எமக்கு கிடைக்கும் நல் வாய்ப்புகள் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று அவர்களையும் கைகோர்த்து எழுத்துலகில் பயணிக்க வேண்டும். அப்போது தான் நாம் எதிர்பார்த்த இலக்கை அடையலாம்.

இப்போது தெளிவாகியிருக்கும் என நினைக்கிறேன். உலகில் எந்த உறவும் நிஜமானது அல்ல. அந்த நித்திய ஜீவன், நிகரில்லா அந்த ஏக வல்லவன் அவனின் தூய அன்பு மட்டும் தான் இந்த உலகிலும் ஏன் மறு உலகிலும் கூட நிரந்தரமானது, நிகரில்லாதது, நிஜமானது. அவனிடமே எமது ஏக்கங்களையும் சந்தோஷங்களையும் முறையிட வேண்டும். அதற்கு மிகவும் ஏற்ற தருணம் ஸஜ்தாவாகும்.




வைத்தியசாலையில் இருந்து வந்த ஹமீதா மிகவும் களைப்படைந்து காணப்பட்டாள். தன் மகளிடம் தனது தொலைபேசியை எடுத்து “புள்ள இதுல உள்ள நானாட நம்பருக்கு ஒரு கோல் எடுத்து தாரியா? அவனோட பேசி எத்தன நாள்”. என்றதும் வசிமாவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. என்னம்மா நீங்க எத்தன நாளா அவருக்கு நான் சொல்றேன். மெசேஜ்லயும் சொன்னேன். அவன் கண்டுக்கிறதாவே இல்ல பின்ன ஏன் நீங்க கெஞ்சுறீங்க.? ஒழுங்கா மருந்து குடிச்சுட்டு தூங்குங்க. தாய பாக்கணும்னு நெனச்சிருந்தா வந்திருப்பான். அவனுக்கு அந்த நினைவே இல்ல” என்று கூறிக் கொண்டே மருந்தையும் தண்ணீரையும் கொடுத்தாள்.

ஒன்றும் பதிலளிக்க முடியாது மருந்தை வாங்கி குடித்தாள். ஹமீதா. “பெரியம்மா” என்று கூப்பிட்டவாரே அப்போதுதான் ஹமீதாவின் தங்கை மகள் ரிசானாவும் அவள் கணவனும் வந்தனர் .அவர்கள் இருவரும் தான். அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர் . “மாமி இந்த ரிப்போர்ட் வேனில் இருந்துச்சு. பத்திரமா வச்சுக்கோங்க. கொஞ்சம் அவசரமா போகணும் கவனமா இருங்க டைமுக்கு மருந்துகள குடிங்க எதுவும் தேவன்டா எங்களுக்கு கோல் தாங்க“. என அன்பாக கூறிவிட்டு இருவரும் சென்றார்கள். ஹமீதாவுக்கு நோயால் உடல் வலி மட்டும் இல்லை மனதிற்குள்ளும் பாரிய வலி. அவர்கள் போன பின்பு பழைய நினைவுகள் அவள் கண் முன்னே வந்து அவளை வாட்டியது .

அவள் தங்கை மகள் ரிசானாவின் திருமணம் நடந்தது. அதற்கு முதல் முட்டுக்கட்டையாக எதிர்ப்பாக அவள் இருந்தது எல்லாம் நினைவுக்கு வந்தன. ஹமீதாவின் தங்கை மரியம் தாத்தாவிடம் மகள் கல்யாண விடயமாக முதன் முதல் தன் சகோதரி இடமே கூற வேண்டும் என எண்ணி வந்தாள். மாப்பிள்ளையை யார் என கேட்டதும் ஹமீதா விரண்டு விட்டாள். இப்படி யாரையும் கேட்காமலே முடிவு செஞ்சு ட்டியா? அந்த புள்ளய அவங்க எடுத்து வளர்த்தது எங்க பிறந்தவனோ எந்த மாதிரியான புள்ளயோ? மச்சானும் இதுக்கு சம்மதிச்சிட்டாரா? வேண்டியவங்களுக்கு பிள்ளைய கொடுக்கலாம் என்று முடிவு பண்ணினியா? உனக்கு என்ன பைத்தியமா?” சத்தம் போட ஆரம்பித்தாள் ஹமீதா. அவள் தங்கை மரியமோ “எனக்கும் தெரியும் தாத்தா அவர்கள் புள்ள இல்லை என்று வளர்த்தாங்க தான் ஆனா வளர்ப்புல இருந்து எந்த குறையும் நான் காணவில்லை. வாப்பாக்கு ஒதவியா கடைல இருக்காரு. எந்த கெட்ட பழக்கங்களும் இல்லை மார்க்க விடயங்களிலும் நல்ல பேணுதல். அவருக்கு பிறகு அவர்களுக்கு ஒரு ஆம்பள புள்ள ஒரு பொம்புள புள்ள அதுகளக்கூட தன் சொந்த தம்பி தங்கச்சியா பாக்குறாரு. எங்களுக்கும் விருப்பம். ரிசானாவும் சரின்டு சொல்லிட்டா.” கதையை முடிக்க விடவில்லை ஹமீதா “எப்படி விரும்புவீங்க? எங்கட குடும்ப கௌரவம் என்ன வளர்த்த பிள்ளைக்கு கட்டி குடுத்துட்டாங்கன்டு நாளைக்கு ஊர் சொல்லாது. நான் இதுல சம்பந்தப்பட விரும்பல. கல்யாணத்துக்கும் வரமாட்டேன்.” மரியம் இடை மறித்தாள். “ஊருலகம் அந்த கவலை எனக்கு இல்ல தாத்தா ஏனென்டா ஏண்ட மகளுக்கு ஒரு நல்ல இடம் பார்த்து யாரும் செஞ்சு வைக்கப் போறதும் இல்ல. நீங்களும் மச்சானும் தான் முன்னுக்கு நின்டு இத நடத்தி வைக்கணும். இப்படி சொன்னா எப்பிடி தாத்தா” கவலையோடு மரியம் கேட்டாள்.

“நான் பேச்ச வளர்க்க விரும்பல மரியம் எனக்கு இதுல துளியும் இஷ்டமில்லை. இதுக்கு மேல பேச ஒன்னும் இல்லை நானோ எங்கட புள்ளகளோ கல்யாணத்துக்கு வரப் போறதும் இல்ல” உறுதியாக ஹமீதா கூறினாள். மரியத்தின் இதயத்தை கவலை அப்பிக்கொள்ள அவளது கண்கள் இரண்டும் குள மாகின. சந்தோசமாக தனது சகோதரியின் வீட்டுக்கு

வந்தவள் நெஞ்சில் பெரும் பாரத்தோடு வீடு திரும்பினாள்.

ரிசானாவின் திருமணத்தின் பின்னர் அவர்கள் உறவில் ஒரு விரிசல். போக்குவரத்து குறைந்தது. கண்ட இடத்தில் மட்டும் பேசிக் கொள்வார்கள். ஒரே காரணம் வளர்த்த மகனுக்கு தன் மகளை கட்டிக் கொடுத்து விட்டாள் தங்கை என்பது மட்டுமே திருமணம் முடிந்தும் இப்போது மூன்று வருடங்கள் ஆகின்றன. ஹமீதாவின் கணவரும் காலமாகிவிட்டார். அவள் மகனும் தனது விருப்பத்திற்கு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டு போய் விட்டான். எப்போதாவது வந்து தாயை எட்டிப் பார்த்துவிட்டு செல்வான். அன்று திடீரென ஹமீதா வயிற்று வலி என்று மிகவும் வேதனை பட்டாள் . வீட்டில் இருந்த மகளிடம் கூற அவள் சகோதரனுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொல்லலாமென தீர்மானித்து எவ்வளவோ முயன்றும் அது செயலிழந்த நிலையில். ஹமீதாவின் மகளால் ஒன்றும் செய்ய முடியாத நிலை. அருகில் இருந்த முச்சக்கர வண்டிகள் தெரிந்தவர்களை கூப்பிட்டுப் பார்த்தாள். ஆனால் பெட்ரோலில்லை என பல காரணங்கள் சொல்லி மறுத்து விட்டனர். ஹமீதாவின் மகளுக்கு வேறு வழி இல்லை. தாய் படும் வேதனையை பார்த்துக் கொண்டிருக்கவும் முடியவில்லை தனது சாச்சியின் மகள் ரிசானாவுக்கு தகவல் சொல்லி அனுப்பினாள். ஏனென்றால் அவள் கணவனிடம் வாகனம் இருப்பது தெரியும். ஒருவேளை கூட்டிக்கொண்டு செல்வாளோ என எண்ணி அறிவித்ததும் தான் தாமதம் அவள் கணவனும் ரிசானாவும் தமது வாகனத்தில் வந்திறங்கி அவர்கள் இருவரும் அவளை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்கள். போக்குவரத்துகள் குறை வாகவும் சில நேரங்கள் அறவே இல்லாத நிலையிலும் இருந்ததால் யாருக்கும் அவசரமாக பார்க்கச் செல்லவும் தேவையான உணவுகளை கொண்டு சென்று கொடுக்கவும் முடியவில்லை. ரிசானாவின் கணவன் தான் தேவையான உணவு வகைகளையும் மற்றும் சாமான்களையும் கொண்டு சென்று கொடுத்தான். அவனோடு மரியமும் சேர்ந்து பார்த்து வந்தார்கள் .தன் மகனுக்கு தகவல் சொல்லி அனுப்ப வேண்டும் என ஹமீதாவின் வேண்டுகோளுக்கிணங்க தகவல் சொன்னதும் ஒரு நாள் வந்து ஹமீதாவின் மகன் பார்த்து விட்டு சென்றது சென்றதுதான். திரும்ப வரவே இல்லை. அது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது.

பெறாமகனாக இருந்தும் தன் தங்கையின் மருமகன் இவ்வளவு உதவிகள் செய்வது அவளால் நம்ப முடியவில்லை. இப்போது அவள் உணர்ந்து கொண்டாள் தான் செய்த தவறுகள் அவள் கண் முன்னால் நிழலாடின. இன்னாருக்கு இன்னார் என அல்லாஹ் நியமித்து இருக்கிறான்.

அவனுக்கு திருமணம் முடித்துக் கொடுத்த ஒரே காரணத்துக்காகத் தானே நான் தங்கையுடன் கோபப்பட்டு அவளை மனம் நோக பேசி விட்டேன். திருமணத்துக்கு கூட போகாது இருந்தேன். என மனதுக்குள் வெம்பிக் கொண்டு இருந்தாள் ஹமீதா.

"தாத்தா" என்ன கூப்பிட்ட சத்தம் அவளை சுய நினைவுக்கு கொண்டு வந்தது. "என்ன தாத்தா தூங்கினீங்களா? மருந்துகள பார்த்து குடிச்சீங்களா? இப்ப உடம்புக்கு எப்படி இருக்குது?" என கேள்விகளை அடுக்கியவாறு மரியம் வந்து அருகில் அமர்ந்தாள். மரியத்தின் முகத்தை பார்க்க அவளுக்கு திராணியில்லை. "ஏன் தாத்தா ஒரு மாதிரி இருக்கிறீங்க ஏதாவது வருத்தமா "என மரியம் கேட்க "என்ன நெனச்சி எனக்கே வெட்கமா இருக்குது வளர்த்த புள்ளைக்கு மகள கொடுக்காதன்டு சொல்லி உன்னோட எவ்வளவு சண்ட பிடிச்சேன் .நான் கல்யாணத்துக்கு கூட வரல. இப்ப பெத்த பிள்ளையை விட இவ்வளவு சிறப்பா அந்த புள்ள தான் எங்கள கவனிக்குது. உண்மையிலே எனக்கு அதுட முகத்தை பார்க்க கூட வெட்கமாயிரு க்குது மரியம்" என்று கூறிய வளை "ஓ அதுவா தாத்தா அது எல்லாம் இப்ப யோசிச்சு ஒரு பிரயோசனமும் இல்லை நடந்தது நடந்து போயிட்டு எல்லாம் இறைவன் நாட்டம் நீங்க உங்களின் நோயை குணமாக்குற வழியை பாருங்க பழசெல்லாம் மறந்திருங்க அல்லாஹ் இருக்கிறான் எல்லாருக்கும் துவா செய்து கொள்ளுங்க" என ஆறுதல் கூறியவாறு மரியம் அவ்விடத்தை விட்டு அகன்றாள். எல்லாம் அல்லாஹ்வின் தீர்ப்பு. என ஹமீதாவின் மனம் எண்ணியது மட்டுமல்ல இறைவன் படைப்பில் எதிர்பாராத சந்தர்ப்பத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவக்கூடியவர்களாகவே ஆக்கியுள்ளான். என அவள் மனம் மனதார இறைவனுக்கு நன்றி கூறியது.

இரண்டு பக்கமும் கூர்மையுள்ள
கத்தியை ஜாக்கிரதையாக
கையாளவேண்டும். இதே மாதிரி
எந்தப் பக்கமும் சேரக்கூடிய
மனிதர்களோடு
ஜாக்கிரதையாகப் பழகவேண்டும்.
– கண்ணதாசன்



# நான் காணும் உலகம்



**நேர்காணல்:**
**முஹம்மது ரிபாத்.**

**நேர் கண்டவர்:**
**லைலா அக்ஷியா.**

இந்த உலகில் எந்த ஒரு படைப்பும் ஏதோவோர் சிறந்த நோக்கத்திற்காக அல்லாமல் படைக்கப்படவில்லை. உயிருள்ளவை, உயிரற்றவை எல்லாமே தங்கள் பிறப்பின் அர்த்தங்களை ஒருகட்டத்தில் புரிந்து நடக்கும் போது அது படைக்கப்பட்டதன் நோக்கம் இதுதான் என்பதனை உலகத்திற்கு காட்டி விடுகின்றன.

மனிதர்களுள் ஆயிரம் வித்தியாசங்கள்.அந்த வித்தியாசங்களோடு பிறந்த மனிதன், அதே வித்தியாசத்திலிருந்து தனது தனித்துவத்தை வெளிப்படுத்தி காட்டுவதே அவனது விசேட திறமை. இன்று அப்படியான ஒரு திறமைசாலியோடு இந்த நேர்காணலை ஏற்படுத்துகின்றோம்.

- ***உங்களைப் பற்றிய அறிமுகம்***

● என் பெயர் ரிபாத். பிறப்பிடமும் வசிப்பிடமும் பதுளை மாவத்திலுள்ள வெலிமட. 31 வயதாகும் எனக்கு தாய்,தந்தை, தம்பி,தங்கை என அழகான குடும்பமுண்டு. இதுவரை பாடசாலை போகும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததில்லை. ஆனால், சிறிய அளவில் ஒரு வியாபாரம் தொடங்கத் திட்டமிட்டுள்ளேன். அதற்கு முன்பாக அம்பாந்தோட்டை பிரதேசத்திலுள்ள பார்வை யற்றவர்களுக்கான ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தில் இருந்து எனக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள். இன்ஷா அல்லாஹ், அங்கு போய் பயின்று ஏதாவது செய்யலாம் என நினைத்துள்ளேன்.

- ***உங்கள் கலைத்துறை ஈடுபாடு ஆர்வம் எவ்வாறு வந்தது? இப்பொழுது எவ்வாறு இருக்கிறது?***

● சிறுவயது என்றால் ஒரு ஐந்து அல்லது ஆறு வயதுக்குபின்தான் ஞாபகங்களைகளஞ்சியப்படுத்தும் ஒரு முதிர்ச்சி குழந்தைகளுக்கு வரும். பாடசாலை செல்வது, மத்ரஸா செல்வது,மற்றக் குழந்தைகளுடன் விளையாடுதல், வீட்டுப்பாடம் செய்தல் என பிள்ளைப் பருவம் என்பது சாதாரண தரம்,உயர்தரம் வரை இதே சுழற்சியில் தான் நடைபெறும். ஆனால் எனக்கு அந்த சந்தர்ப்பங்கள் இல்லையெனும் போது,காலை தொடக்கம் இரவுவரை வானொலி கேட்பதுதான் எனக்கிருந்த ஒரே ஈடுபாடு,மகிழ்ச்சி எல்லாம். அறிவிப்பாளர்களின் பேச்சில் ஈர்க்கப்பட்டு, அவர்களின் வித்தியாசமான நிகழ்ச்சிப் படைப்புகள் இவற்றின் மூலம்தான் கலைத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது. சுப்பர் சிங்கர்,ரியாலிட்டி ஷோ போன்ற நிகழ்ச்சிகள் மூலம் ஒரு அறிவிப்பாளராகவோ,அன்றி ஒரு பாடகனாகவோ ஆக வேண்டுமென்ற ஆர்வமும் ஆழ்மனதில் இருந்தது.இந்தியாவில் ஒருகாலத்தில் நடிகர்கள் எவ்வளவு பிரபலமோ அதே மாதிரி இங்கு, அறிவிப்பாளர்களுக்கும் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பிருந்தது. அதிலும் குறிப்பாக அறிவிப்பாளர்கள் A.R.V. லோஷன்,R.P அபர்ணா சுதன்,கனாதீபன் போன்றவர்களின் திறமையும் அவர்களுக்கிருந்த வரவேற்புமே இந்த ஆர்வம் ஏற்படக் காரணம் எனச் சொல்லலாம்.

நானும் பலவகையில் அறிவிப்பாளராக முயற்சி செய்தும், முடியாமல் போக, மக்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டுமென வட்சப் குரூப் ஆரம்பித்தேன். வாழ்வியல்போராட்டம், எமது தேவைகளுக்கான தேடல்கள் என்பன கலையார்வத்தை கொஞ்சம் பின்தள்ளி இரண்டாம் பட்சமாக்கி இருப்பதை மறுக்கவியலாது. அன்றாடத் தேவைகளுக்காக சாதாரண மக்களே போராட வேண்டியிருக்கையில், எங்களைப் போன்ற மாற்றுத் திறனாளிகளின் நிலைமை? தற்போது அவசியத் தேவைகள் கலையார்வத்தை முந்திக் கொண்டுள்ளன.

- ***உங்களின் இந்த நிலைமை பற்றியும் இதனால் நீங்கள் முகம் கொடுத்துள்ள சவால்களை பற்றியும் கூறுங்கள்!***

● எனக்கு "கஷ்டம் என்று ஒன்றுமில்லை. பார்வையின்மை எனக்கு பழக்கப்பட்ட ஒன்றுதான்". பார்வை இருந்து சில வருடங்கள் கழித்து என் பார்வையை இழந்திருந்தால், உண்மையில் கஷ்டமாகத்

தான் இருந்திருக்கும். இது ஆரம்பத்திலிருந்தே இப்படி என்பதால் பழகிவிட்டது. ஒரு விடயம் இருந்து, பிறகு இல்லாமல் போய்விட்டால் அது கண்டிப்பாக தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். என்னைப் பொறுத்த வரை அந்தமாதிரியான சங்கடங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களும்உண்டு.சிலநேரங்களில்,பார்வையற்ற காரணத்தால் ஒரு மூன்றாமவர் உதவி தேவைப்படக் கூடிய (அது வெளிப்பயணமாகக் கூட இருக்கலாம்) அந்த சந்தர்ப்பங்களில், எம்மை அலட்சியப் படுத்தி விட்டு,தம் தேவைகளை முடித்து ஆற அமர வந்து உதவி செய்ய முற்படுவார்கள். அச்சந்தர்ப்பத்தில் அந்த உதவி தேவைப்படாமல் போகலாம்.உரிய நேரத்தில் கிடைக்காத உதவிகள் பயனற்றவை.இதுமாதிரி நிறைய சவால்களை எதிர்கொண்டிருக்கிறேன். கொழும்பில் என்னைப் போல் பார்வையற்றவர்கள் யாரையும் துணைக்கழைக்காமல், வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் வெளியிடம் சென்று வருவார்கள். நானும் அதற்குரிய பயிற்சியை பெற்றிருந்தாலும் என் வீட்டில் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் தவிர்க்க முடியாத சில அத்தியாவசிய தேவைகள் காரணமாக, குடும்பத்தினருக்குத் தெரியாமல் ஓரிரு தூரப்பயணங்களும் சென்று வந்திருக்கிறேன்.

- ***உங்களது இந்த சவாலிலும் நீங்கள் பெற்ற வெற்றிகளாக எவற்றை கருதுகின்றீர்கள்?***

- சின்னச்சின்ன வெற்றிகள் அவ்வப்போது கிடைத்திருந்தாலும், இதுவரையில் குறிப்பிடும் அளவு எந்த வெற்றிகளையும் பெரிதாகப் பெற்றதில்லை. அதற்காகத் தான் போராடிக் கொண்டிருக்கிறேன். இன்ஷா அல்லாஹ்!

- ***இந்த சமூகத்திற்கு நீங்கள் கூற வேண்டியது என்ன?***

- இந்த சமூகத்துக்கு சொல்ல விரும்புவது, பார்வையற்றவர்கள் என்றில்லை,விசேட தேவைக்கு ரியவர் என்பது செவிப்புலனற்றவர்கள், வாய் பேச முடியாதவர்கள், மற்ற அங்கங்களில் குறைபாடு உடையவர்கள், மூளை வளர்ச்சி குன்றியவர்கள் எனப் பலர், பல சமூகங்களிலும் இருக்கிறார்கள். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையை விட இப்போது விசேட தேவைக்குரியவர்களின் நிலைமை முன்னேற்றமடைந்திருக்கிறது என்பது உண்மை. ஆயினும், இன்னும் இது முன்னேற்றம் காணவேண்டும். சில இடங்களில் கிடைக்கக் கூடிய வசதி வாய்ப்புகள் சில இடங்களில் கிடைப்பது குறைவு. அதனால் அவர்களுக்குரிய உரிமைகளை கண்டிப்பாக இந்த சமூகம் கொடுத்தாக வேண்டும். சிலரின் குடும்பத்தினர் நினைப்பது உணவு, உடை, இருப்பிடத்துடன் அவர்களின் தேவை முடிந்து விடுவதாக. ஆனால் அதற்கு அப்பால் அவர்களுக்கென பல கனவுகள், இலட்சியங்கள் இருக்கலாம். அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சமூகத்தை நாம் கட்டமைக்க வேண்டும். வெளிநாட்டில் இப்படியான குறைபாடுள்ளவர்களின் சாதனைகளை பிரமித்து பாராட்டும் நம்மவர்கள், பக்கத்தில் இருப்பவரின் திறமைகளைக் கண்டு கொள்வதே இல்லை. இவர்களைத் தலையில் வைத்து கொண்டாட வேண்டியதில்லை.ஆனால் இவர்களின் உணர்வுக்கு மதிப்புக் கொடுத்து நீங்கள் எந்த தரத்தில் இருக்கிறீர்களோ, அதே தரத்தில் வைத்து சமமாக நடத்தலாமே! எம் அங்கங்களில் தான் குறைபாடே தவிர, நாமும் உங்களைப் போன்ற உணர்வுகளுள்ள சாதாரண மனிதப்பிறவிகள் தானே?

- ***சமூக தொடர்புகளை எவ்வாறு இலகு வாக்கிக் கொள்கிறீர்கள்?***

- சமூகத் தொடர்புகள் என ஏற்பட்டது கடந்த நாலைந்து வருடங்களாக, போன் பாவனை வந்தபிறகு தான் எனச் சொல்லலாம். வானொலியுடனான ஈடுபாடு, வானொலிச் சேவைக்கு அழைப் பெடுப்பது, பேசுவது என்பன வானொலியொடு தொடர்புடையவர்கள் அடிக்கடி வானொலிக்கு பேசுபவர்கள் மூலம் 'கலைவட்டம்' என ஒன்று தொடர்பில் வந்தது. அதன்மூலம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் உள்ளவர் கள், கலைத்துறையில் சம்பந்தப்பட்டவர்கள் என தொடர்புகள் விரிவடைந்து அவர்களின்அறிமுகமும்கிடைக்கப்பெற்று,அந்தசமயம்தான் android போன் பாவனைக்கு வந்தது. அதில் இருந்த talk back எனும் option என் போன்றவர்களுக்கு அனுகூலமாக அமைந்தது எனச் சொல்லலாம். எமக்கு கிடைக்கும் குறுஞ்செய்திகளை,ஒரு குரல் பதிவின் மூலம் கேட்கக் கூடிய வசதியும் வாய்ப்பும் கிடைத்தது. இதனால் எனக்கு சமூகத்துடனான தொடர்புகள் விரிவாகி இன்று வட்ஸப்பில் ஐந்து குழுமங்களை ஆரம்பித்து நிர்வகிக்கக்கூடிய நிலமைக்கு வந்து, நமது சமூகத்துக்கு நன்மை செய்யக்கூடிய கலைத்துறையில் இருக்கும் முன்னணி எழுத்தாளர்கள், அறிவிப்பாளர்கள்எனபல்துறைகளிலும்உள்ளோருடனான தொடர்பாடலையும்,நட்பையும் ஏற்படுத்தி தந்திருக்கிறது. இப்படி சீராகப் போய்க் கொண்டிருக்கும் சமூக தொடர்பாடலும் நட்பும் தொடர்ந்து நீடித்து நிலைக்க வேண்டும்.

- ***உங்கள் இலட்சியம் என்ன?***

- இலட்சியம் முன்பு இருந்தது தான். ஒரு அறிவிப்பாளராகவோ அல்லது ஒரு பாடகனாகவோ வரவேண்டுமென்ற அந்த லட்சியம் இப்போது நாடு இருக்கும் சூழலில் அதை நிறைவேற்றமுடியுமா என்ற சந்தேகமும் கேள்விக்குறியும் தான் எஞ்சி நிற்கின்றன. ஒரு மனிதன் வாழும் சாதாரண வாழ்க்கைக்கே அன்றாடம் போராட வேண்டிய சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இதில் இலட்சியத்தை வாழ்க்கைப் போராட்டம் முந்திக்கொள்ள, இன்றைய சூழலில் அந்த சாதாரண வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்வதே பெரிய இலட்சியம் தான்.




அருளாலன் அல்லாஹ் வையகத்தைப் படைத்து அதிலே உயர்ந்த ஆத்மாவாக மனித குலத்தைப்படைத்து அந்த மனித சமுதாயம் வளமோடு வாழ நல்ல பல வாழ்வியல் வழிகளை கூறும் வான்மறையை தந்து வழிக்காட்டினான் இறைத்தூதர் நபிகளார் ( ஸல்) அவர்களின் மூலம்.

அந்தமனித சமூகம் பரவி பெருகவும் பந்தங்களின் மூலம் அன்பு, பாசம், காதல், மகிழ்ச்சி இவைகளை பகிர்ந்துக் கொள்ள மனித உறவு களைத்தந்தான். அதன் மூலம் திருமணத்தை அருட்கொடையாக வழங்கி வாழவழிகளையும் வகுத்துக்காட்ட தூதர்களையும் நபிமார்களையும்,நல் லடியார்களையும் தந்து சீர்படுத்தினான்.

திருமண பந்தத்தின்மூலம் மனிதனை பரவச் செய்து இறை நம்பிக்கையாளர்களாக வாழச் செய்தான். ஆகவே திருமணத்தை மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக ஆண்பெண் இருவரின் வாழ்க்கை ஒப்பந்தமாகவும் ஆக்கினான். அதாவது கணவன் மனைவியாக வாழும்வரை இவ் ஒப்பந்தம் செல்லுப்படியாகிறது. இல்லாத பட்சத்தில் ஒப்பந்தத்தை முறித்துக்கொள்ளும், உரிமை சட்டத்தை தலாக் என்ற ரீதியில் அமைக்கப் பட்டுள்ளது.

எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளது படிப்பில் மட்டும் அக்கறைக் காட்டாது வீட்டு வேலைகளையும் சரிவர செய்யவும் பழக்கவேண்டும். படிப்பை முடித்தவுடன் திருமணபந்தத்தில் இணைத்துவிடும்நமது பெற்றோர்கள்புரியவேண்டும் திருமணம் என்பது ஒருபாரிய பொறுப்பான புது வாழ்வுக்குள் புகுத்துவதாகும்.புத்தகமும் பேனாவும் மொபைலுடனும் நாளாந்தம் நாட்களை கழித்த இவர்கள் எப்படி திடீரென இன்னுமொரு சூழலோடு மாறுபடுவார்கள் என்று. ஆகவே நாம்முதலில் அவர்களை மாற்றவேண்டும்.புது உறவுகளோடு வாழ வழிகளை செய்தாகவேண்டும். ஏனென்றால் கணவர் வீட்டார்களும் தன் மகனுக்கு வரும் மருமகள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். தாய்வீட்டின் செல்லப்பிள்ளை என்பதை மறந்து அந்தநேரத்தில் செய்வதறியாது திண்டாடும் சின்னஞ்சிறுசுகளின் சிறுசிறு பிரச்சினை களே குழப்பத்தோடு விரிசலுக்கும் வழி வகுக்கின்றன.

எனவே பெற்றோர்கள் இளவயது திருமணங் களை செய்து வைக்குமுன்பு நன்கு அவதானிக்கவேண்டிய முக்கிய விடயம் தமது பிள்ளைகளுக்கு சன்மார்க்க ரீதியான வாழ்வியலை கற்றுக் கொடுப்பதோடு .நல்லபல அறிவுரைகளையும் அழகாக சொல்லிக்கொடுக்க வேண்டும். இவ்வாறான நடைமுறைகளை பின்பற்றி வளர்க்கப்படும் போது திருமணவாழ்வில் ஏற்படும் முறிவுகள் பிரச்சினைகள் என்பன தவிர்க்கப்படும் என்பதை சொல்லிக் கொள்ள முனைகிறேன். இள வயதினருக்கான இனிதான வழி காட்டலே இல்லறத்தை சிறக்கச் செய்யும் ஆயுதமாகும் என்பதையும் நினைவில் கொள்வோம்.

மேலும் பிரச்சினைகள் ஏற்படாதிருக்க எவ்வாறான துணைகளை தெரிவு செய்ய வேண்டும் அப்போதும் பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பவை பற்றிய தெளிவை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் தொடர்வோம்

# குடும்ப வாழ்க்கை


## சகாப்தீன் அக்கீலா பானு

பெரியநீலாவணை - 02, கல்முனை


மனித வாழ்வில் குடும்ப வாழ்க்கை என்பது முக்கிய இடம் பெறுகின்றது. "குடும்பம் ஒரு கதம்பம் "என்பது ஒரு கலைமொழி ஒரு மனிதன் சிறந்த குடும்ப வாழ்க்கையில் இணையும் போது பல்வேறுபட்ட அனுபவங்களை பெற்றுக் கொள்கின்றான் இன்பமோ துன்பமோ நல்லதோ கெட்டதோ தாழ்வோ உயர்வோ என பல தாத்பரியங்களை அடைகின்றான். இதன் நிமித்தமே குடும்பம் ஒரு கதம்பம் என சொல்லப்படுகின்றது.

குடும்ப வாழ்க்கை என்னும் போது கணவன் மனைவி பிள்ளைகள் ஒன்றாக வாழ்வது ஆகும். இவ்வாறான வாழ்க்கை ஒரு அர்த்தமுள்ள ஏனையவருக்கு படிப்பினை தரக்கூடிய இறைவனுக்கு பொருத்தமான வாழ்க்கையாக அமைய வேண்டும். அப்போதுதான் அது சிறந்த வாழ்க்கையாக அமையும்.

பொதுவாக குடும்பம் என்ற சொல்லை பார்த்து நோக்கும் போது குடு + இன்பம் என பொருள்கொள்ளலாம். அதாவது சந்தோஷம் நிறைந்த குடும்பத்தை நாமே உருவாக்க வேண்டும் மாறாக இன்பம் என்பது தானாக வந்து சேராது. நாம் தேடுவது நமக்கு வந்து சேரும் என்பது போல் சந்தோசத்தை நாமே வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் எல்லோருடைய குடும்பத்திலும் தனியே சந்தோசம் துக்கம் என நிலவுவதில்லை வாழ்க்கை என்றால் இன்பம் துன்பம் இரண்டும் கலந்ததே வாழ்க்கையாகும். மேடு பள்ளம் என்பது இயற்கையாகும். சோதனைகள் வரும்போது அது பல அனுபவங்களையும் படிப்பினைகளையும் தருகின்றது. ஒரு மனிதன் சந்தோஷமாக இருக்கின்ற போது வருகின்ற தத்துவங்களை விட துக்கத்திலும் வறுமையிலும் இருக்கும்போதே தத்துவங்களும் வரலாற்று சிந்தனைகளும் பிறக்கின்றன எனலாம்.

மேலும் குடும்ப வாழ்க்கை என்பது ஒரு ஆழ்ந்த பரப்பாகும். அது தொடர்பாக எவ்வளவு தூரமும் பேசலாம் "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பது ஒரு குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவரின் சிறந்த பண்பாடும், ஒழுக்கமும், கல்வி ஞானமும் உடையவர்களாக விளங்கும் போது அக்குடும்பம் சிறந்த அறிவுக் கலைகளை கொண்ட சந்தோஷமான குடும்பமாக திகழும் இதனைப் பார்த்து ஏனையவர்களும் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதே அழகிய குடும்பத்தின் அந்தஸ்தாகும்.

கணவன் மனைவி வாழ்க்கையை பொறுத் தளவில் அவர்களுக்கிடையில் அன்பு, விட்டுக்கொடுப்பு, போட்டியின்மை, புரிந்துணர்வு, ஒளிவு மறைவின்மை, சகிப்புத்தன்மை, பொறுமை, ஒழுக்கம் என பல நற்பண்புகள் காணப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களது பிள்ளைகள் அவர்களைப் போன்று வாழ்வதற்கு உறுதுணையாக இருக்கும்.


குடும்பத்தலைவியோ தலைவனோ வருமா னத்துக்கு மீதமான செலவு செய்தல், தேவையற்ற விடயங்களுக்காக கடன் படுதல், அளவுக்கு மீறிய ஆசை, பொய் சொல்லுதல், நவீன வாழ்க்கைக்கு அடிமையாதல், சூதாட்டத்தில் ஈடுபடுதல் போன்ற அனைத்து தீய பழக்க வழக்கங்களை முற்றாக தவிர்த்து நடக்க வேண்டும். ஹலாலான உணவை உண்டு தமது பிள்ளைகளுக்கும் கொடுக்கும்போது அவர்களுக்கும் நல்லெண்ணம், நம்பிக்கை, ஈமானும் ஏற்படும்.


இஸ்லாத்தைப் பொறுத்தவரை "ஹராமான உணவை உட்கொள்கின்ற எந்த ஒரு நபரின் துஆவும் அல்லாஹ்வை சென்றடையாது". என்பது ஹதீஸ் ஆகும். பொதுவாகவே பெற்றோர்கள் தனது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு துஆ செய்ய வேண்டும். அதேபோன்று பிள்ளைகளும் பெற்றோருக்கு துஆ செய்ய வேண்டும்.

வாழ்க்கை என்பது திட்டமிட்டு நடாத்தப்பட வேண்டும் ஒரு வண்டி சரியாக உருண்டு செல்ல வேண்டும் என்றால் அதன் அச்சாணியும் இரண்டு சக்கரங்களும் சரியாக காணப்பட வேண்டும் இதில் ஒன்று சிறியதாக இருந்தாலும் அந்த வண்டி ஓடாது. இதுபோன்றுதான் வாழ்க்கையும் வேகமாக சென்றாலும் ஏதோ ஓரிடத்தில் கழன்று விடக்கூடும். எனவே தான் எதனையும் அளவோடு கொண்டு செல்லும் போது அது சிறப்பாக அமையும்.

கணவனுக்கு பணிந்து மனைவி நடக்க வேண்டும் அதேநேரம் மனைவியின் உரிமைகளை கடமைகளை, தேவைகளை கணவனும் மதிக்க வேண்டும் கணவன் வெளியே சென்றால் மனைவி கற்பு, சொத்து, பிள்ளைகள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டும்.

மேலும் கணவன் மனைவிக்கிடையே சில நேரங்களில் பிரச்சினைகள் தோன்றலாம் இவ்வாறான பிரச்சனைகள் விரிசல்களாகி விவாகரத்து வரை செல்வதற்கு மூன்றாம் நபர் காரணமாக இருப்பார்கள். கணவன் மனைவி இருவரினதும் பெற்றோர்கள் சகோதரர்கள் போன்றோரைக் காரணமாக சுட்டிக்காட்டலாம். சின்ன சின்ன விடயங்களுக்கு மனஸ் தாபங்களை ஏற்படுத்தி பிரிவினைகளை ஏற்படுத்து கின்றனர் இவ்வாறான விடயங்கள் இஸ்லாத்தில் கடுமையாக எச்சரிக்கப்படுகின்றது. தவிர்க்க முடியாத காரணம் தவிர கணவன் மனைவி விவாகரத்து முற்றாக தவிர்க்கப்பட வேண்டும் விவாகரத்து ஒன்று ஏற்படும் போது அல்லாஹ்வின் அர்சு நடுங்குகின்றது என கூறப்படுகின்றது. பிரிவு என்பது குறித்த நபர்களை மட்டும் அன்றி குடும்பத்தில் உள்ள அனைவரையும் பாதிக்கின்றது. பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. இஸ்லாத்தைப் பொறுத்தவரை மனித வாழ்வின் அன்றாட நடவடிக்கைகள் அனைத்துக்கும் உரிய வழிமுறைகளை காட்டித் தருகின்றது. அனைத்து பிரச்சினைகளுக்கும் இஸ்லாத்தில் தீர்வு உண்டு. மேலும் ஒரு குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு பிள்ளைகள் பேணி வளர்க்கப்பட வேண்டும் சிறந்த மார்க்கக் கல்வி, உலகக் கல்வி வீட்டின் பொருளாதார நிலைமை என்பதை சரியான வயதில் எடுத்துக் கூறி நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளை உருவாக்குவது ஒவ்வொரு பெற்றோரின் மீதும் கடமையாகும். எனவே தான் குடும்பம் என்னும் பந்து கவனமாக நகர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் அக்குடும்பத்தினால் தனக்கும் சமூகத்துக்கும் ஊருக்கும் நாட்டுக்கும் தேசத்துக்கும் பங்கம் ஏற்படுத்தாமல் இருக்கும் என்பதில் எவ்விதமான ஐயமும் இல்லை.






கவிதை : [illegible]

நீ விதைத்த நேசங்கள் தான்
என்னுள் சுவாசமாகிக்  காற்று வெளியில்
கவிதை சொல்லிக் கொண்டிருக்கின்றன...

ஒரு கூடைப் பூக்கள் கொடுத்து
உறவாடிய நேசம் இல்லை –
இது பல கோடிப் புரிதல்களால்
உயிராகிய நேசம் .

வனப்பு மிக்கவொரு பட்டமாய்
உயர உயரப் பறக்கிறேன்...
பத்திரமாய்ப் பக்குவமாய் நூல் விட்டுத்
தரையிறக்கு கின்றாய் என் அன்பே...

பூத்துச்சிரிக்கும் இந்தப் பூவனத்தை
காத்துச் சிறப்பிக்கின்றாய்
ஒரு முள்வேலியாக...
அதிசயமுத்தொன்றைப் பெற்றுத்
தொலைத்து விடக்கூடாதென
சிப்பியாய்க் காவலிருக்கின்றாய்...

உனக்குள் ஒளிந்திருப்பதுதான்
எத்தனை இனிமை....
நிழலாய் .. நிஜமாய்த் தொடர்ந்திருக்கின்றாய்
நான் தளர்ந்திடாமல்.....
மொத்தத்தில் ஒரு கேடயமாய் நீ.

என் நெஞ்சத்தில் துளி வலியும்
கூடாதென கூடவே யிருக்கின்றாய்..
என் எண்ணங்களை வண்ணங்களாக்கும்
உன் நேசம் வரம்தான் எனக்கு

மெய்யன்பின் வரலாறு இங்கே
பூத்துச் சிரிக்கின்றது

நான் சிறைப்பட்டிருப்பதெல்லாம்
இரும்புக் கோட்டைக்குள் அல்ல.. உன்
இதயக் கோட்டைக்குள் அதனால்தான்
ஆனந்தம் இங்கே கொட்டிக்கிடக்கின்றது.

உன் மூச்சுக்குள் சிறைப்பட்டிருக்கும்..
இந்த வாழ்க்கை நந்தவனமாய்...
நம்முறவு நந்தா விளக்காய்...




ஒத்தயடிப் பாதையிலே
ஒத்தயாகப் போறவளே
விறகுக்கட்டை  தூக்கிகிட்டு
வேகமாகப் போகுறாயே
உன் காலு கொலுசு சப்தம்
சங்கீதம் பாடுது
உன் மனதில் நான்
மறைக்காமல் சொல்லிவிடு
என்ட காதலை ஏத்திடு
நான் கரம்பிடிக்க காத்திருக்கன்
இவனெளியவன் என்றெண்ணி
ஏளனமாக பாக்காத உன்னை
தாவணி பாவாடை
தவிட்டுக்கலரில் இருக்குது
அது  கண்ணிரண்டைப் பறிக்குது
கண்ஜாடை காட்டுறியே
கள்ளத்தனமா சிரிக்கிறியே.
மனதுக்கு பிடித்தவளே  என்ட
இதயத்தை  திருடிட்டியே
காலமெல்லாம் பாத்துக்கிவன்
(ம்) என்று சொல்லிவிடு
ஊரறிய பெண் கேட்க
என்ட ஆத்தாவை அனுப்பி
வைத்திருக்கன் நம்ம
காதல சேர்த்து வைக்க

- நன்மை செய்வதற்கும், (இறைவனை) அஞ்சுவதற்கும், மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் உங்கள் சத்தியங்கள் மூலம் அல்லாஹ்வை தடையாக ஆக்காதீர்கள்! அல்லாஹ் செவியுறுபவன்; அறிந்தவன்.
- ஒருவனை மனிதனாக ஆக்குபவை உதவிகளும் வசதிகளும் அல்ல, அவனுக்கு ஏற்படும் இடையூறுகளும் துன்பங்களுமே ஆகும்.

# அவள் தாயாகிறாள்



சிறுகதை

எம்.எஸ்.நஸ்பியா -வரிப்பத்தான்சேனை

அந்தி சாயும் அந்த அழகிய மாலைப்பொழுது அந்த வீடு பரபரப்பாய் இயங்கிக்கொண்டிருந்தது. "அவங்க வர்ர நேரம் இப்படி வாசல அலங்கோலமா வைக்காம சீக்கிரம் கூட்டி துப்பரவாக்குங்க வாறவங்க பார்த்தா என்ன நெனப்பாங்க" அந்த கூட்டத்தில் இருந்த மூத்தவரான அந்த வயதான பெண்மணியின் குரல் இப்படி ஒலித்தது. " வாங்கிற சாமான் எல்லாம் வாங்கி வச்சிட்டீங்களா பிறகு அவங்க வந்த பிறகு அது இல்ல இது இல்ல என சொல்லக்கூடாது சொல்லிட்டேன்" இது தந்தையின் குரல். "அது சரி பொண்ணை அலங்காரம் பண்ணிட்டீங்களா? என்ன செய்றா ஆயிஷா "என சகோதரன் கேட்கும் போதே ஆயிஷா "ஆமா நாநா பொண்ணு ரெடியாத்தான் இருக்கா? பொண்ண எப்பவோ அலங்கரிச்சிட்டோம்" என சிரித்த படி கூறிக்கொண்டு சென்று கொண்டிருந்தாள் ஆயிஷா.

மறு அறையில் அலங்கரிக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தாள் சிபாயா.ஒரு பொம்மை போல் காட்சியளித்த அவளின் மனதில் தான் எத்தனை ஏக்கங்கள், தவிப்புகள், ஆசைகள் நாற்பது வயதை தாண்டிய சிபாயாவிற்கு பெண் பார்க்க வருவதென்பது இது முதல் தடவையல்ல இதற்கு முன் பல தடவைகள் எத்தனையோ பேர் வந்து பார்த்து விட்டு போயாகி விட்டது. ஒவ்வொரு தடவையும் இப்படித்தான் தன்னை அலங்கரித்துக் கொண்டு அழகுப் பதுமையாய் காட்சிப் பொருளாய் அமர்ந்திருப்பது தான் மிச்சம்.பெண் பார்க்க வருபவர்கள் பெண் பார்க்க வருவதோடு சரி அதையும் தாண்டி திருமணம் என்ற பந்தந்திற்குள் சிபாயா நுழைய இது வரை யாரும் இடம் கொடுத்ததில்லை.

கேட்டால் பெண் பருமன், வயது அதிகம், பெண்ணுக்கு தொழில் இல்லை என பல காரணங்கள் கூறி கடந்து சென்றனர். இத்தனைக்கும் அவள் அழகற்றவளோ கறுப்பானவளோ திமிர் பிடிச்சவளோ இல்லை. நல்ல ஒழுக்கமான குணமான மார்க்கப்பற்றுள்ள பிறரை குறை கூறாத ஏழைகளோடு இரங்கக் கூடிய பெண் தான் அவளும் ஆனால் திருமணம் என்பது எட்டாக்கனியாகவே இருந்தது அவள் வாழ்வில் இந்த முறை பெண் பார்க்கும் படலத்தில் அவள் விருப்பமின்றி இருந்தாலும் பெற்றோரின் வற்புறுத்தலுக்காக தலையாட்டும் பொம்மையானாள் சிபாயா. "எல்லோரும் வந்திட்டாங்க வாங்க வாங்க "என்ற குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்த சிபாயா கண்களில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள்.

வந்தவர்கள் முன் அமர்த்தப்பட்ட சிபாயாவைக் கண்டதும் மாப்பிள்ளையுடன் வந்த மாப்பிள்ளையின் உறவினில் ஒருத்தி "பொண்ணு நல்லாத்தான் இருக்கு ஆனா பார்க்க வயசு கூட மாதிரி தெரியுது எங்க புள்ள சின்ன பையன் இப்ப தான் அவனுக்கு முப்பது வயசாகுது அதனால ..

"என இழுத்த போதே சிபாயாவிற்கு வந்ததே கோபம் "போதும் நிறுத்துங்க இதுக்குத்தான் எனக்கு கல்யாணமே வேண்டாம் என்றேன் கேட்டீங்களா?"என தன் பெற்றோரை திரும்பிப் பார்த்துக் கேட்டவள் மீண்டும் தொடர்ந்தாள்.

"பெண்கள் முதிர்கன்னியா இருக்கிறதுக்கு இந்த சீரழிஞ்ச சமுதாயம் தான் காரணமா இருக்கு ஏன்? எங்க உணர்ச்சிகள புரிஞ்சிக்க மறுக்கிறீங்க எங்களுக்கும் உணர்ச்சிகள் இருக்கு ஆசைகள் இருக்கு திருமணம் என்ற பேச்செடுத்தாலே முதல்ல ஆரம்பிக்கிற விஷயம் சீதனம் அதுவே ஒரு ஏழைக் குமராக இருந்தால் அதனாலே அந்த திருமணம் தள்ளிப் போகுது அது மட்டுமா?பெண் கறுப்பு ,பெண் பெருப்பம் ,படிப்பறிவில்ல ,பொண்ணுக்குத் தொழில் இல்ல இப்படியே ஒவ்வொரு காரணங்களால் திருமணம் தள்ளிப்போய் கடைசியாய் வந்து நிற்பது இந்த வயது பிரச்சினை தான் பாவம் ஏழைக்குமர் என வாழ்க்கை குடுக்க யாரும் முன் வர மாட்டாங்க ஆனா இப்படி பல காரணங்களால் திருமணம் தடைபட்டு வயசும் கூடும் போது வந்து சொல்வது பொண்ணுக்கு வயசு கூட என்று பெண்களின் உணர்ச்சிகளை மதிக்கத் தெரியாத இந்த சமுதாயத்தில் வாழ்றத விட இப்படியே இருப்பது எவ்வளவோ மேல் உம்மா வாப்பா உங்க எல்லாருக்கும் ஒண்ணு சொல்றேன் இனி இந்த கல்யாணப் பேச்சே எடுக்காதீங்க என் வாழ்க்கைல திருமணம் என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்ல "என தன் மன ஆதங்கத்தை கொட்டித் தீர்த்தாள்.

அப்பொழுது அங்கே ஒரு விபத்தில் தாய் தந்தையை இழந்த குழந்தைகளான தனது சகோதரியின் பிள்ளைகள் இருவரும் வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை கண்டாள். அவர்கள் அருகில் சென்ற சிபாயா இனி இவர்கள் தான் என் உலகம் வாழ்க்கை இவர்களுக்காகவே நான் வாழப்போகிறேன் .தாய் தந்தையை இழந்த இக்குழந்தைகளுக்கு நான் தாயாய் இருந்து பார்த்துக்கொள்ளப் போகிறேன்" என்றவள் கண்களில் பனித்த கண்ணீர்த்துளிகளை துடைத்தவாறே அக்குழந்தைகள் இருவரையும் அணைத்து உச்சி முகர்ந்துகொண்டாள் சிபாயா. வந்தவர்கள் மௌனமாய் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர்.



# நினைவிருக்கிறதாடா

*ஷாமென் நிஸாம்டீன்*

மேகங்கள் இடித்துக் கொண்டு
பூமாலைகளாய்ச் சாரல்கள்
தூவிய போதில் தான்
நாம் சந்தித்தோம்..

என்னைக் கண்டதில்
உன் உடை நனைந்தது
உன்னைக் கண்டதில்
என் உள்ளம் நனைந்தது..

என் கண்களையே
ஏன் பார்க்கிறாய் என்று கேட்டால்
உன்னுள்ளம் என்று
வாலியின் வசனம் பேசினாய்..
இருந்தாலும் எனக்கு ரொம்பப்
பிடித்திருந்ததே..

கடற்கரையோரம்
கைகள் கோர்த்து
தூர எழும்பி வந்துத்
தொட்டுச் செல்லும்
அலைகளைப் பார்த்தவண்ணம்
ஒன்று கேட்டேனே
நினைவிருக்கிறதா உனக்கு..?

இந்த அலைபோலத் தான் நீயா
எனக் கேட்க
எப்படி அதிர்ந்தாய்..?
பின் ஒருமணி நேரம்
நீ பேசாத பொழுது எனக்கு
ஒரு யுகமானது

இல்லை இல்லை
உன்னை நம்புகிறேன் மடையா
எனக்
கன்னந்தொட்டுக் கிள்ளினால்
நீ பதிலுக்கு என் கன்னந்தொட்டது
இப்போது நினைத்தாலும்
எனக்கு வெட்கம் தான்.

உன்னுடன் பழகிய நாட்களில்
ஏன் முகத்தழகு செய்யும் பசை
வாங்கவில்லை எனக் கேட்டாள் தோழி
உன் காதல் மட்டுமே போதுமடா
என்னை அழகாக்க..

நண்ப நண்பிகள் புடைசூழ
சிலவருடம் முன்பு
பதிந்தோம் நம் அன்பை
திருமண பந்தமாக..
அப்பொழுது உன் கண்ணால்
என்னை நீ தீண்டியது
இப்போதும் சிலிர்க்கிறது..

கல்யாண வாழ்க்கையில்
காதலெல்லாம் அடிபடாதுடா..
சின்னச் சின்ன ஊடல்கள்
கோபங்கள் நான்
கொள்ளத் தான் செய்வேன்
நீ என்னை சமாதானப் படுத்தும்
முயற்சிகள்
ரொம்பவே பிடிக்குமடா

இப்போது கூட
நான் எதற்கோ ஊட
நிஜமென நம்பி
வெளியில் சென்றிருக்கிறாய்..
சீக்கிரம் வாடா..
எனக்குப் பசிக்கிறது..
அப்படி சீக்கிரம் வந்தால்
நான் உனக்கு
ஒரு நல்லசேதி தருவேனே..

போராடி தோற்பதும்
வாழ்வின் ஒரு
அங்கம் என்பதை
மறந்துவிடாதீர்கள்...!




**'மாணவர்களை மதிப்பதில் தான் கல்வியின் இரகசியம் அடங்கியுள்ளது'** என்ற எமர்சன் கூற்றுக்கிணங்க நகர்ப்புற பாடசாலைகளில் கல்வியினை கற்கும் மாணவர்களிடம் பாடசாலை மையக்கல்வியின் நிலை எந்தளவு பயனுடையதாக அமைகின்றது என்பதனையும் அதனை அம் மாணவர்கள் எவ்விதம் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதனையும் ஆராயும் போது, நகர்ப்புறங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடசாலை மையக்கல்வியில் நாட்டம் செலுத்துவதில் நூற்றுக்கு 50% வீதமானோர்களே காணப்படுகின்றனர். அவற்றுக்கான காரணம் நகர்ப்புறங்களில் காணப்படும் மேலதிக வகுப்புக்களை இம் மாணவர்கள் நாடிச் சென்று கற்பதனாலும் பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களே மேலதிக வகுப்புக்களை நடாத்துவதனாலும் மாணவர்கள் பெரும்பாலும் பாடசாலை மையக் கல்வியினை நாடிச் செல்வது மிகக் குறைவாகவே காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக இப் போக்கினை உயர்தர மாணவர்களிடையே அதிகம் காணக்கூடியதாக உள்ளது.

கிராமப்புற பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களை பொறுத்தவரையில் அம்மாணவர்கள் பெரும்பாலும் பாடசாலை மையக் கல்வியினையே நம்பிக் கற்கின்றனர். அவற்றிலும் கிராமப்புறங்களில் கல்வி கற்கும் சகல தரமாணவர்களும் பாடசாலை மையக்கல்வியினை நாடிக் கற்பதுடன் கிராமப்புற பாடசாலைகளில் நடைபெறும் மேலதிக வகுப்புக்கள் போன்றவற்றுக்கு விருப்புடனும், ஆர்வத்துடனும் சமூகமளிப்பதை அவதானிக்கலாம். அதேவேளை இப்பகுதியில் கற்பிக்கின்ற ஆசிரியர்களும் மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்காதவிடத்து அம் மாணவர்களை நாடிச் சென்று அவர்களின் பிரச்சினைகளை கண்டறிந்து இம்மாணவர்கள் மேலும் தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை செய்து வருவதினை கண்கூடாகக் காணலாம்.

இவை போன்ற செயற்பாடு நகர்ப்புறங்களில் அரிதாகவே காணப்படுகின்றது. அவ்விதமான ஏழ்மை நிலையிலுள்ள மாணவர்களை அறிந்து பாடசாலை நிர்வாகம் மாணவர்களுக்கு உதவுகின்ற போதும் நகர்ப்புற மாணவர்கள் அவ்வுதவிகளை உதாசீனப்படுத்தி கல்வியின் மீது நோக்கமின்றி வேறுபல விடயங்களில் ஈடுபடுவதினையும் அவதானிக்க முடிகிறது. அது மட்டுமன்றி மனித உரிமைச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாலும் நகர்ப்புற பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் அசமந்த போக்காகச் செயற்படுகிறார்கள்.

ஆகவே பெறுபேறுகளின் அடிப்படையில் பார்க்கின்ற போது நகர்ப்புற பாடசாலை மாணவர்களை விட கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் பெறுபேறுகளே சிறப்பானதாக காணப்படுகின்றது. கல்வியின் நோக்கத்தினையும் அதன் அவசியத்தையும் பயனையும் அறிந்தவர்களாக கிராமப்புற மாணவர்கள் திகழ்கின்றார்கள். நகர்ப்புறங்களில் கல்வியினை பணத்திற்காக வியாபாரம் செய்யும் வணிகச் செயலாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்நிலை மாறி பாடசாலை மையக்கல்வி கட்டாயப்படுத்த படவேண்டும். அதற்காக புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி மேற்கொள்ளப்படுமானால் மாணவர்கள் பாடசாலை மையக்கல்வியின் மீது நாட்டத்தை செலுத்தி சிறந்த பயனை பெறுவர். என்பது உண்மயானதே......!

B.நிஷாந்தி(B.A)
ஆசிரியர் (M.A. Tamil) Khairiya Girl College

கடந்து சென்றவை அனைத்தும் பாதைகள் அல்ல.
நாம் கற்றுக் கொண்ட பாடங்கள்




இப்போது தான் தூங்கினேன்
அலாரம் அடிக்கிறது...
கண்கள் மூடும்போதே
இங்கே விடிந்தும் விட்டது...

இன்னும் கொஞ்சம் தூங்க
கெஞ்சும் விழியிடம்
இருக்கின்ற வேலைகளை
பட்டியல் இடுகிறேன்...

விடியலின் கடமைகள்
எல்லாம் முடித்து
விரைவாய் சமைக்க வேண்டும்...
சாப்பாடும் கட்ட வேண்டும்..

சமாளித்து ஆக வேண்டும்
சண்டைகள் கூடாது...
குழந்தைகளின் தேவைகளும்
குறித்து வைத்து செய்ய வேண்டும்...

பஸ்ஸில் தான் இப்போது
வேலைக்கும் போக வேண்டும்
கூட்டத்தில் முட்டி மோதி
போர் செய்தும் ஆக வேண்டும்...

கணவனும் பிள்ளைகளும்
புறப்பட்டு போனதும்
நானும் புறப்பட்டு
வரிசைக்குப் போக வேண்டும்...

எரிவாயு மண்ணெண்ணெய்
எல்லாமும் வாங்க வேண்டும்...
இத்தனையும் செய்வதோடு
வேலைக்கும் போக வேண்டும்

கணவரும் இரண்டு நாள்
பெற்றோல் வரிசையில்
என்பதால் கோபத்தில்
சிடுசிடுக்கிறார்....

வீட்டுச் செலவுகளை
குறைத்துக் கொள்ள வேண்டும்
ருசியேதும் குறையாமல்
சமையலும் செய்ய வேண்டும்....

பொறுப்புள்ள பெண்ணாக
விரைவாக எழுந்து கொண்டேன்...
இந்த நாளின் சவால்களை
இனிதாக தீர்ப்பதற்கு....






# சித்திரப் PEN



ஹூமைரா அல் அமீன்



ஹக்கீமா அமீனுத்தீன்



